THE MODERN TAMIL-TAMIL DICTIONARY

BY

DIWAN BAHADUR S. BAVANANDAM PILLAI, I.S.O.,
F.R.H.S. (Lond.), M.R.A.S. (Lond.)
SHERIFF OF MADRAS,
CHAIRMAN, BOARD OF STUDIES IN TAMIL,
UNIVERSITY OF MADRAS,
FOUNDER OF 'BAVANANDAM ACADEMY'
AND
Author and Editor of several Tamil Classics.

WITH MANY USEFUL APPENDICES
CONVENIENT FOR READY REFERENCE

MACMILLAN & CO., LIMITED
MADRAS, BOMBAY, CALCUTTA AND LONDON
1925

தற்கால

தமிழ்ச்சொல்லகராதி

திவான்பஹதூர் ச. பவானந்தம்பிள்ளை அவர்கள் ஐ. எஸ். ஒ.,
எப். ஆர். எச். எஸ். (லண்டன்), எம். ஆர். ஏ. எஸ். (லண்டன்).
சென்னை நகர் ஷெரீப்,

சென்னை, சர்வகலாசங்கத்தின் தமிழ்க்கல்விச்சபை அக்கிராசனாதிபதி;
பேராசிரியர், நச்சினார்க்கினியர் முதலியோர் உரையுடன் கூடிய
தொல்காப்பியம், நக்கீரனார் உரையுடன் கூடிய இறையனார்
ரகப்பொருள், அமிர்தசாகரனார் இயற்றியதும் விருத்தி
யுரையுடன் கூடியதுமாகிய யாப்பருங்கலம்,
விளக்க உரை முதலியவற்றுடன் கூடிய
பேரகத்தியத்திரட்டு முதலிய
நூல்களின் பதிப்பாசிரியர்;
'பவானந்தர்' கழக ஸ்தாபகர்.

மாகமில்லன அண்டு கம்பெனி, லிமிடெட்
சென்னை, பம்பாய், கல்கத்தா, லண்டன்
1925

PREFACE

In his learned 'Dravidian Comparative Grammar' the Rev. Dr. Caldwell writes that 'The Tamil language is undoubtedly the oldest, richest, and most highly organized of the Dravidian languages.'

The Rev. Dr. Winslow observes that 'In the sixth or seventh century before Christ, at the head of a colony of holy ascetics, we find the celebrated Agasthya called the Father of Tamil. He is said to have learned it from Skanda, the second son of Siva. We are not to suppose that he formed the Tamil alphabet. The words எழுத்து, letter, and சுவடி, book, are original Tamil; and shew that such existed before there were any innovations from Sanskrit, which Agastya himself commenced. He formed the first Tamil grammar. It contained 12,000 sutras. All is now lost except some fragments preserved by Tholkappyan in a grammar which bears his own name. Agastya wrote voluminously both in Tamil and Sanskrit.'

In another place he writes 'It is said that the language of the mountaineers of Raja Mahal abounds in terms identified with Tamil and Telugu. What is more singular, the names by which the ivory, apes, peacocks, conveyed by Solomon's ships of Tarshish were known, are the same with those still used in Tamil; seeming to imply that the traders visited Ceylon or India, and obtained with these novelties their Tamil names Danta, Kapi, and Togai as found in the Hebrew Bible.

'The Tamil is not a vulgar dialect. Before the principal basis of the English had a written character, it was a highly polished language. Its name signifies sweetness, and it is not without its claim to euphonic charms and "linked sweetness."

'Unlike several of the vernaculars of India, it is not, as some have supposed a daughter of the Sanskrit. Its alphabet differs not only in character but in sound and is more limited. Its grammar, though conformed to the Sanskrit, as

far as the genius of the language would allow, is still very different. It has no article, no relative pronoun, no dual number, no optative mood. It differs in its numerals, in many nouns, verbs, and adverbs and in technical terms in grammar. In the declension of its nouns, the conjugation of its verbs and the arrangement of its sentences, it more resembles the Latin.'

While nearly all the vernaculars of India have been greatly enriched from the Sanskrit, that wonderful language has condescended to borrow even from the Dravidian group, of which the Tamil is the oldest, and the principal. Dr. Caldwell in his learned 'Dravidian Comparative Grammar' instances 31 words in Sanskrit taken from Dravidian tongues, and 25 borrowed by both from some common source. He is of opinion that the Sanskrit derived its cerebral consonants from the Dravidian.

It is evident that there was an early literature in Tamil independent of Sanskrit; and now, within certain ranges of thought, omitting terms of art, science, religion, in a great measure, and certain abstract forms, we may write in pure Tamil, as in English we may in pure Saxon. In fact the nearer we approach the Sen-Tamil the less we need Sanskrit. Dr. Caldwell has well said, 'The Tamil the most cultivated, *ab-intra*, of all the Dravidian idioms, can dispense with the Sanskrit altogether, if need be, and not only stand alone, but flourish, without its aid.' It is certain that Tamil could do without Sanskrit much better than English without Latin. In many respects, it would have been well, if the aboriginal tribes at the South had been left without Aryan civilization. Undoubtedly the Brahmins improved their dialects, and taught them much of useful art and science; but by bringing them under the influence of the Puranic system of idolatry, they shackled their intellects, perverted their moral sense, and bound them fast to error by the chains of caste. The reason why Tamil is more independent of Sanskrit than the Northern languages, and even than the other Dravidian tongues, is, that it has not been left, like those, principally to the cultivation of the Brahmans. The '*Kural*' of Tiruvalluvar, or sacred Pariah priest, written perhaps in the ninth century A. D., and containing 1,330 distichs, is regarded as one of the finest

productions in the Tamil language; but its author was a Pariah. A reputed sister of his, called Auveiyar, or Matron, wrote brief epigrammatic moral verses, of much merit, now used in all the Native Schools. The *Chintamani* 'a brilliant romantic epic' of 15,000 lines, was written, probably in the tenth century, A.D. by a Jaina; and the *Nannul*, a High Tamil Grammar of great value, a little later, also by a Jaina. The *imitation*, not translation, of the *Ramayana*, was composed about the eleventh century A.D., by Kamban the son of a king and not of the priestly tribe. His production, consisting of 12,016 stanzas, in six books, is considered by learned Tamilians as superior to the original.

The Tamil has certainly been greatly enriched from the Sanskrit, and has borrowed from it some letters, rather, however, as a convenience than necessity. There is no reason for rejecting this aid, within proper bounds. By it, the language has become copious, as before. It was precise, philosophical, and energetic. A native author of repute, well versed in English, as well as his own vernacular, has said, adopting the words of Mr. Taylor before mentioned, '*it is one of the most copious, refined, and polished languages spoken by man.*'* This Author has added, what may admit of doubt, 'few nations on earth can perhaps boast of so many poets as the Tamils.' As, however, all their earlier literature was in poetry, even Dictionaries and Grammars, and works on Medicine, Law, Architecture and Theology, the number of poets, so called, must have been great. The Chola, Chera, and Pandyan kings of Southern India, especially the latter, from the sixth century before Christ, to the fourteenth century after, were liberal patronizers of the Poets. A college of literati, called the Madura *Sangam*, was long in existence. The sunshine of royal favor brought many poets into light, if not into life. Their works were mostly destroyed by the Mohammedans in the early part of the fourteenth century. It is not perhaps extravagant to say, that, in its poetic form, the Tamil is more polished and exact than the Greek, and in both dialects, with its borrowed treasures, more copious than the Latin. In its fulness and power it more resembles English and German than any other living language.

* Tamil Plutarch by Mr. Simon Casie Chitty, Preface.

as இடையூறு, மெய்ப்பை (=சட்டை), அடிபுதையரணம் (=செருப்பு) all of which are found in Pattupattu (பத்துப்பாட்டு), and as கற்பலகை, எழுதுகோல், நாற்காலி, மண்ணெண்ணெய், மின்சாரம் which have now become current in the language. But many of the ideas now claiming expression in our language are so novel in character that they cannot be *adequately* and *intelligibly* expressed by new expressions coined within the mint of our language. Further, the spoken dialects, we find, have not been at any pains to coin new-words to express these new ideas, but have freely borrowed the foreign words. This behaviour of the spoken dialects is a clear indication of the attitude of our language in respect of borrowing foreign words. And now our duty is to recognize this attitude of the language and to adopt the method of the spoken dialects; that is to say, we have to admit freely these foreign words into the literary language. But we have to take care that in the rush for admission we do not allow into the language any and every word, but give the full rights of citizenship only to those words that have been long with us and that have established their claim for citizenship by their inevitabe necessity and indispensable usefulness in the republic of Tamil letters. To-day, about two hundred Urdu words and half as many English words await admission into the Tamil language. A careful analysis of a few of these given below will show clearly that all of them are highly indispensable to us, and it is not possible to carry on any decent conversation or transact any daily business without them. Of words relating (1) to *Law*, we have:—*cutcherry*, *vakeel*, *jamin*, *asal*, etc., from Urdu sources; and *judge*, *magistrate*, *appeal*, etc., from English: (2) relating to *Revenue*:—*tahsil*, *munsif*, *sirkar*, etc., from Urdu; and *Collector*, *clerk*, etc., from English: (3) relating to *arts and civilization*:—*rail*, *ticket*, *station*, *motor*, etc., from English.

Alphabetic Reforms

In this connection, it may be asked:—Does not the introduction of foreign words into our language mean also the introduction of foreign sounds, and consequently the introduction of new symbols into the alphabet? For example, if '*fiddle*' or '*funnel*' is to be borrowed from English, we should borrow also the 'f' sound, and as

there is no symbol for it in the alphabet, a new one will have to be introduced. This opinion, we presume, is based on an utter ignorance of the phonological methods adopted by languages as regards loan-words. Words, when introduced from one language into another, undergo a peculiar modification quite in accordance with the phonological principles of the language by which they are borrowed. They are reshaped and remodelled by the people who adopt them, and are so entirely assimilated to their language that they are finally indistinguishable from natives. But if the borrowing be of a pedantic kind, and introduced by the scholar, the word continues to live in the language only as an outcast within inverted commas; and even that occurs only in the written language. If it is to become a permanent member of the language, it has, of necessity, to undergo the phonological modification described above; and unless and until it has been subjected to this phonological metamorphosis it can never hope to find a permanent footing within the fold of the language into which it is newly introduced. Take, for example, the word '*fiddle*' and '*funnel*' given above. We who are educated many pronounce the 'f' in these words, but the people—the common folk—who have borrowed them say only '*piddle*' and '*punal.*' We may, if we want, introduce a symbol for 'f' in our alphabet, but be sure we can never compel the people to pronounce the 'f' correctly. Look at the words that English has borrowed from our language, and examine if they are pronounced by the English as we ourselves pronounce them: 'அரிசி' is in English *rice*; 'தஞ்சாவூர்' is '*Tanjore*' 'சோழ மண்டலம்' is '*Coromandal.*' Why should the English thus contract and distort our words? Have they no letters in their alphabet to represent these sounds? Consider again, the words we have borrowed from Sanskrit. We may perhaps think that these might be exempt from the operation of this phonological law, because Sanskrit words have for us such holy associations and conjure up in us such fascinating religious and moral pictures that we should consider it a sacrilege to mutilate them and adopt them in any altered form. But what we actually find is that even these words have had to pass through the process of phonological changes: Sanskrit 'கர்ப்பூரம்' is in Tamil 'கர்ப்பூரம்' 'அம்பிகம்' is 'அழுது' 'கோகிலம்' is 'குயில்.' Hence

any reform, which does not take into consideration this primary principle of phonology concerning loan-words, is doomed to fail, or at least is fated to make the language artificial and lifeless. We should, therefore, take the loan-words as we find them used by the people, as they are modified in the current of our language wherein their pricking points are worn off, their angularities removed, and their surface is polished.

The Dialects

We wish to answer the question that is constantly put to us by some of the men who have a special partiality for dialectal forms of a language. They ask:—Why should we take so much trouble over a literary dialect and try to bring it down from its classic heights to the popular level? Why should we not take a spoken dialect and raise it to the dignity of the Standard Speech? The answer is very easy. The Standard Language is in every country the Language of the respectable portion of the community, of the Court, of the Nobility, of the Parliament and of the University. But in a country like India where the vernaculars are not the language of the rulers, are not the medium of instruction in colleges, and are not used by influential and fashionable men while lecturing from platforms, or when writing to a newspaper, it is the literary dialect—the dialect of the poets and of the best prose writers that becomes naturally the Standard Language. Again in the circumstances described above the vernaculars are found spoken only in provincial dialectal forms and none of them command the respect that is generally conceded to the literary speech. Thirdly, each dialect has peculiarities of its own which are not found in others; and a Standard Speech, it should be noted, is not a regional dialect but is one of general currency, and hence should possess only those features that are common to all the dialects. Fourthly, the spoken dialects are subject to changes more than the literary speech; and a Standard Language that is based on a spoken dialect is likely to change too soon and be defeated in the very purpose of its existence. For, a Standard Language, though it is also liable to change, is yet more conservative than merely spoken dialects, and does not

adopt a change till it is proved to be essential to its welfare by the common experience of all the dialects. Hence, for the reasons given above and in the peculiar circumstances in which our vernaculars are situated, it is not possible to elevate spoken dialects to the dignity of a Standard Language.

The Standard Speech

The only course open to us, therefore, is to vitalize the literary form with the essence of life drawn from living usage, so that the new graft may combine in itself the dignity and correctness of the literary speech and the power, vitality and simplicity of the spoken dialects. In short, our work is to create a 'middle style' — 'something between the grave stately diction of formal writing and the free and easy speech of every day, a style suited, therefore, for addressing a wide circle of readers on a wide variety of subjects, unpretentious, admirably clear, dignified but never stilted.'

The following resolutions adopted by the Syndicate of the University of Madras* were also given effect to as far as possible in the appendices to this Dictionary :—

Resolved—

I. (*a*) That the borrowing of foreign words be allowed in Tamil—

Firstly, in respect of the names of such things and objects as foreign commerce and intercourse have brought to the knowledge of the Tamil people ;

Secondly, in respect of such political institutions and offices and officers as are non-Indian in origin and are due to the influence of an extraneous civilization ;

Thirdly, in respect of all such special terms as are connected with religions other than Hinduism ;

Fourthly, in respect of all such special terms as are related to modern science and modern thought, which are obviously new to Tamil literature ;

---

* *Vide* report of the 'Tamil Composition Committee' appointed by the Syndicate of the University of Madras of which I was a member.

(*b*) And that borrowing from foreign source be discouraged in all cases where already current words exist in the Tamil language to express the intended ideas fairly satisfactorily.

Note.—In this resolution borrowing from Sanskrit is not looked upon as borrowing from a foreign source.

II. (*a*) That, in the matter of writing such borrowed words as have not been put into the current phonetic mould of the language through the influence of popular usage, the requisite symbols be borrowed from the *Grantha* alphabet, it being provided that conjunct consonants and the syllabic combinations of consonants with vowels are written according to the system adopted in the Tamil alphabet;

(*b*) And that, in the case of foreign words not already appropriated by Tamil, it be further recommended that, wherever clearness requires accurate transliteration in respect of the alphabetic sounds represented by the English letters 'f' and 'z', the symbols ஃ and ஸ, which are very slightly modified forms of the Tamil ஃ and the *Grantha* ஸ may be used for the purpose.

III. That slang and other similar irregular forms of expression, which are either the result of violations of accepted rules of grammar or are produced by means of contractions or other modifications due to hurry, indifference and ignorance, be declared to be unacceptable in dignified prose composition.'

Principal weights and measures of the world, signs and symbols used in writing and printing, specimen of a corrected proof-sheet, showing the application of the above signs and various other useful informations form a unique feature of this Dictionary which contains more than 30,000 words with their meanings.

The *Modern Tamil-Tamil Dictionary* may be described as a general dictionary of the Tamil Language, literary, scientific, technical, and etymological, occupying a position intermediate between a mere school dictionary and a bulky lexicon, and forming a handy work of reference for all classes of readers. While its vocabulary embraces all words likely to be met with by the ordinary inquirer, the

different meanings are given with fulness, and care has also been taken to express them with adequate clearness and precision. Extensive and varied appendices have been added by way of supplementing the information contained in the dictionary proper. The new articles naturally comprise a large number of scientific and technical terms, many of them recently introduced, as well as a variety of other words that the spread of education and the multiplication of books and periodicals have brought into more or less common use. The appendices, as has already been stated, add to the attractiveness as well as to the value of the work. Altogether, The *Modern Tamil-Tamil Dictionary* may claim to be second to no work of reference of similar scope.

BAVANANDAM ACADEMY,
NEWTON HOUSE, VEPERY,
Madras, January, 1925.

S. B. P.

முகவுரை

இவ்வுலகின்கண் பற்பல மொழிகள் வழங்கப் பெறுகின்றன. அவற்றுள் சில ஒலிவடிவினைமட்டும் பெற்றிருக்கின்றன. பல ஒலிவடிவோடு வரிவடிவினையும் அடைந்துள்ளன. நம் தமிழ் மொழியோ ஒலிவடிவு, வரிவடிவு இரண்டினையும் பெற்று நிலவுகின்ற மொழிகளி லொன்று. தமிழ் மொழியின் வரலாற்றைக் கூற இரண்டு புராணக் கூற்றுக்கள் உள. அவற்றுள்,

(1) அகத்தியமுனிவர் காசியம்பதியிலிருந்த வடமொழி வாணரோடு மாறுபட்டு, அமமொழிக்கு இணையான மற்றொன்றினை அருளுமாறு முருகக்கடவுளை இரப்ப, அக்கடவுள், இவ்விரப்பு அறிவின் பாலதாகலின் இவற்கருள் செய்தும் எனத் திருவுளங்கொண்டு, ஓர் இடத்தைச் சுட்டி, "அன்ப, அப்மூலைக்கண் உள்ளது; சென்று கொள்க" எனலும் முனிவரர் விரைந்தோடி "தமிழ்! தமிழ்!!" எனக் கூவி அவ்வோலைச சுவடிகளை வாரிக்கொண்டு வெளிப்போந்து, முருகக்கடவுளை வணங்கி விடைபெற்று, தமிழ் மொழியை இவ்வுலகின்கண் நிலவ வைத்தனர் என்பதொன்றி. இதனை அடியில் வருவன வற்றுல் அறிக

"அகத்தியனுக்குத் தமிழைச் செவியறிவுறுத்த செந்தமிழ்ப் பாமா சாரியனுகிய அறுமுகக்கடவுள் வரைப்பு."

(சிவஞான முனிவர்—தொல்காப்பியப் பாயிர விருத்தி)

ஆருமறையா கமமங்க மருங்கலனு றெரிந்த
வகத்தியனுக் கோத்துரைக்கு மருட்குருவாங் குருவை.

(சிவஞான சித்தியார்—பரபக்கம்)

பழநித்தலபுராணத்தும் இது கூறப்பட்டுள்ளது. வேறு பல ஆதாரங்களுமுள.

(2) சிவபெருமான் பார்வதியாரைத் திருமணங்கொண்ட காலத்து, முனிவர் அனைவோருந் திரண்டு, வடக்கின்கண்

ணுள்ள இமயமலையையடைதலும், வடதிசை பொறையாற்
றுது தாழவும், தென்றிசை பொறையின்றி மேலெழவுங்கண்ட
பெருமான் அகத்தியரை நோக்கி, "நீ விரைந்து சென்று,
தென்றிசைக்கண்ணுள்ள பொதிகைவரையில் தங்குக" என
லும், முனிவர் அவ்வருண் மொழியைச் சிரமேற்கொண்டு,
"எம்பெருமானே! தமிழ் மொழி தலை சிறந்து விளங்கும்
அத்திசைக்கண் அடியேன் சென்று வாழ்ந்திருத்தல் எங்ங
னம்"? என்று விண்ணப்பஞ்செய்து, அம்மொழியைச் சிவ
பெருமான் அருளப்பெற்று, சந்தனப்பொதியையடைய, பூமி
சமனுறக்கண்டு மகிழ்ந்து, ஆண்டேவதிந்து, தமிழ் மொழியை
நன்கு ஆராய்ந்து இலக்கணமும் செய்து வைத்தனர் என்பது
மற்றொன்று. இதனை அடியில் வருவனவற்றால் அறிக

நின்றவனை வந்தெடி யோனடி பணிந்தான்
அன்றவனு மன்பொடு தழீஇயழுத கண்ணன்
நன்றுரைசெய் யென்றுபல நல்லுரை பகர்ந்தான்
என்றுமுள தென்றமி ழியம்பியிசை கொண்டான்.

(கம்பராமாயணம்– அகத்தியப்படலம்)

ஆதரஞ்சேர் குறுமுனியு மெனையொன் றுக்கி
அருள்செய்தா யருள்செய்த படியே செய்வல்
ஒதருந்தென் பூமிதமிழ்ப் பூமி யென்பார்
ஒண்டமிழிற் குரியவெலா மடிமைக் கிங்கே
போதமுற வறிவித்தல் வேண்டு மென்று
போற்றுங்கா லெழுத்துச்சொற் பொருண்மூன் னான
நீதியுடைச் சூத்திரங்க ளறியும்வண்ணம்
நெறியின்க ணறிவித்தாய் நேசங் கூர்ந்தே.

(பழைய திருவிளையாடல்–குறுமுனிக்குத் தமிழுரைத்தது)

பண்டொரு போது வெள்ளிப் பனிவரை யிடத்துன் பாங்கர்ப்
புண்டவழ் குலிசக் கோமான் பூமகன் மாயப் புத்தேள்
அண்டருஞ் சனக ஞதி யருந்தவர் பிறரு மீண்டிக்
கொண்டன ரிருந்தா ரிந்தக் குவலயம் பொறுதி மாதோ.

தாழ்ந்தது வடகீ ழெல்லை யுயர்ந்தது தென்மேற் கெல்லை
சூழ்ந்தது கண்டு வானோர் தொழுதுனைப் பரவி யைய
ஊழ்ந்திடு மரவம் பூண்டோ யொருவனின் னெப்பா னங்கே
வாழ்ந்திட விடுத்தா லிந்த வையநீர் நிற்கு மென்றார்.

யைத்தலைப் புரட்டு முந்நீர்ப் பௌவமுண் டவனே யெம்மை
யொத்தவ னனையான் வாழ்க்கைக் குரியளா கியவு லோபா
முத்திரை யிமவான் பெற்ற முகிழ்முலைக் கொடியொப் பாளென்
றத்திரு முனியை நோக்கி யாயிடை விடுத்தா யன்றே.

விடைகொடு போவா ளென்றை வேண்டிஞ னேகுந் தேய்ந்
தொண்டபெறு தமிழ்நா டென்று சொல்லுப வந்த நாட்டின்
இடைபயின் மனித்த ரெல்லா 'மின்றமி ழாய்ந்து கேள்வி
உடையவ ரென்ப கேட்டார்க் கூத்தர முரைத்தல் வேண்டும்.

'சித்தமா சகல வந்தச் செந்தமிழியனூ றன்னே
அத்தனே யருளிச் செய்தி யென்றன னனையான் றேற
வைத்தனே முதனூ றன்னே.....
(பரஞ்சோதி திருவிளையாடல்–தேரனுக் கிலக்கண மு ரைத்த படலம்)

பின்வரும் செய்யுட்களும் அகத்தியமுனிவர், திரிபுரமெரித்த விரிசடைக் கடவுளிடத்துத் தமிழ் கற்றதைக் காட்டும். அவை,

ஆதியிற் றமிழ்நூ லகத்தியர்க் குணர்த்திய
மாதொரு பாகனே வழுத்துதும்
போதமெய்ஞ் ஞான நிலம்பெறற் பொருட்டே. (சேனாவரையர்)

தழற்புரை நிறக்கடவுள் தந்ததமிழ் தந்தான். (கம்பர்)

விடையுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனூள்
வடமொழிக் குரைத் தாங்கியன் மலயமா முனிக்குத்
திடமுறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்
மடமகட்கரங் கென்பது வழுதிநா டன்றே.
(பரஞ்சோதி முனிவர்–திருவிளையாடல் நாட்டிப் படலம்)

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி யதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை யுலகமெலாந் தொழுதேத்துங்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனிற்
கடல்வலரப்பி னிதன்பெருமை யாவரே கணித்தறிவார்.
(காஞ்சிப்புராணம்–தழுவக்குழைந்த படலம்)

என்பன.

இக்கூற்றுக்களின் உண்மை எவ்வாறாயினும் தமிழ் மொழி அகத்தியனுருக்கு முன்னரே இந்நாட்டின்கண் நின்று நிலவிற்று என்பது பொய்ம்மையாகாது.

இது நிற்க, அகத்திய முனிவரே தமிழ் மொழியைப் படைத்துத் தந்தனர் என்று கூறி, "தமிழெனு மளப்பருஞ் சலதி தந்தவன்" எனக் கம்பரும் "அகத்தியன் பயந்த செஞ் சொலா ரணங்கு" எனும் வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தரு வாரும் கூறியவற்றைப் போன்ற மேற்கோள்களைக் காட்டுபவர் ஒரு சாரார். அவர் வடமொழிக்கண்கொண்ட பேரபிமானமும், சரித்திர ஆராய்ச்சியின்மையுமே அதற்குப் போந்த காரணங்களாம். இனி, அவர் கூற்றுப் போலியாமாறு காட்டுதும். அகத்தியனார் வடமொழிவாணரோடு மாறுபட்டு முருகக்கடவுளே வேண்ட, அப்பெருமான் ஓரிடத்தைச் சுட்டி அதனை எடுக்க என்றார் என்பவாகலின், அம்மொழி முன்னரே சேமத்தில் இருந்ததென்பதும், சிவபெருமான் தென்றிசையிற் செல்க என்புழி, அகத்தியனார், 'ஐய! ஆண்டு வழங்கும் தமிழ் மொழியை அடியேன் சிறிதும் அறியேனே' என்றிரந்து, அம்மொழியைச் சிவபெருமான் அருள்பெற்றனர் என்பவாகலின், அம்மொழி அகத்தியனுருக்கு முன்னரே இந்நாட்டின்கண் வழக்காற்றிலிருந்ததென்பதும் வெள்ளிடை மலைபோல் விளங்குகின்றது. அகத்தியம் முத்தமிழிலக்கணமும் அடங்கியது. பன்னீராயிரம் சூத்திரங்க ளடங்கிய தென்றல் அதன் பெருமையை என்னென்று கூறுவது. அத்துணைப் பெரிய இலக்கணநூல் உலகந்தோன்றியது தொடங்கி இதுகாறும் யாதொரு பாஷையிலும் இருந்ததாக அறியக்கூடவில்லை. அந்த இலக்கணநூல் இயற்றப்படுவதற்கு முன்னர், இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழ் இலக்கியங்களும் எவ்வளவு வளர்ச்சியை அடைந்திருக்கவேண்டும்!

இவையனைத்தும் ஒருவாறுக, அகத்தியனாரே தம் இலக்கணத்துள்,

> இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
> எள்ளின் றுகில் எண்ணெயும் இன்றே
> எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
> இலக்கி யத்தினின் றெடுபடும் இலக்கணம்"

என்றாகலின், அகத்தியனார் தாம் இலக்கணம் செய்வதன் முன்னரே தமிழ்மொழி இந்நிலத்தில் நின்று நிலவியது என் பது போதரும். மற்றும் அகத்தியர் தமிழ்மொழியை அவ லோகிதமுனிவர்பாற் கற்றுணர்ந்தாரென்னும் பௌத்தர் கூற் றும் இதனை வலியுறுத்தும்.

அகத்தியமுனிவர் தென்னாடுவந்தகாலம் எது என்றதை ஆராய்வோம். வால்மீகிமுனிவ ரியற்றிய இராமாயணத்தில், ஸ்ரீராமன் அரணியவாசம் செய்யப்புகு முன்னரே, அதாவது இராம ராவண யுத்தத்திற்கு முன்னரே, அகத்தியமுனிவர் தென்னாட்டில் இருந்தனர் என்பது சொல்லப்பட்டுள்ளது. வால்மீகி இராமாயணத்தை ஆதிகாவியம் என யாவரும் கூறுவர். அதாவது இராமாயணம் செய்யப்படுவதற்குமுன் சமஸ்கிருத பாஷையில் சுலோகங்களே இருந்ததில்லை என்பதாம். சுலோ கமே இல்லாதிருந்த தென்பதனால் காவியம் இல்லை என்பது வெளிப்படை. ஆதலின் வடமொழியில் வால்மீகமுனிவரால் "வாங்கரும்பாத நான்கா" வகுக்கப்பட்ட சுலோகமும் காவிய மும் ஏற்படுதற்கு முன்னரே அகத்தியர் தமிழ் நாட்டின்கண் வந்து தங்கினர் என்பது நன்கு விளங்குகின்றது. கிஷ்கிந்தா காண்டம் நாற்பத்தோராவது சர்க்கத்தில் சுக்கிரீவன் சீதா பிராட்டியாரைத் தேடிவருமாறு வானரவீரர்களுக்கு உத்தரவு கொடுத்தனனெனக் கூறுமிடத்தில் தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்களையும், தமிழிலக்கணம் வகுத்த அகத்திய மாமுனிவர் பொதிகையில் தங்கியதையும் கூறியிருப்பது இங் குக் கவனிக்கத்தக்கது.

இனி, தமிழாசிரியர் பலர் மூன்று தமிழ்ச் சங்கங்கள் இருந்தன என்பர். முதற்சங்கம் 4,440 யாண்டும், இடைச் சங்கம் 3,700 யாண்டும், கடைச்சங்கம் 1,850 யாண்டும் கடைபெற்றன என்பது அவர் கொள்கை. சங்க மிருந்து பெற் றதைச் சரித்திர ஆராய்ச்சிக்காரர் இற்றைக்குச் சுமார் 1,700 யாண்டுகளுக்குமுன் என்பர். சங்கங்களுக் கிடையிட்ட யாண்டு இத்தனை என்பது அறியக்கூடவில்லை. இவர் கொள் கைப்படி தமிழ்ச்சங்கம் தொடங்கியது இற்றைக்கு 12,000 யாண்டுகளுக்கு முன்னர் என்பதாம்.

இனி, அகத்தியர் தமிழ்மொழியை நன்குபயின்று, அம் மொழிக்கு வேண்டிய ஆதரவுகளைப் போதவும் தேடிவைத்த னர் என்பது பொய்ம்மையாகாது. ஆயினும் அகத்தியர் காலத் துக்கு முன்பு இருந்த இலக்கியம் ஒரு சிறிதும் இக்காலத்தே கிடைத்திலது. அகத்தியனாரும் இலக்கணமாத்திரம் செய் தருளினர் என்று கேள்விப்படுகின்றோம். இலக்கியம் யாதும் நமக்குக் கிடைத்திலது. சிற்சில வைத்திய நூல்கள் மட் டும் அகத்தியர் பெயரால் வழங்குகின்றன. அவற்றின் உண்மை அவற்றைக்காணும் நல்லறிவாளர் அகத்திற்கே புல னாகும்.

அகத்தியரது வரலாறு காலம் முதலியவற்றை வரையறுத் துக் கூறும்வகை சிறிதும் இல்லாதொழியினும், கர்ண பரம் பரையாகச் சிற்சில கதைகள் வழங்குகின்றன. அகத்தியர், இமயமலைக்கும் விந்தியமலைக்கும் இடையில் உள்ள ஆரிய வர்த்தம் என்னும் தேசத்தில் இருந்தவர். இவர் விதர்ப்ப நாட்டின் மன்னன் மகளாகும் உலோபாமுத்திரை என்பவளை மணந்து சித்தன் என்னும் ஒரு மைந்தனைப் பெற்றனர் என்ப. இவர் முதற்சங்கத்துப் புலவர்கள் ஐந்நூற்று நாற்பத்தொன்ப தின்மரில் ஒருவர் என்பதை இறையனாரகப்பொருளுரையிற் காண்க.

'தலைச்சங்கம் இடைச்சங்கம் கடைச்சங்கம் என மூன்று சங்கம் இரீஇயினர் பாண்டியர்கள். அவருள், தலைச்சங்க மிருந்தார் அகத்தியனாருந் திரிபுரமெரித்த விரிசடைக்கடவு ளும், குன்றமெறிந்த முருகவேளும், முதுசிவபூர் முடிநாகராய ரும், நிதியின் கிழவனுமென இத்தொடக்கத்தார் ஐஞ்ஞூற்று நாற்பத்தொன்பதின்மர் என்ப. அவருள்ளிட்டு நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப. அவர்க ளாற் பாடப்பட்டன எத்துணையோ பரிபாடலும், முதுநா ரையும், முதுகுருகும், களரியாவிரையுமென இத்தொடக்கத் தன. அவர் நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு சங்க மிருந்தா ரென்ப. அவர்களைச் சங்கமிரீஇயினர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோ னீறாக எண்பத்தொன்பதின்ம ரென்ப. அவருட் கவியரன்றேரீஞர் காடுவெட் பாண்டியரென்ப. அவர்

சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை யென்ப. அவர்க்கு நூல் அகத்திய மென்ப.'

'இனி; இடைச்சங்கமிருந்தார் அகத்தியனாருந் தொல்காப் பியனாரும் இருந்தையூர்க் கருங்கோழியும் மோசியும் வெள் ளூர்க்காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன்மாறனும் துவரைக்கோமானும் கீரந்தையுமென இத்தொடக்கத்தார் ஐம் பத்தொன்பதின்மரென்ப. அவருள்ளிட்டு மூவாயிரத் தெழு நூற்றுவர் பாடினரென்ப அவர்களாற் பாடப்பட்டன கலி யும் குருகும் வெண்டாளியும் வியாழமாலை யகவலுமென இத் தொடக்கத்தன என்ப; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல் காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுரா ணமு மென இவை; அவர் மூவாயிரத்தெழுநூற்றியாண்டு சங்கமிருந்தாரென்ப; அவரைச் சங்கமிரீஇயினார் வெண் டேர்ச்செழியன் முதலாக முடத்திருமாற னீறுக ஐம்பத் தொன்பதின்ம ரென்ப; அவருட் கவியரங்கேறினார் ஐவர் பாண்டிய ரென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கபாட புரத்தென்ப. அக்காலத்துப்போலும் பாண்டியனுட்டைக் கடல்கொண்டது.'

'இனிக் கடைச்சங்கமிருந்து தமிழாராய்ந்தார் சிறுமேதாவி யாரும் சேந்தம்பூதனாரும் அறிவுடையாரும் பெருங்குன் றூர்க்கிழாரும் இளந்திருமாறனாரும் மதுரையாசிரியர் நல்லந்து வனாரும் மருதனிளநாகனாரும் கணக்காயனார் மகனார் நக்கீரனாரு மென இத்தொடக்கத்தார் நாற்பத்தொன்பதின்மரென்ப. அவ ருள்ளிட்டு நானூற்று நாற்பத்தொன்பதின்மர் பாடினரென்ப; அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறும் குறுந் தொகை நானூறும் நற்றிணை நானூறும் ஐங்குறு நூறும் பதிற் றுப்பத்தும் நூற்றைம்பது கவியும் எழுபது பரிபாடலும் கூத் தும் வரியும் பேரிசையும் சிற்றிசையுமென்று இத்தொடக்கத் தன; அவர்க்கு நூல் அகத்தியமும் தொல்காப்பியமுமென்ப; அவர் சங்கமிருந்து தமிழாராய்ந்தது ஆயிரத்தெண்ணூற் றைம் பதிற்றியாண்டென்ப; அவர்களைச் சங்கமிரீஇயினார் கடல் கொள்ளப்பட்டுப்போந்திருந்த முடத்திருமாறன் முதலாக உக் கிரப்பெருவழுதியீறுக நாற்பத்தொன்பதின்மரென்ப; அவருட் கவியரங்கேறினார் மூவர் பாண்டியரென்ப.'

அகத்தியனுர்பால் வைத்தியம் கற்றுணர்ந்த மாணவர் பல ராயினும், இலக்கணம் கற்றுணர்ந்தவர் பன்னிருவரென்பது நன்கு புலப்படுகின்றது. அவர்தாம்—

1. தொல்காப்பியர்
2. அதங்கோட்டாசான்
3. பனம்பாரனுர்
4. அவிநயனுர்
5. காக்கைபாடினியார்
6. நற்றத்தனுர்
7. துராலிங்கர்
8. வையாபிகர்
9. வாய்ப்பியர்
10. கழாரம்பர்
11. செம்பூட்சேய்
12. வாமனர்

என்ற இவராவர். இப்பன்னிருவரும் சேர்ந்து புறப்பொருட் பன்னிருபடலம் என்னும் நூல் ஒன்றினை யாத்தனர் என்று கூறுப. அன்றியும் இவருள், நால்வர் தத்தம் பெயரானே ஒவ் வோரிலக்கணநூல் செய்தனர். அவை,

1. தொல்காப்பியர் — தொல்காப்பியம்
2. அவிநயனுர் — அவிநயம்
3. காக்கைபாடினியார் — காக்கைபாடினியம்
4. நற்றத்தனுர் — நற்றத்தம்

என்பன.

அகத்தியனுர் வடமொழியினும் வல்லவர் என்பது அம் மொழியில் அவர் இயற்றிய அஷ்டகம் என்னும் அரியநூலால் இனிது விளங்கும். அகத்தியர் ஏறக்குறைய இருநூற் றைந்து வைத்திய சாத்திரங்கள் இயற்றினரென்பராயினும் இக் காலத்தே அவர் பெயரான் வழங்குவன:— வைத்தியக்கும்மி, குணவாகடம், வைத்தியசாரம், நயனசாரம், அவிழ்தசாரம், சிந்தூரமஞ்சரி, அமுதகலைக்கியானம், பஞ்சகாவிய நிகண்டு, கன்மகாண்டம், பூரணசூத்திரம், சங்குசுத்தி முதலிய சில வாம். அகத்தியனுர் தம்பெயரானே தமிழ்மொழிக்குப் பன்னீ ராயிரம் சூத்திரங்கொண்ட இலக்கணநூல் ஒன்றினைச் செய்த னர். அது பேரகத்தியம், சிற்றகத்தியம் என இருபகுதியா யிற்று.

அகத்தியமுனிவர் மாணவர் பன்னிருவரில் தலைநின்றவ ராய தொல்காப்பியர்மீது முனிவர் ஏதோ காரணம்பற்றி

முனிவுகொண்டு சபித்தார் எனவும், தொல்காப்பியர் வெகுண்டு தமது ஆசிரியர் அரிதினியற்றிய இலக்கணநூல் அழிந்துபட வென எதிருறச் சபித்தனர் எனவும் கர்ண பரம்பரையாக ஒரு கதை வழங்குகின்றது. அக்காரணம் பற்றியோ வேறு எக்காரணம் பற்றியோ அந்த அகத்தியம் இறந்துபட்டது.

உலகின்கண் மாந்தர்கள் பேசுமொழிகள் பலவாயினும் அவற்றுள் மாந்தர்களின் அறிவைச் செப்பஞ்செய்து விளக்கி உயர்நிலைக்கண் உய்க்குந் திறத்தனவாகிய நுண்பொருள் நூற்கள் அமைந்த மொழிகளே அறிஞர்களான் உயர்ந்த மொழிகளெனக் கருதப்படுகின்றன. அங்ஙனங் கருதப்படும் உயர்திறத்து மொழிகள் சிலவே. தமிழ்மொழி அவ்வுயர்திற மொழிகளுள் ஒன்றென்பதை நம்மிந்திய தேயத் தறிஞர்களிலும் மேற்றிசைப் புலவர்களிலும் பலர் நன்கு விளக்கிக் கூறியிருக்கின்றனர். தமிழ் என்னும் சொற்கு இரண்டு பொருள்கள் உண்டு; அவை இனிமை, தனிமை என்பன. தமிழ் என்பது முற்பொருளில் குணப்பண்புப்பெயர். பிற்பொருளிலே தொழிற்பண்புப்பெயர்; இதில் தமி–பகுதி தமியேன், தமித்து நின்றான் என வேறு சொற்களும் இப்பகுதியினடியாக வருதல் காண்க. ழ்–பகுதிப்பொருள் விகுதி; இமிழ்; குமிழ் என்பவை முதலிய சொற்களினும் இவ்விகுதி வருதல் காண்க. அவற்றுள் தமிழ் மிகவும் இனியமொழியாதலின் இனிமை என்னும் பொருள்பற்றித் தமிழ் என்னும் பெயரெய்திற்று என்ப ஒரு சாரார்; ஒரு சாரார் அது மற்றொருமொழியினின்றுதோன்றுததாய்த் தனித்தியங்கும் ஆற்றலுடையதாயிருத்தலின் தனிமை (தனித்தல்) என்னும் பொருள்பற்றியே அதற்கு அப்பெயர் எய்திற்று என்ப. இவற்றுள் எதேனும் ஒரு பொருள்பற்றியே முதலில் அப்பெயர் தோன்றியிருக்கும்; ஆயினும் தமிழ்மொழியில் அவ்விருதன்மைகளும் அமைந்திருத்தலின் இரட்டுற மொழிதல் என்னும் உத்தியான் அவ்விரு பொருளும் பற்றியே அப்பெயர் போந்தது என்றலும் பொருந்துவதேயாம்.

தமிழ்மொழி தொன்மையிலும் உலகிலுள்ள மொழிகளுள் முன்னிணியில் முதன்மையாக நிற்றற்குரியதென்பது பல திறந்த பண்டிதர்களின் துணிபு. அதன் காலத்தைக் கணக்கிட்டத்தொடங்கினால், அது ஆதியென்றறிதலாகா ஆதியாகும்

என்று அநேகங் கற்பதிவுகளால் வெளியாகின்றது. அதன் தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களைப்போலவும், அகப் பொருள் புறப்பொருள் முதலிய துறைகளைப் போலவும், வெண்பா முதலிய பாக்களைப் போலவும் வேறெந்தப் பாஷையிலும் இல்லாமையே அதன் சிறப்பிற்கும் பழைமைக்கும் இனிமைக்கும் தனிமைக்கும் அடையாளமாகும். இது பற்றியே, சமீபகாலத்திருந்த அங்கிலக் கலாஞ்புணரான திருவனந்தபுரம், சுந்தரம்பிள்ளை அவர்கள்,

"நீராரும் கடல்உடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பாத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநற் றிருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி யிருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவினமலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்ததுமே."

என்று அதியற்புதமாய் நந்தமிழணங்கை ஆதரவுடன் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

ஸ்ரீமான் ராவ் பகதூர் சீனிவாசப்பிள்ளை அவர்கள் தாம் எழுதிய தமிழ் வரலாற்றில் அடியில் வருமாறு கூறுகின்றார்:—

"தமிழ் என்னும் பெயர் தமிழ் மொழியே. தமிழ் என்னும் மொழியைச் சிலர் திராவிடம் அல்லது திரமிளம் என்னும் வடமொழிச்சிதைவு என்பர். சிலர் அதை மறுத்துத் தமிழ் என்னும் பெயர் அமைந்த வகையைப் பலவாகக்காட்டுவர் ழகரத்தை உச்சரித்தறியாத ஆரியர் திராவிடம் அல்லது திரமிளம் என்றதில் நின்றும் தமிழ் என்னும் பெயர் பிறந்தது என்பது சிறிதும் பொருத்தமுடையதாகத் தோன்றவில்லை. ஸ்ரீமான் சி. வை. தாமோதரம்பிள்ளை அவர்கள் இதைப்பற்றி எழுதியிருப்பது கவனிக்கத்தக்கது. அது தமிழ் என்பது

தென்மொழிக்குத் தென் சொல்லாகிய பெயரேயாமெனக் கொள்க. இதையொழித்துத் திராவிடமென்னும் வடமொழியே தமிழ் என்றுயதெனச் சற்றும் ஆலோசனையின்றிக் கூறுவாரு முளர். அவர்தம்.... .சாலவும் நன்றுயிருந்தது. தமிழில் தமிழ் என்னும் பதம் வராமுன்னர் சமஸ்கிருதத்தில் திராவிடம் என்னும் மொழி உளதாகில் அப்பெயர் எப்பொருளை உணர்த் திற்றே! உலகத்தில் எஞ்ஞான்றும் பெயரா அல்லது பொருளா முந்தியது? பொருளெனில், அப்பொருள் இருக்கும் இடத்தா, அஃதில்லாத பிறிது தேயத்திலா, அதன் பெயர் முன்னர் நிகழும்? இஃதுணராது தமிழ் வழங்கிய இடத்தில் தமிழுக் கோர் பெயரிருந்ததில்லை யென்றுஞ் சமஸ்கிருதத்திலிருந்து அதற்குப் பெயர் வந்ததென்றுஞ் சொல்வது யார்க்கும் நகை விளைக்குமே! இஃதொன்றே! யாதொரு தமிழ்மொழியில் இரண்டோரெழுதுதுச் சமஸ்கிருதமொழிக்கொப்ப நிகழுமா யின் அஃது சமஸ்கிருதத்தினின்று பிறந்ததெனச் சாதிக்கின் றனர். மேலைத்தேசவாசிகளின் இங்கிலீஷ் முதலிய அந்நிய பாஷைகளில் இன்றியமையா வீட்டுச்சொற்களாகித் தந்தை தாயரைக் குறிக்கும் பாதர் மதர் என்பனவாதியும் வடமொழி அடியாய்ப் பிறந்ததென்பார். அப்படியாயின் வடமொழியைக் காணுமுன் அத்தேசத்தாரெல்லாம் தாய் தந்தையரை அழைத் தற்கோர் வீட்டுச்சொல் இல்லாதிருந்தன ரென்றன்றே முடி யும்? ஆண்டுள்ள பாதர் மதர் ஒப்ப வண்டும் பிதா மாதா ஆயிற்றெனில் யாது குற்றம்? தருக்கத்திற் காகதாலிய நியா யத்தினுண்மை அறியாமலும், ஆரிய மொழிக்கும் அதன் அயல் நாட்டு மொழிகளுக்கும் உள்ள சம்பந்த சார்புகளின் காரணத்தை ஆராயாமலும் இவ்வாறு கழறும் இவர் கற் பனைக்கு யாது செய்யலாம்? இவர் வாய்க்கு விலங்கிட யாரால் முடியும்! என்பது."

இ. மு. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே அரபியரும் மேல் நாட்டிலுள்ள பிறஜாதியாரும் தமிழ் நாட்டாரோடு வாணி கம் புரிந்து வந்தனரென்பது சரித்திர ஆராய்ச்சியாற்போந்த உண்மை. அந்நாடுகளில் அரிசி, மயிற்றோகை முதலிய பல பண்டங்களுக்கு இன்னும் தமிழ்ப்பெயரே வழங்கி வருகின் றன. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்த எகிப்தியர், இறந்தவர் [illegible] பாதுகாத்து வைப்பது வழக்கம்.

அவ்வுடல்களின்மீது அக்காலத்து அணிந்த உயர்ந்த ஆடைகள் இந்நாட்டில் நெய்யப்பட்டன. பிறநாட்டார் இந்நாட்டிற்கு வந்ததுபோலத் தமிழர்களும் நாவாய்களிற் பிறநாடுகளுக்குப் போகும் வழக்கம் உண்டு. சங்கச் செய்யுட்களிற் பெரு நீரோச்சுநர் என்று சொல்லியிருப்பது தமிழர் பெருங்கடலைக் கடந்து செல்லும் வழக்குடையர் என்பதைக்காட்டும். மேற் சொல்லிபவற்றால் ஆங்கிலம், பிரஞ்சு, ஜர்மன் முதலிய பிற நாட்டுமொழிகளையும், இந்தியநாட்டுப் பிறமொழிகளையும் விடத் தமிழ் தொன்மையிற் பின்னிட்டதன்றென்பது விளங்கும்.

சங்கந்தோன்றிய பின்னர் முத்தமிழிலும் இயற்றப்பட்ட நூல்களும் செய்யுட்களும் எண்ணிறந்தன. அவற்றில் ஒரு பகுதிக்கு இக்காலத்திற் பெயர்மட்டுமே உள. சங்கத்திறுதிக் காலத்திற்கு முன்னே தோன்றியன சில உள. அவை சில போறிவாளர்களுடைய நன்முயற்சியால் யாவரும் அடையக் கூடியனவாக இருக்கின்றன. சங்கநூல்களின் பெருமையை இப்புத்தகத்தைப் படிப்போர் ஒரு சிறிதே அறியலாம். முற்றும் எளிதில் உணருமாறு செய்வதைச் சான்றோர் சிலர் மேற் கொள்ளவேண்டும்.

இதுவரையிற் சங்கத்திறுதிக் காலத்திற்கு முற்பட்ட செய்தி கூறப்பட்டது. சங்கத்திறுதிக் காலத்திற்குப்பின்னரும் தமிழ் மொழியில் இயற்றப்பட்ட நூல்களுக்கும் செய்யுள்களுக்கும் அளவில்லை. அவற்றுள்ளும் பல இறந்தன எனினும், இப் பொழுது எஞ்சியிருப்பனவற்றைக்கொண்டும் தமிழ் தொன்மையிலும், சொல்வளத்திலும், இலக்கண வரம்புடைமையிலும், செய்யுள்வகையிலும், நாகரிகத்திலும் பிற எம்மொழிக்கும் பின்னிடாத உயர்ந்த நிலைமையிலிருக்கின்றது என்று கூறுவது மிகையாகாது. இதுபற்றிச் சில ஆங்கில கனவான்கள் கூறியிருப்பன வருமாறு:—

டாக்டர் கால்ட்வேல் என்னும் ஐரோப்பிய ஆசிரியரும், தமது திராவிட ஒப்புமுறையிலக்கணத்தில் (Dravidian Comparative Grammar) 'தமிழ்மொழி பண்டையது, நலஞ் சிறந்தது, உயர்நிலையில் நிற்பது. இதைப்போன்ற திராவிட மொழி வேறெதுவும் இன்று' என்று தமது முழு ஆராய்ச்சியால் உளமுவந்து எழுதுகிறார்.

டாக்டர் வின்ஸ்லோவும், 'கிறிஸ்து பிறப்பதற்கு அறுநூறு எழுநூறு வருடங்களுக்கு முந்தியே, தமிழுக்குத் தந்தை யென்றுரைக்கும் அகத்தியர், தமிழ் நாட்டிற்கு வந்து அதை வளர்த்தார். அவர் முற்றத்துறந்து மூதுணர்ந்த முழுமுனிவர். ஆதலான், அதைச் சிவசண்முகரிடத்துக் கற்றுத்தேறினர் என்பர். அவர்தாம் தமிழிற்கு வரிவடிவெழுத்துக்களை அமைத்தார் என்று சிலர் எண்ணிச்சொல்வதை நாம் கொள்வதற்கில்லை. அவர்க்குமுந்தியே எழுத்து, சுவடி என்கிற காரணப்பெயர்கள் தமிழில் இருந்தன என்பது தெள்ளிதின் விளங்குகிறது. ஆகையால் அகத்தியர் தாம் தமிழிற்கு வரிவடி வெழுத்துக்களை ஏற்படுத்தினர் என்பதை நாம் தள்ளுவதன்றிக் கொள்ளுவதற் கிடமில்லை. ஆனால் அவர்தாம் தமிழ்மொழியின் இலக்கணத் தைப் புதுக்கிப் (12,000) 'பன்னீராயிரஞ் சூத்திரங்களில்' எழுதிமுடித்து, அதைப் போற்றிவளர்த்தார் என்பதற்குச் சந் தேகமில்லை. ஆனால் அச்சூத்திரங்களெல்லாம் இப்போது ஒன்றுமின்றி இறந்தன. அவர் மாணவராந் தொல்காப்பியர் போற்றின சிற்சிலவற்றைமட்டும், அவருடைய தொல்காப் பியம் என்னும் இலக்கணத்தில் காணலாம்' என்கிறார். இன் னும் இந்த வின்ஸ்லோ பாதிரியார் 'எகிப்தியரசன் சாலோமன் காளில் தெக்கணத்தில்வந்த கப்பல்வியாபார ஏற்றுமதிச் சரக்கு களின் பெயர்களாகிய தந்தம், கபி, தோகையென்பவைகளை இங்கிருந்தவர்கள் கொண்டுபோய் இன்னும் வழங்கிவருவதே தமிழின் பழமைக்குச் சான்றாகும்', என்கிறார். இன்னும் அவர், 'தமிழ் முரட்டுப்பாஷை அன்று; அருமையாய்த் தெளி வடைந்தபாஷை. இங்கிலீஷுக்கு வரிவடிவில் எழுத்து ஏற் படுவதற்கு நெடுநாளைக்கு முந்தியே அது தெள்ளித் தெளிந்த பாஷையாய்ச் சிறந்திருந்தது. அதன் பெயரே இனிமையென்று பொருள்படுவதற்கடையாளமாக அதனிடத்திற் கேட்டாரைத் தன் வசமாக்கும் இனிமை பொருந்தியிருக்கிறதென்பதற்கு ஐயம் இல்லை. பரதகண்டத்தில் வழங்கும் ஏனைய பாஷைகளைப் போல்த் தமிழும் சம்ஸ்கிருதத்திற் பிறந்ததன்று என்று அதனு டைய ஓசையமைப்புக்கேற்ற எழுத்தமைப்பாலேயே நன்கு தெரிந்துகொள்ளலாம். அதனுடைய இலக்கண அமைப்பு, சம்ஸ்கிருத இலக்கணத்துக்கு ஒத்திருக்கிறதாலும், சம்ஸ் கிருதத்திற்கும் அதற்கும் சற்றேனும் பொருத்தம் இன்று

அதற்கு ஒருமை பன்மைதவிரச் சமஸ்கிருதத்திற்குள்ளது போல் இருமை என்னும் புதுமையான எண் கிடையாது. 'அதனுடைய பெயர், வினை, இடை, உரி என்னும் சொற் பாகுபாட்டிலும் பெயர்களின் பாகுபாட்டிலும் அவைகளின் வேற்றுமை உருபுகளிலும், அவைகளின் மயக்கத்திலும், திணை பால் இடம் காலம் முதலிய வினை வேறுபாடுகளிலும் அதனுடைய சொற்றொடராக்கத்திலும் பிறவற்றிலும் அது சமஸ்கிருதத்திற்குச் சற்றேனும் ஒவ்வாது, கன்கமைப்பில் இலத்தின் பாஷையோடு சரியாக வைத்தெண்ணும் இயல்பினதாயிருக்கிறது', என்கிறார். இன்னும் ஓர் இடத்தில் பின்னும் அவர் பின் வருகிறபடி பேசுகிறார்.

'தமிழ் தன் செய்யுள் அமைப்பிலும் போக்கிலும் கிரேக்க பாஷையைவிட எவ்வளவோ விஞ்சித்தெளிந்தும் நிரம்பியும் இருக்கிறது. ஆனாலும், அது, சமஸ்கிருதத்திலிருந்து கொண்டுள்ள வார்த்தைகளையுஞ் சேர்த்துப்பார்த்தால் அதனுடைய பத நிறைவு இலத்தின் பாஷையைவிட எத்துணையோ ஏற்றமாயிருக்கிறது அதனுடைய நிறைவிலும் வல்லமையிலும் அதற்கு, அங்கிலமும் ஜர்மனும் இணையாவ கன்றி, வேறெந்தப் பாஷையும் இணையாகாது' என்கிறார்

மிஸ்டர் டெய்லர் என்பவரும், 'அது நிறைந்து தெளிந்து, ஒழுங்காயுள்ள பாஷைகளில் மிகவுஞ் சிறந்ததொன்றாகும் என்பதற்கையமில்லை', என்கிறார்.

டாக்டர் கால்ட்வேல் என்பாரும், 'திராவிடபாஷா அமைப்பில் தமிழே நன்கு வளர்ந்து மற்றைப் பாஷைகளுக்குப் பிறப்பிடமாயுள்ளது; சமஸ்கிருதத்தின் உதவியுமுமுவதும் இன்றியே கன்னிலையில் நடைபெறக்கூடியது' என்கிறார்.

டாக்டர் ஜி. யு. போப்பையர், 'தமிழ் எந்தப் பாஷைக்கும் இழிந்தது அன்று. ஆனாலும், சிலர் அதை எங்கேயோ அங்கில அரசாட்சியின் அநாகரிகமான ஓரிடத்திற்பேசும் பாஷை என எண்ணுகிறார்கள். அன்றியும் அதை நமது அரசாட்சியாரும் கலாசங்கத்தாரும் கொஞ்சமேனும் அருமையறிந்து போற்றுகிறதில்லை. ஆகையால் அதிற் பயின்று புலமை நிரம்பப் பாடுபடுகிறவர்கள் கடலிற்குளித்து முத்தமெடுக்கப் பாடுபட்டுச் சித்தம் திகைப்பவர்போலாகிறார்கள்', என்கிறார். அன்றியும்; அவர், தமிழ் இலக்கிய இலக்கணங்களைத் தம் சுய

பாஷைபோல வளர்க்க இச்சித்து அவைகளிற் பயின்றார். அதை அவர் உலகிலுள்ள எல்லாப்பாஷைகளினும் ஏற்றமான தென எண்ணி அதிக ஊற்றமாக அதற்காக உழைத்து அதைப் பெரிதும் மதித்திருந்தார். ஆகையால் அவர், தம் பிரேதக்கல் வெட்டில் தம்மைச் செந்தமிழ்மாணவன் என்று சிறப்பாகச் சித்திரிக்கும்படி கேட்டுக்கொண்டார். திருவள்ளுவர் குறளைப் பற்றி, பேசினபோது அவர், 'அதற்குச் சமானமான வேறேர் இலக்கியம் பூலோகத்தில் எந்தப்பாஷையிலும் இல்லை' என்று இதயபூர்வமாய் இயம்பினர்.

இங்கு இதன் சம்பந்தமான முற்கால நிலைமையையும் தற்கால நிலைமையையும் தொகுத்துக்கூறுவது பொருத்தமானது. முற்காலத்துத் தமிழ்நாடு தமிழரசர்களால் ஆளப்பட்டு வந்தது. அவ்வரசர்களும், நூற்றுக்கணக்கான வள்ளல்களும், பிற தமிழ்மக்களும் தமிழ்ப்புலவர்களைப் பேரன்போடும் ஆதரித்து வந்தார்கள். அது தமிழ்மொழி அங்ஙனம் வளர்தற்கேதுவாயிற்று. இக்காலத்து ஆட்சியோ ஆங்கிலேயரது. அரசாங்க நடவடிக்கைகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. சட்டசபை, நியாயஸ்தலங்கள் இவற்றிற் பேசப்படுவதும் ஆங்கிலமே. சட்டமெல்லாம் ஆங்கிலம். ஹிந்து தர்மசாஸ்திரங்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டுப் பிரமாணமாய்க் காட்டப்படுகின்றன. தமிழர் ஒருவரை ஒருவர் சந்திக்கும் காலத்தில் ஆங்கிலத்திற் பேசுவதும், ஒருவருக்கொருவர் ஆங்கிலத்தில் எழுதிக்கொள்வதும் சாதாரணமாயிருக்கின்றன. ஆங்கிலம் கற்பிக்குங் கல்லூரிகளோ இந்நாட்டில் பல உள்ளன. அங்குச் சமஸ்கிருதம், லத்தீன், கிரீக் முதலிய இறந்து பட்டமொழிகளுக்குக் காட்டும் சலுகையைத் தமிழ்நாட்டில் தமிழ்மொழிக்குக் காட்டாது அதனைத் தாழ்த்திவருகின்றனர். ஆங்கிலம் கற்பிக்கும் கணக்காயருக்கு மாதம் 1,000. ரூபாய்க்குமேலும் சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது. தமிழ்க் கணக்காயருக்கோ அத்தொகையில் பத்திலொருபங்குக்குங் குறைந்ததொகை சம்பளமாகக் கொடுக்கப்படுகிறது.

இதுவரையிற் கூறியவற்றால் தமிழ்மொழி தொன்றுதொட்டு மிகமேலான நிலைமையில் இருந்து வந்திருக்கிறது என்பதும், தங்களது அரிய பெரிய சொத்தாகிய தமிழைத் தமிழராய்ப் பிறந்த ஒவ்வொருவரும் தமது முதற் கடமையாகப் போற்றி

வரவேண்டும் என்பதும், பெற்ற அன்னையினும் அன்பிற்குரிய அருமைத் தாய்மொழியாம் தமிழைப் போற்றுகவன் தமிழன் ஆகான் என்பதும் நன்குவிளங்கும். சில நூற்றாண்டுகளுக்கு முன்னர்ப்பிறந்து இந்நாட்டில் வந்துலவும் ஆங்கிலமாகிய பிற மொழியைப் புகழ்ந்து தமது தாய்மொழியினிடத்து அன்பு பாராட்டாதவர் பலர் இன்னும் நம் நாட்டில் இருக்கின்றனர் என்பதை வீசனத்துடன் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

தமிழபிமானிகள் தமிழின் சிறப்பைப்பற்றிச் செய்துள்ள செய்யுட்கள்.

1. மொழியுளத் தாலறி யாச்சிவ வுணர்வாற்
றனியியன் மறைமுன் சாவாக் கல்வியாய்
ஐந்தக் கரத்தி லமையுந் தமிழ்மொழி
ஒலிவடி வாகி யுலவு மநாதியில்.

2. அம்மு தற்சிவம் அமைக்குஞ் சேய்க்கும்
உயிர்கள் ஞானத் துவந்தாங் கொளிர
உரைத்த தக்கரக் கால மாகும்.

3. மகத்துவ ஞான சித்துவல் லவனும்
அகத்தியன் றவத்தா லருந்தமிழ் பெற்றிங்
கியலிசை நாடகங் களுக்கே ராஜின்
இயலாய் வகுத்த திலக்கணக் காலம்.

4. மோனையாந் தெய்வத் தமிழ்மொழி நிறீஇய
சங்கத் தலேவர்கள் தலேமை பூண்டங்
கறம்வள ரவையில் அரங்கே றியநாள்
வழுதியர் வளர்த்தது சங்க காலம்.

5. கொல்லா விரதம் ஆண்ட நலத்தோர்
அறிவா னிறைந்த வறமாண் புடையோர்
தமிழின தருமை தனியா யுணர்ந்தோர்
கருவிநூற் காவியங் கழறும் பெரியோர்
கால கதியாற் கடைநிலேப் படுவோர்
தம்வயப் படுவது சமண காலம்.

6 சித்தெலா நிறைந்து சித்தா யமர்ந்த
தேசிகர் மரபில் சிறந்து விளங்கும்
மடாதி பதிகளா மாண்பமை ஞானியர்
அளவிற் படுவதவ் வதீன காலம்.

7. தெய்வ மறையாம் செந்தமிழ்ப் பிதாமொழி
ஆரிய நங்கையோ டணைந்து கலந்து
காவிய நடையால் கவிகள் பொழிய
பொலிவுபெற் றிருப்பது புராண காலம்.

8. தமிழினை யறியார் சார்பினிற் பட்டுப்
பெருமை முற்றும் பிறழ்ந்து நோய்பட்டு
அந்நியர் வசப்பட் டழிந்து பிற்பட்
டாதர விலாம லாகுங் காலத்
தறனிகழ் அதம காலம் சென்றபின்
உன்மதச் செல்வரும் உயர்ஞா னியரும்
கொல்லா விரதங் கொளுமந் தணரும்
உலகிற் பரவி யுவந்தாங் கொளிரவும்
தமிழே சிவமாய்த் தழைத்து வளரவும்
அற்புதச் சிற்சபை யண்ணல் விளையாட்
டருளாற் றழைக்கு மதுசத் தியமே.

9. தமிழ்சிவ மினிமை யெனுந்தனிப் பொருளாம்
அமிழ்தெனும் அநாதி யியற்கையாய்ப் பன்னிரு
கலையினை யுடைய கதிரவ னென்னத்
தலைமையா யமைந்த தனியியற் பிதாமொழி.

10. சோதியாங் கசடற்ற பக்கள் தோற்றத்தைக்
காதிநன் ஞன்காய்க கணித்துக் காட்டி
உதாத்த முதலிய வோசையுள் ளனவாய்
நிதானித் தணிபெற நிலைக்கச் செய்து
மற்றைய வெழுத்தை யவ்வாறே யியற்றப்
பெற்றிலா மையிஞற் பெரிதுளம் வாடினர்
இனிய ழகாரம் எமக்கிங் குரித்தெனத்.
கனிவொடு காட்டாக் கள்ளமென் சொல்வேம்
வாதிக ளாகி வழக்குப் பேசும்
ஆதிச் செயற்கை மொழியதா மாரியஞ்
சோடச கலையாய்த் துலங்குறு சந்திரன்
மாடகத் தோங்கு மாதரு மொழியே.

[குறிப்பு:— சிலர் இவை கழாரம்பர் இயற்றியருளிய பேரிசைச் சூத்திரங்கள் என்பர். அதன் உண்மை இவ்வளவிற்றென்று துணிதற்கில்லேனாயினும், அவையனைத்தும் நம் தமிழ்மொழியின் சிறப்புக்களையும் காலங்களையும் வருத்துக் காட்டலின் அவற்றையும் சேர்த்துள்ளேன்.]

எழுத்தொடு சொற்பொருள் யாப்பணி யென்னு
வழுத்துஞ் சுருதிசுரம் வண்ணம்—அழுச்துந்
தனியொத்துப் பாவம் சரச மிரசம்
பனிரண் டிலக்கணமாம் பார். (மதிவாணர் வெண்பா)

மொழிக்குங் கண்ணுதலார் முதற்குரவ ரியல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முனிவேந்த ரிசைபரப்பும்
இருமொழியு மான்றவரே தழீஇயினு ரென்றுலிவ்
விருமொழியு நிகரென்னு மிதற்கைய மூளதேயோ. (காஞ்சிப்புராணம்)

கண்ணுதற்பெருங் கடவுளுங் கழகமோ டமர்ந்து
பண்ணுறத்தெரிந் தாய்ந்தவிப் பசுந்தமி ழேனை
மண்ணிடைச்சில விலக்கண வரம்பிலா மொழிபோ
லெண்ணிடைப்படக் கிடந்ததா வெண்ணவும் படுமோ.
(திருவிளையாடற்புராணம்)

மறைமுதற் கிளந்த வாயான், மதிமுகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்றே,
அறைகடல் வரைப்பிற் பாடை அனைத்தும்வென் றுரியத்தோ (டு)
உறழ்தரு தமிழ்த்தெய் வத்தை உண்ணினைந் தேத்தல் செய்வாம்.
(சீகாளத்திப்புராணம்)

வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி, அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை உலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார் கொல்லேற்றுப் பாகரெனில்,
கடல்வரைப்பின் இதன்பெருமை யாவரே கணித்தறிவார்!

தொண்டர் நாதனைத் தூதிடை விடுத்ததும், முதலை
உண்ட பாலனை அழைத்ததும், எலும்புபெண் ணுருவாக்
கண்ட தும், மறைக்கதவினைத் திறந்ததும், கன்னித்
தண்ட மிழ்ச்சொலோ? மறுபுலச் சொற்களோ? சாற்றீர்.
(காஞ்சிப்புராணம்)

யாரறிவார் தமிழருமை என்கின் றேன்என்
அறியாமை யன்றே? மதுரை மூதூர்
நீரறியுமீ; நெருப்பறியும்: அறிவுண் டாக்கி
நீஅறிவித் தாலறியும் நிலமுந் தானே! (மதுரைப் பதிற்றுப்பத் தந்தாதி)

விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரண மொழியோ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத் தேனோ?
யாதோ சிறந்த (து)? என்குவீ ராயின்,

வேதம் ஓதின், விழிநீர் பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்;
திருவா சகம்இங்(கு) ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர்பாய
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர்விதிர்ப் பெய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி,
மன்பதை உலகில், மற்றையர் இலரே. (நால்வர் நான்மணிமாலை)

1. கடல்குடித்த குடமுனிஉன் கரைகாணக் குருகாடில்
தொடுகடலே உனக்குவமை சொல்லுவதும் புகழாமே.

2. ஒருபிழைக்கா அரனுர்முன் உரையிழந்து விழிப்பாரேல்
அரியதுன திலக்கணமென் றறைவதுமற் புதமாமே.

3. சதுமறைஆ ரியம்வரும்முன் சகம்முழுதும் தினதாயின்
முதுமொழிநீ அலதிஎன மொழிகுவதும் வியப்பாமே.

4. வேகவதிக்(கு) எதிர்ஏற விட்டதொரு சிற்றேடு
காலநதி நினைக்கரவாக் காரணத்தின் அறிகுறியே.

5. கடைஊழி வரும்தனிமை கழிக்கஅன்றே அம்பலத்துள்
உடையார்உன் வாசகத்தில் ஒருபிரதி கருதினதே.

6. தக்கவழி விரிந்திலகும் சங்கத்தார் சிறுபலகை
மிக்கநலம் சிறந்தஉன்தன் மெய்ச்சரித வியஞ்சனமே.

7. வடமொழிதென் மொழிஎனவே வந்தஇரு விழியவற்றுள்
கெடுவழக்குத் தொடர்பவரே கிழக்கொடுமேற்(கு) உணாரே.

8. வீறுடைய கலைமகட்கு விழியிரண்டும் மொழியாலுல்
கூறுவட மொழிவலமாக் கொள்வர்குண திசைஅறியார்.

9. கலைமகள்தன் பூர்வதிசை காணுங்கால் அவள்விழியுள்
வலதுவிழி தென்மொழியா மதியாரோ மதியுடையார்.

10. பத்துப்பாட் டாதிமணம் பற்றினர் பற்றுவரோ
எத்துணையும் பொருட்கிசையும் இலக்கணமில் கற்பனையே.

11. வள்ளுவர்செய், திருக்குறளை மறுவறநன் குணர்ந்தோர்கள்
உள்ளுவரோ மனுவாதி ஒருகுலத்துக் கொருநீதி.

12. மனங்கரைத்து மலங்கெடுக்கும் வாசகத்தின் மாண்டோர்கள்
கனஞ்சடையென் றுருவேற்றிக் கண்மூடிக் கதறுவரோ.

(மனோன்மணீயம்)

ஒரு பாஷை முதலில் கை கால் முதலிய உறுப்புக்களின் சைகை யளவிலிருந்து, காளடைவில் ஒலி வடிவையடையும். அதற்குப்பின்பே, அந்தப் பாஷை விருத்தியடையத்தொடங் கும். மற்றப்பாஷைகளோடு கலந்து உறவாடாத பாஷை காளடைவில் இறந்துபடும். இதன் விஷயம் விரிக்கிற் பெரு கும். தமிழ்மொழியை ஆராயப்புகுந்தால், அது தனித்து இயங்கும் வன்மையோடு இலக்கண அமைதி, சொற் பாகு பாடு, பொருட் பாகுபாடு, செய்யுட் பாகுபாடு முதலிய யாவும் செப்பமாக அமையப் பெற்றிருத்தலால் தமிழ் மொழி தனி மொழி என்பதில் ஓர் ஐயப்பாடுமில்லை என்பது பாஷை நூற் புலவர்கள் கொள்கை.

ஆரியபாஷையோடொத்து அதிபூர்விகமாயுள்ளதும், மது ரையிலே முத லிடை கடை யென்னு முச்சங்கத்திலே வளர்க்கப் பட்டதும், வடவேங்கடந் தென்குமரி யென முன் எல்லை கூறப் படினும் அவ்வெல்லை கடந்து பற்பல தேசங்களிலுந் தற்காலம் பரந்துபேசப்படுவதுமாகிய இன்னபெருமையுடைய இனிய தமிழ்ப்பாஷையிலே ஆசிரியரின்றிக் கற்கவிருப்புவோர் நூல் களைப் பிரயாசமின்றிக் கற்றற்குக் கருவியாக இருப்பது அகராதி.

எண்சீர் ஆசிரியவிருத்தம்

கேட்டபொருள் யாவுமுட னேகொடுக்கும் யாவர்
கேட்பினுமொ ரேபடித்தாய்க் கொடுக்குமின்றன் றென்னு
மீட்டமுற வெப்பொழுதுங் கொடுக்குமித ஞலே
ஏழில்சாலு நிகண்டதனை யிமையவர்கோ வென்கோ
வாட்டமற வழங்குகற்ப தருவென்கோ வவையிவ்
வையத்திற் பெறலரிதா மகராதி பெறலாம்
நாட்டமொடு காமுமிலா னித்தனையிலா னென்றே
நவிலுதற்கோ ரையமுண்டோ நானிலத்தீர் நவில்வீர்.

அறுசீர் ஆசிரியவிருத்தம்

பத்திரந் தோறு நல்ல பலனளித் திடுத லாலும்
மித்திரப் புலவர் புந்தி விழைபொரு ளளித்த லாலும்
எத்திற விபுத ரார்க்கு மெய்ப்பினை யொழித்த லாலும்
இத்தகை நிகண்டு தன்னை யிமையவர் தருவென் பேமால்.

எண்சீர் ஆசிரியவிருத்தம்

கிருமலமாம் வர்ணவர் ணீதமா யெவரும்
நினையகமீக் களிகூர நிலவொளிய தாகி
உருவளரும் விபுதரிடத் தமர்ந்துதலைக் கொம்பின்
உயர்சுழியி லொருதுகளி லாதுவிழைந் தோர்க்குத்
திருவளருஞ் சுகமளித்துத் தனைநோக்கு கர்க்குத்
திரைகடல்சூழ் நிலவல்யத் தெப்பொருளுந் தரலால்
குருவளரு நிகண்டதனை யானவர்கோ வென்றே
குறித்துரைக்கத் தடையென்னே குவலயத்தீர் கூறீர்.

இத்தகைய சிறப்பினதாகிய இத்தொன்மொழியாம் தென் மொழியிற் சதுரகராதி முதலிய பற்பலவகராதிகள் இருப்பினும அவைகளெல்லாம் பெருவாரியாய்ப் பள்ளிப்பிள்ளைகட்கும் பிறர்க்கும் எளிதிற்பயன்தருவன அல்ல. அன்றியும், அவை களின் விலை ஏற்றமும், உருவத்தோற்றமும் எல்லாரும் எளிதிற் பெற்று உபயோகிக்க அநுகூலமானவைகளல்ல. ஆகையால், வீணுகவிரித்தும்,மிகச்சுருக்கியும்பயனற்றதாக்காமல்,இதனைத் தற்காலத் தமிழ் மாணவரும் பிறரும் நயமாக வாங்கி நவீன முறையால் உபயோகித்து நலம் அடையுமாறு, நல்லெழுத்திலும் நற்காகிதத்திலும் அச்சிட்டிருக்கின்றோம்.

இன்னும் இம்மொழியில் வந்து வழங்கும் வடசொற்களில் இன்றியமையாதவைகளையும், திசைச்சொற்களில் அரசாங்க முறையிலும், அதிகாரமுறையிலும், வர்த்தகமுறையிலும், சாஸ் திர சாம்பிரதாய இலௌகீகமுறைகளிலும் உள்ள எத்தனையோ சொற்களையும் இதிற் புதுவனவாகச் சேர்த்திருக்கின்றோம். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல கால வகையி னானே" என்ற ஆன்றோர் மொழிப்படி அவைகள் தகையாம் அன்றி மிகையாகா.

"அரசனெவ்வழி அவ்வழி குடிகள்" என்ற பழமொழியைப் புதுமொழியாக்க, அரசன் எவ்வழி ஆசாரம் அவ்வழி என்று ஆக்கிவிடலாம் என்றெண்ணும்படி அநேக நவீன இலௌகீக ஆசாரங்கள் பிரவர்த்தித்திருக்கும் இந்நாளில் முன்னுள்ள வழக்கத்தை அனுசரித்த தமிழகராதியைப் போன்றதொன்றே போதாமையை அனுபவத்தில் உணர்ந்த யாம், இதில் அநுபந்

தங்களாக அந்நியபாஷைச் சொற்களை உச்சரிக்கச் சென்னை, சர்வகலாசாலையார் அநுமதியுடன் தமிழில் ஏற்பட்ட புது எழுத்துகள் இரண்டையும், [உ–ம். (1) ப = f; காபீ = Coffee; வேக்பீல்ட் = Wakefield. (2) ஸ = z; கெஸட் = Gazette.] பஞ்சாங்கப் பெயர்களில் பக்ஷங்களின் பெயரையும், பஞ்ச பக்ஷிகளின் பெயர்களையும், அவைகளின் தொழில்களையும், வாரசூலையின் வாரநாழிகைகள் பரிகாரங்கள் முதலியவைகளையும், கிரகணங்கள், பரதகண்டவாசிகளின் பண்டிகைகள் முகம்மதியர் பண்டிகைகள், உருஸுகள், கிறிஸ்தவர்களின் முக்கிய பண்டிகைகள், திருநாட்கள், அச்சுப் பிழைதிருத்தி அச்சுக்கூடத்துக் கனுப்புவதற்குவேண்டிய திருத்தக்குறிகள் அவைகளின் விளக்கங்கள், இங்கிலிஷ் நாணய வழக்கப் பெயர்கள், பரதகண்ட நாணய வழக்கப்பெயர்கள், புகைவண்டியில் ஏற்றும் சாமான்களின் நிறை அளவின் பெயர்கள், சென்னை முகத்தலளவை பரதகண்டக் காலஅளவைகளின் பெயர்கள், இங்கிலிஷ் காலஅளவைகளின் பெயர்கள், லீப் வருஷக்குறிப்பு, இங்கிலிஷ் நீட்டலளவைப்பெயர்கள், நிறுத்தலளவைப்பெயர்கள், இங்கிலிஷ் முகத்தலளவைப்பெயர்கள், தானியதவச அளவுப் பெயர்கள், எண்வாய் பாட்டுப்பெயர்கள், இங்கிலிஷ் நிறுத்தலளவைப்பெயர்கள் (பொன், வெள்ளி முதலியன) இங்கிலிஷ் மருந்து நிறுத்தலளவைப்பெயர்கள், இங்கிலிஷ் நீட்டலளவைப் பெயர்கள், இங்கிலிஷ் சதுர அளவைப்பெயர்கள், வாக்கியங்கள் அர்த்தமாவதற் கனுகூலமான அடையாளப்பெயர்கள் முதலியவைகளையும் முறையாகக் கோத்திருக்கின்றோம்.

அன்றியும் அனுபந்தம். ஒன்றில், அசல், அலாதி என்பவைகளைப்போன்ற உர்தூபாஷிஷப்பதங்கள், அலமாரி, கிராம்பு போன்ற போர்த்துகேசியச் சொற்கள், எச்சரிக்கை, வாடிக்கை போன்ற தெலுங்கு பதங்கள், பயங்காளி, விரயம்போன்ற கிராமியச்சொற்கள், ஏராளம், தாராளம் முதலிய வழக்கச்சொற்கள், கவர்ன்மெண்ட், கவர்னர் முதலிய இங்கிலிஷ் பதங்கள் முதலியவைகளையும்; அனுபந்தம் இரண்டில், அக்ரிமெண்ட், அங்குஸ்தான் முதலிய அன்னிய வியாபாரக்கூட்டுச் சம்பந்தமான

---

* யான் ஒரு அங்கத்தினனாயிருந்த தமிழ் வியாசக்கமிட்டியார் சென்னை சர்வகலாசங்கத்திற்கு அனுப்பிய ரிப்போர்ட்டைப் பார்க்கவும்.

மொழிகளையும், அட்டெண்டர், அத்தாரிடி முதலிய துரைத்தன சம்பந்தமான மொழிகளையும், பிற மத சம்பந்தமான மொழிகளையும், நவீனசாஸ்திர சம்பந்தமான மொழிகளையும், இன்னும் பற்பல புதுச்சொற்களையும்; அனுபந்தம் மூன்றில் வருஷங்கள், மாதங்கள், வாரங்கள், இராகுகால நாழிகைகள், கிரகங்களின் பெயர்கள், நக்ஷத்திரங்களின் பெயர்கள், இலக்கினங்களின் பெயர்கள், திதிகளின் பெயர்கள், யோகங்கள், கரணங்கள், மூன்றும்பிறை, இராசிகளின் பெயர்கள் ஆகிய இவைகளைக் குறிக்கும் சொற்களையும் நவீனமுறையாக யாவரும் நலம்பெறப் புகுத்தி வெளியிட்டிருக்கின்றோம்.

ஆகையால், மாணவரும், மற்றவரும், அம்மற்றவரிற் கற்றவரும், கற்பவரும்,

> கற்றோர்கள் தாமுகப்பர் கல்விதனில் ஆசையுள்ளோர்
> பெற்றே மெனவுகந்து பின்புகற்பர்—மற்றோர்கள்
> மாற்சரியத் தாலிகழின் வந்ததென் னேயிகழ்கை
> ஆச்சரிய மோதான் அவர்க்கு.

என்றபடி இதை மற்றோர்களாய்க் காணுமல் உவந்து பெற்றோர்களாய்க்கொண்டு, இதனுதவியைக் கண்டு களிப்பார்களென நம்புகின்றோம்.

தமிழும் அங்கிலமுங்கலந்த வின்ஸ்லோ முதலிய பிறவகராதிகளைப் பெரிதும் தழுவித் தமிழ்க்கு இன்றியமையாதனவாகிய சங்கநூற்சொற்களையும் அமைத்து இதை இனிதின் முடிக்குமாறு திருவருள்புரிந்த எம்பிரானுகிய குகப்பெருமானை எம் மன மொழி மெய்களால் சிந்தித்து வந்தித்துத் தொழுகின்றோம்.

> கந்தன் கழலிணை காலையினு மாலையினும்
> எந்தந் தலைக்கணியாம் இங்கு.

பவானந்தர் கழகம்
பியூட்டன் அவுஸ், வேப்பேரி
சென்னை, ஜனவரிமீ 1925.

சு. பி.

கடவுள்துணை

தமிழகராதி.

(பெ) பெயர். (வி) வினை. (தொ.பெ) தொழிற்பெயர்.
(வை–அ) வைத்தியு அகராதி.

அ

அ–தமிழ் நெடுங்கணக்கில் முதலெழுத்து. 2. சுட்டெழுத்து, (உ-ம்.) அவன், அக்கொற்றன். 3. அஃறிணைப் பன்மைவிகுதி, (உ-ம்.) வந்தன, 4. ஆரும் வேற்றுமை உருபு, (உ-ம்.) தன்கைகள் (தன் + அ), 5. சாரியை, (உ-ம்.) எனக்கு,(என் + அ + க் + கு) 6. எட்டென்னும் எண்ணின்குறி, 7. ஓர் உபசர்க்கம், (உ-ம்.) அஞ்ஞானம்.

அ ஆ–அதிசயவிரக்கக் குறிப்பு.

அஃகம்–(பெ) தானியம்.

அஃகரம்–வெள்ளெருக்கு.

அஃகான்–(பெ) அ, முதலெழுத்து.

அஃகு–(வி) குறை, 2. சுருங்கு.

அஃகுல்லி–பிட்டு, 2. சிற்றுண்டி.

அஃகேனம்–இது ஆய்தவெழுத்து.

அஃசு–அஃறிணை ஒருமைச் சுட்டு.

அஃறிணை–உயர்திணையல்லாதவை.

அகங்காரம்–கருவம், 2. அந்தக் கரணங்களில் ஒன்று, 3. தானெனுஞ் செருக்கு, 4. பிறவிக்கு மூலம்.

அகங்கைஉள்ளங்கை.

அகசியம்–ஆசியம்.

அகசு–பொழுது, 2. பகல்.

அகடவிகடம்–தட்டுமாற்று, 2. இரண்டகம்.

அகடு–பொல்லாங்கு, 2. நடு, 3. வயிறு.

அகடோரி–பாம்பு.

அகணி–தெங்கு பனை முதலியவற்றின் உள் நார், 2. மருத நிலம்.

அகண்டம் – அபின்னம், 2. மண் விளக்கு.

அகண்டாகாரம் – அளவுபடாத வடிவம்.

அகண்டிதம்–முழுமை.

அகதி–இக்கற்றவன், 2. வறியவன்.

அகத்தி–ஒரு மரம்.

அகத்திணை – உள்ளத்தே நிகழ்கின்ற இன்ப ஒழுக்கம்.

அகத்தியம் – அகத்தியனாற் செய்யப்பட்ட இலக்கணம், 2. அவகியம்.

அகத்தியன்–அகஸ்திய முனிவர்.

அகந்தை–அகங்காரம்.

அகப்படஇடைக்க, 2. வசப்பட, 3. சிக்கிக்கொள்ள.

அகப்பற்று–உள்பற்று.

அகப்பா–மதிலுண்மேடை, 2. மதில், 3. அகழி.

அகப்பாட்டு–அகனானூறென்னும் நூல்.

அகப்பு–ஆழம்.

அகப்பேய்ச்சித்தன்–பதினெண் சித்தரில் ஒரு சித்து புருஷன்.

அகப்பை–சட்டுவம்.

அகப்பொருள் – ஓரிலக்கணம், அது உண்ணிகழ்ச்சியான் இன்பத்திற்குரிய எழுதிணையைக்கூறும், 2. வீட்டினுள்ள பொருள்.

அகமருணம் – நீருக்குள்ளே நின்று செபித்துப் பாவத்தைப் போக்கச் செய்யும் ஒரு மந்திர செபம்.

அகமுடையான் – வீட்டுக்காரன், 2. கணவன்.

அகம்–வீடு, 2. மனம், 3. பாம்பு.

அகம்படிமை–உட்டொண்டு.
அகம்படியார் – உள்வேலைக்காரர், 2. ஒரு சாதியார்.
அகம்பாவம் – உள்செருக்கு, 2. நான் என்னும் எண்ணம்.
அகம்பிரமம்–நானே பிரமம் எனல்.
அகம்மியம்–ஒரெண், 2. அறியக்கூடாதது.
அகம்மியை–பொதுமகள்.
அகரம்–அ, ஒரெழுத்து, 2. மருதநிலத்தூர், 3. பார்ப்பனச்சேரி, 4. இரசம்.
அகராதி-நெடுங்கணக்கிலுள்ளபடி அகரமுதலிய எழுத்துக்களாலாய சொற்கோவை.
அகரு–அகில்.
அகலம்–விரிவு, 2. மார்பு.
அகலவுரை–விரிவுரை.
அகலிகை–கௌதம முனிவர் பத்தினி.
அகல்–அகழி, 2. ஒருமரம், 3. விரிவு.
அகலுள்–அகலம், 2. ஊர், 3. நாடு, 4. பெருமை.
அகவல்–மயிற்குரல், 2. கூத்து, 3. ஆசிரியப்பா.
அகவு–(வி) அழை, 2. (வி) ஆடு.
அகவை–உட்பொருள், 2. வயது.
அகழ–(வி) தோண்டு.
அகழான்–வயலெலி.
அகழி–மதில்சூழ் இடங்கு.
அகழ்–அகழி, 2. (வி) தோண்டு.
அகளங்கம்–சுத்தம், 2. சீதாங்க பாஷாணம்.
அகளம்–மிடா, 2. காழி, 3. நிட்களம்.
அகற்று–(வி) நீக்கு.
அகஸ்மாத்து–தற்செயல்.
அகன்றில்–ஆணன்றில்.
அகாதம்–ஆழம், 2. பொந்து, 3. நீந்து புனல், 4. வஞ்சகம்.
அகாதன்–வஞ்சகன்.
அகாத்தியம்–பொல்லாங்கு, 2. உண்ணத்தகாதது.
அகாரம்–அ என்னும் எழுத்து, 2. வீடு.
அகாரணம்–காரணமின்மை.
அகாரியம்–காரியமல்லாதது.
அகாலமிருத்து–அனியாய மரணம்.
அகாலம் – பருவமின்மை, 2. பஞ்சகாலம்.
அகி–பாம்பு, 2. இரும்பு.
அகிஞ்சனன்–தரித்திரன்.
அகிருத்தியம்–அக்கிரமம்.
அகிதம் – இதமின்மை, 2. பகை, 3. ஏலாமை, 4. உரிமையின்மை.
அகிம்சை – கொல்லாமை, பிறவுயிருக்குத் தீங்குசெய்யாமை.
அகிலம்–எல்லாம், 2. பூமி.
அகிலாண்டம்–சர்வலோகம்.
அகிலாண்டவல்லி–பார்வதி.
அகில்–ஓர் மரம், அகில்வாசம்.
அகிற்கூட்டு – ஏலம், கருப்பூரம், எரிகாசு, சந்தனம், தேன் இவைகளின் கூட்டு; கூந்தலுக்கு வாசனையூட்டப்டயன்படுவது.
அகுணம் – குற்றம், 2. குணவீனம், 3. இலட்சணமின்மை.
அகூபாரம்–ஆமை, 2. கடல்.
அஃசைதல்–(ஒ.நா பெ) எரிதல், 2. ஒடித்தல், 3. களிர்த்தல், 4. வருந்தல்.
அஃகைத்தல்–(ஒ.நா. பெ) அடித்தல், 2. ஒட்டுதல், 3. முறித்தல், 4. வருத்தல்.
அகோ–ஓர் அதிசயச்சொல்.
அகோசரம்–அறியொணமை.
அகோபிலம்–ஒரு விஷ்ணுதலம்.
அகோரம் – கொடுமை, 2. சிவன் ஐம் முகத்தொன்று.
அகோராத்திரம்–பகலுமிரவும்.
அக்கசாலை–கம்பட்டசாலை, 2. அணிகலன் செய்யுமிடம்.
அக்கடா–ஓய்வு குறிக்கும் ஓர் இடைச்சொல். (உ-ம்) இத்தொல்லை ஒழிந்தால் அக்கடாவென்றிருக்கலாம்.
அக்கணம்–அந்த நிமிஷம்.
அக்கதம் – அட்சதை, 2. பங்கப்படாதது.
அக்கதேவி–சோணைப்புல்.
அக்கதை–மங்கலவரிசி.
அக்கபாதன் – நியாய சூத்திரஞ்செய்த கௌதம முனிவன்.
அக்கமாலை–உருத்திராக்கமாலை.
அக்கம்–தானியம், 2. கயிறு, 3. பக்கம்.

அக்கம்–கண், 2. உருத்திராட்சம்.
அக்கரம் – அழியாதது, 2. எழுத்து, 3. பிரமம்.
அக்கரன்–அழிவில்லாதவன், 2. கூடல்சங்கன்.
அக்கராகாரம்–ஒரு பூண்டு.
அக்கரை–அவசியம்.
அக்கன்–கருடன், 2. குருடன், 3. காய்.
அக்கா–தாய்.
அக்கா–தமக்கை, 2. மூதேவி.
அக்காரம்–சருக்கரை, 2. நீலி.
அக்காரவடிசில்–சர்க்கரையன்னம்.
அக்காள்–அக்கா.
அக்கி – கண், 2. அக்கினி கரப்பன், 3. உஷ்ணம், 4. அக்கினி.
அக்கியாதம்–மறைவு.
அக்கியானம்–அஞ்ஞானம்.
அக்கிரகண்ணியன்–சபையில் முதல் வனுக மதிக்கப்படுபவன்.
அக்கிரகாரம்–பார்ப்பனச்சேரி.
அக்கிரசம்பாவனை–முன்மரியாதை.
அக்கிரசன்மன்–அண்ணன், 2. பிராமணன்.
அக்கிரதாம்பூலம்–முதற்றும்பூலம்.
அக்கிரமம் – கொடுமை, 2. ஒழுங்கின்மை.
அக்கிராரம்–அகிரகாரம்.
அக்கினி – நீ, 2. அக்கினிபகவான், 3. செங்கொடிவேலி.
அக்கினிகாரியம் – ஓமத்தீவளர்த்தல்.
அக்கினிகோத்திரம் – யாகமிருபத்தொன்றில் ஒன்று.
அக்கினிட்டோமம்–சோமயாகம்.
அக்கினித்தம்பம்–நெருப்புச் சுடாமற் செய்யும் வித்தை.
அக்கினிப்பிரவேசம்–தீயிற்குதித்தல்.
அக்கினிப்பிழம்பு–நெருப்புச் சுவாலை.
அக்கினிமூலை–தென்கிழக்கு மூலை.
அக்கு–பலகறை, 2. சங்குமணி, 3. உருத்திராட்சம், 4. எருத்துத்திமில், 5. எலும்பு.
அக்குரூரன் – ஸ்ரீகிருஷ்ணன் தகப்பனுடன் பிறந்த ஒரு யாதவன்.
அக்குரோணி – 21,870 யானையும், 65,610 குதிரையும், 21,870 தேரும், 1,09,350 காலாளும் கொண்ட ஒரு சேனைத்தொகை.
அக்குல்லி–உக்காரி, 2. சிற்றுண்டி.
அக்குள்–கக்கம்.
அக்கை–அக்கா.
அக்கோலம்–தேற்றாங்கொட்டை.
அக்கௌகிணி–அக்குரோணி.
அக்ரமம்–அக்கிரமம்.
அங்கசேட்டை–உடம்பினது சலனம், 2. கைமெய் காட்டு.
அங்கணம் – முற்றம், 2. சலதாரை, 3. சேறு, 4. வெண்காரம்.
அங்கணன்–சிவன், 2. மகா விட்டுணு, 3. அருகன்.
அங்கதம் – தோளணி, 2. பாம்பு, 3. பொய், 4. வசைச்சொல்.
அங்கத்தி – பண்டாரங்களே மரியாதையாகக கூப்பிடுந் தாங்களென்னும் பொருள் படுகிற ஒருசொல்.
அங்கநியாசம் – இருதயம் முதலிய உறுப்புகளிலே மந்திரத்தோடு கையாற்றொடுதல்.
அங்கபடி–குதிரையங்கவடி.
அங்கபிரதக்கணம் – தேகத்தால் புரண்டு வலமாகவருதல்.
அங்கம் – அவயவம், 2. உடல், 3. அடையாளம், 4. கட்டில், 5. ஓர் பாஷை, 6. ஓர் தேயம்.
அங்கயற்கண்ணி – மீனாட்சியம்மையார்.
அங்கயோகம் – எண்வகை யோகத்திலொன்று.
அங்கரக்கா–மெய்ச்சட்டை.
அங்கலாய்த்தல் – (தொ. பெ) துக்கித்தல், 2. இச்சித்தல்.
அங்கவடி–குதிரை ஏறும் படி.
அங்கவை – பெண்.
அங்காடி–கடைவீதி.
அங்காத்தல் – (தொ. பெ) வாய்திறத்தல், 2. கொட்டாவி விடல்.
அங்காரகன்–நெருப்பு, 2. செவ்வாய்.
அங்காளம்மை–காளி.
அங்காளி–அங்காளம்மை.

அங்கி–சட்டை, 2. கார்த்திகை, 3. அக்கினி.
அங்கிகரி–ஏற்றுக்கொள்.
அங்கிகாரம்–ஏற்றுக்கொள்கை.
அங்கிசம்–உபநிடதம் முப்பத்திரண்டி னொன்று, 2. கூறு.
அங்கிதம்–உடற்றழும்பு, 2. பாட்டு டைத்தலைவன்.
அங்கிடுதத்தி–நாடோடி, 2. நிலைகெட் டவன்.
அங்கிடுதுப்பன்–நாடோடி.
அங்கிட்டோமம்–அக்கினிஷ்டோமம்.
அங்கிரி–கால்.
அங்கீகாரம்–சம்மதம்.
அங்கு–அவ்விடம்.
அங்குசம்–யானைத்தோட்டி.
அங்குசபாணி–விநாயகன், 2. காளி.
அங்குசரோசனம்–(வை-அ)கூகைநீறு.
அங்குட்டம்–பெருவிரல், 2. குறளுரு.
அங்குஷ்டான்–தையற்காரர் விரலிலே அணியும் கூடு.
அங்குரம்–மூளை, 2. குப்பைமேனி.
அங்குரித்தல் – (தொ. பெ) மூளைத்தல்.
அங்குலம்–விரலகலம் ($\frac{1}{12}$ அடி).
அங்குலி – விரல், 2. யானைக்கைநுனி 3. மோதிரம்.
அங்குலிகம்–மோதிரம்.
அங்கூரம்–தளிர்.
அங்கை–உள்ளங்கை.
அங்ஙனம்–அவ்விடம், 2. அவ்விதம்.
அசகசாந்தரம் – ஆட்டுக்கும் யானைக் கும் உள்ள பேதம்.
அசகம்–மலையாடு.
அசகாயம்–சகாயமின்மை.
அசக்கியம்–இயலாமை, 2. நாகமணல்.
அசங்கதம்–இகழ்ச்சி, 2. ஒழுங்கின்மை.
அசங்கியம்–அருவருப்பு.
அசங்கு–அசை.
அசங்கை–மதிப்பின்மை.
அசஞ்சலம்–அசைவின்மை.
அசடன்–கீழ்மகன், 2. சோம்பேறி.
அசடு–கீழ்மை, 2. குற்றம், 3. உலோ கங்களிற் பேரும் பொருக்கு.
அசட்டை–பராமுகம், 2. மதியாமை.
அசதி–சிரித்துப்பேசுகை, 2. சடுதி, 3. சோர்வு. 4. ஔவையாரால் புகழ்ந்து பாடப்பெற்ற ஓர் இடையன்.
அசதியாடல்–(தொ. பெ) மிகுதியாகச் சிரித்துப் பேசுதல்.
அசத்தன்–வலிவில்லாதவன், 2. உல கப்பற்றில்லாதவன்.
அசத்தி–பலவீனம்.
அசத்தியம்–பொய்.
அசத்து–தீயது, 2. மாயை.
அசத்துக்கள்–அற்பர்.
அசந்தர்ப்பம்–சமயமின்மை, 2. சரிப் படாமை.
அசபம்–அசபா என்னும் ஓர் மந்திரம்.
அசபை–அசபா.
அசப்பியம்–சபையில் ஏற்காதசொல்.
அசமந்தம்–மலையத்தி, 2. மந்தகுணம், 3. சம்பந்தமின்மை.
அசமயம்–ஒவ்வாச் சமயம்.
அசம்–ஆடு, 2. மூவருடகெல், 3. வெங் காயம்.
அசம்பவம்–அதிசயம், 2. சிருக்க நூலின் முகசுற்றத்திலொன்று, 3. பிற வாமை.
அசம்பாவிதம்–சம்பவிக்கக்கூடாதது.
அசம்பிரேட்சிதம்–ஆராய்வின்மை.
அசம்மதம்–சம்மதமின்மை.
அசரம்–அசைவில்லாதது.
அசரீரி–ஆகாசவாணி.
அசரை–ஓர் மீன்.
அசர்–தலைச்சுண்டு.
அசர்தல்–(தொ.பெ) அயருதல்.
அசலம்–அசையாதிலை, 2. மலை.
அசல்–அருகாமை, 2. உயர்ந்தது, 3. முதற்பிரதி.
அசறு–தலைச்சுண்டு.
அசனம்–சோறு, 2. போசனம், 3. வே ங்கைமரம்.
அசனி–இடி, 2. வச்சிராயுதம்.
அசன்–பிறப்பில்லாதவன், 2. பிரமன்.
அசா–தளர்ச்சி.
அசாகசம்–பொய்.
அஜாகளம்–ஆட்டின் அதர்.
அசாக்கிரதை–விழிப்பின்மை.

அசாதசத்துரு–தனக்குப்பகைவரில்லா தவன், 2. தருமபுத்திரன்.
அசாதாரணம் – சிறப்பு, 2. பொது வின்மை.
அசாத்தியம் – இயலாமை, 2. குண மாகாமை.
அசாவேரி–ஓர்ராகம்.
அசி–வாள்.
அசிங்கம்–அவலக்ஷணம்.
அசிதம்–சிவாகமம், 2. கருமை.
அசித்து–சடம்.
அசிந்தியம்–ஒரெண், 2. சிந்தைக்கெட் டாமை.
அசிபதம்–தத்துவமசி என்னும் மஹா வாக்கியத்தின் மூன்றும் பதம்.
அசிரத்தை–சிரத்தையின்மை.
அசினம்–தோலாசனம்.
அசீரணம் – செரியாமை, 2. பசியின் மை.
அசுசி–சுத்தமின்மை, 2. அருவருப்பு.
அசுணமா–கேகயப்புள்.
அசுத்தம்–சுத்தமின்மை.
அசுத்தி–அழுக்கு.
அசுபதி–அசுவினி.
அசுபம்–அமங்கலம்.
அசுப்பு–சடுதி.
அசும்பு–வழுக்கு நிலம், 2. கிணறு, 3. பொல்லா நிலம்.
அசுரகுரு–சுக்கிரன்.
அசுரசந்தி – இரணியவேளை, 2. சாயங் காலம்.
அசுரர்–இராக்கதர்.
அசுவதாட்டி–குதிரையின் வேகம்.
அசுவத்தம்–அரசமரம், 2. அத்திமரம்.
அசுவத்தாமன்–துரோணன் மகன்.
அசுவமேதம்–ஓர் யாகம்.
அசுவம்–குதிரை.
அசுவினி–ஒரு நட்சத்திரம்.
அசூயை–பொறுமை, 2. அவதூறு.
அசூர்–சமுகம்.
அசேஷம்–முழுமை.
அசேதனம்–அறிவின்மை.
அசை–அசை நிலை, 2. இசைப்பிரிவு, 3. செய்யுளுறுப்பி லொன்று.
அசைதல் – (தொ. பெ) ஆடுதல், 2. இருத்தல், 3. உலாவல், 4. சோம் புதல், 5. கலங்குதல்.
அசைதன்னியம்–அறிவில்லாதது.
அசைத்தல்–(தொ பெ) ஆட்டல், 2. கட்டுதல், 3. சொல்லுதல்.
அசைபோடல்–(தொ. பெ) இரைமீட் டல்.
அசையாமணி–ஆராய்ச்சி மணி, முக் கியமான வேலைகளில் அடிக்கு மணி.
அசையிடல் – (தொ. பெ) அசைபோ டல்.
அசைவு–(தொ பெ) ஆட்டம், 2. சஞ் சலம், 3. சோர்வு.
அசோகம் – சோகமின்மை, 2. ஒரு மரம், 3. மன்மதன் கணை.
அசோகன்–அருகன்.
அசோகு–அசோகமரம்.
அசோதை–நந்தகோபன் மனைவி.
அச்சகாரம்–முன்பணம்.
அச்சணம்–அக்கணம், அந்த நிமிஷம்.
அச்சம்–பயம், 2. மகளிர் நாற்குணத்தி லொன்று, 3. தகடு, 4. இலேசு.
அச்சரம்–நாவில் வருமோர் வியாதி.
அச்சன்–தந்தை.
அச்சாணி–வண்டி சக்கரத்திற் இடும் கடையாணி.
அச்சாரம்–முன்பணம்.
அச்சி–ஓர் தேசம்.
அச்சி நறுவிலி–நறுவிலிமரம்.
அச்சு – அடையாளம், 2. உயிர், 3. வண்டி யச்சு, 4. கட்டளைக்கருவி, 5. உயிரெழுத்து.
அச்சுதம்–கெடுதலின்மை.
அச்சுதன்–அழிவில்லாதவன், 2. மகா விஷ்ணு.
அச்சுவதி–அசுவினி.
அச்சுவத்தாமா–ஒரு யுத்தவீரன்.
அச்சுவம்–குதிரை.
அச்சுவினி–அசுவினி.
அச்சுவினிதேவர்–தேவ மருத்துவர்.
அச்சுறல்–(தொ. பெ) பயப்படுதல்.
அச்சுறுத்தல் – (தொ. பெ) பயப்படுத் தல்.

அச்சோ–ஓர் அதிசயச்சொல், 2. ஓரிரக்கச்சொல்.
அஞர்–துன்பம்.
அஞ்சம்–அன்னப்புள்.
அஞ்சலி–கும்பீடு.
அஞ்சலிகை–வெளவால்.
அஞ்சல்–(தொ. பெ) பயப்படுதல், 2. தபால்.
அஞ்சனப்பெட்டி–மை வைத்திருக்கும் பெட்டி.
அஞ்சனம்–கண்ணுக்கிடுமை, 2. கறுப்பு, 3. இருள், 4. திசையானைகள் எட்டனுள் மேற்றிசையானை.
அஞ்சனவண்ணன்–திருமால்.
அஞ்சனவித்தை–மறைந்த பொருளைக் காண்பிப்பது.
அஞ்சனை–அனுமன்தாய்.
அஞ்சாமை–பயப்படாமை.
அஞ்சிக்கை–பயம்.
அஞ்சு–ஐந்து.
அஞ்சுகம்–கிளி.
அஞ்சுதல் – (தொ. பெ) பயப்படுதல்.
அஞ்சுருவாணி–அச்சாணி.
அஞ்ஞதை–அறியாமை.
அஞ்ஞன்–அறிவிலான்.
அஞ்ஞாதம் – பிறர் அறியாமை, 2. மறைவு.
அஞ்ஞானம்–ஞானமின்மை.
அடகு–இலேக்கறி, 2. கொதுவை.
அடக்கம்–ஒடுக்கம், 2. கீழ்ப்படிவு, 3. பிரேதமடக்குகை.
அடக்கு–கீழ்ப்படுத்து, 2. குறை.
அடங்கலர்–பகைவர்.
அடங்கல்–முழுதும்.
அடங்குதல்–(தொ. பெ) அமைதல்.
அடடா–அதிசயக்குறிப்பு.
அடத்தி–வாசி, (வட்டமாகக் கழிக்கும் காசு).
அடர்ப்பம்–வெற்றிலேப்பை, 2. அம்பட்டன் கருவிப்பை.
அடப்பனூர்–நெய்தற் றலேவனது பட்டப்பெயர்.
அடமானம்–அடைமானம்.
அடம்–சஞ்சாரம்.
அடம்பு–அடம்பங்கொடி.
அடர்–செறிவு, 2. தகடு.
அடர்த்தி–நெருக்கம்.
அடர்ப்பம்–நெருக்கம்.
அடவை–சாம்பல், 2. போர்க்களம்.
அடல்–வலி, 2. போர், 3. வெற்றி.
அடவி–காடு, 2. சோலே, 3. கூட்டம்.
அடாசு–மட்கிச் செத்தது.
அடாஞ்ஞை–ஓரிராகம்.
அடாதது–தகாதது.
அடார் – புலி முதலியவைகளே அகப்படுத்தும் பொறியாகிய கல்லடார்.
அடாவந்தி–அநியாயம், 2. துன்பம்.
அடி–ஆதி, 2. வமிசவழி, 3. செய்யுளிலேருறுப்பு, 4. கால், 5. காற்சுவடு, 6. கீழ்.
அடி–(வி) வீசு, 2. மோது, 3. கொல்லு.
அடிகள்–கடவுள், 2. முனிவர், 3. குருக்கள்.
அடிகோலல்–(தொ. பெ) முயற்சிசெய்தல்.
அடிக்கடி–பலமுறை.
அடிக்குடி–அடிச்சேரி.
அடிக்குள்–உடனே.
அடிசில்–சோறு
அடிச்சால்–உழவின் முதற்சால்.
அடிச்சி–அடியாள்.
அடிச்சுவடு–காற்சுவடு.
அடிச்சேரி–சமீபகிராமம்.
அடிஞானம்–முக்கிக்குரிய ஞானம்.
அடிதலை–கீழ் மேல், 2. ஆதியந்தம்.
அடித்தல்–(தொ பெ) அறைதல்.
அடித்தலம்–கீழிடம், 2. அஸ்திவாரம்.
அடித்தழும்பு–காற்சுவடு, 2. அடிபட்ட தழும்பு.
அடிநா–நாவினடி.
அடிபணிய–(வி) நமஸ்காரம் செய்ய.
அடிபிடி–சண்டை.
அடிபெயர்தல்–(தொ.பெ) விலகுதல்.
அடிப்படுத்தல்–(தொ. பெ) கீழ்ப்படித்தல்.
அடிப்படை–ஆதாரம்.
அடிப்பட்ட சான்றோர் – பரம்பரைப் பெரியோர்.

அடிப்பந்தி–முதற்பந்தி.
அடிப்பாடு–பழக்கம், 2. பாதை.
அடிமடி–உள்மடி.
அடிமடை–முதல்மடை.
அடிமுடி–வரலாறு, 2. ஆதியந்தம்.
அடிவாரம்–மலைச்சாரல்.
அடிவானம்–திகாந்தம்.
அடிவீழ்தல்–(தொ.பெ) வணங்கல்.
அடிவெண்குருத்து–முருங்கு.
அடிவைத்தல்–(தொ.பெ) நிலையடல், 2. தடக்கத் தொடங்கல்.
அடுகலம்–சமையல்செய்யும் பாத்திரம்.
அடுகளம்–யுத்தபூமி.
அடு–(வி) தீயிற் பாகமாக்கு, 2. சேர்.
அடுக்கம்–மலைப்பக்கம்.
அடுக்கல்–(தொ.பெ) ஒன்றன்மேல் ஒன்றுவைத்தல், 2. குவித்தல்.
அடுக்கல்–(பெ) மலை.
அடுக்களை–சமையல் வீடு.
அடுக்கு – வரிசை, 2. அடுக்குச்சொல், 3. சேர்மானம்.
அடுசிலக்காரம்–தெங்காயுருவி.
அடுதல் – (தொ. பெ) கொல்லல், 2. சமைத்தல், 3. மேற்கொள்ளல்.
அடுத்தல்–(தொ. பெ) கிட்டல், 2. சம்பவித்தல், 3. சேர்தல்.
அடுப்பங்கரை–அடுப்பின்பக்கம்.
அடுப்பு–சேர்கை, 2. பரணிகாள், 3. அழற்சம், 4. தீவாய்ப்பக்கம்.
அடை–ஓர் பணிகாரம், 2. இலை, 3. கனம், 4. கொதுவை, 5. அபபம்.
அடைகல் – மதகு அடைக்கும் கல், 2. கம்மப்பட்டடை.
அடைகாத்தல் – (தொ. பெ) கோழி முதலியவை அடைகிடத்தல்.
அடைகாய்–வெற்றிலை, பாக்கு.
அடைகிடத்தல்–குஞ்சு புறப்பட முட்டையைக் காத்தல்.
அடைகுளம் – வாய்க்கால் இல்லாத குளம்.
அடைக்கலக் குருவி–ஊர்க்குருவி.
அடைக்கலம் – சரண்புகல், 2. பாதுகாவற் கொப்பித்த பொருள், 3. புகலிடம்.
அடைக்கலாங்குருவி – அடைக்கலக் குருவி.
அடைசுதல் – (தொ.பெ) ஒதுங்குதல், 2. கிட்டுதல், 3. ஒதுக்குதல்.
அடைச்சுதல்–(தொ.பெ) செருகுதல்.
அடைதல்–(தொ. பெ) சேருதல், 2. பெறுதல், 3. கூடுதல்.
அடைத்தல் – (தொ. பெ) சேர்த்தல், 2. தடித்தல், 3. பூட்டல், 4. வெளியை மறைத்தல்.
அடைந்தோர்–உறவோர்.
அடைப்பம்–அம்பட்டனுயுதவுறை, 2. வெற்றிலைப்பை.
அடைப்பன்–மாடுகள் தொண்டையிற் காணும் ஓர் வியாதி.
அடைப்பு–மறைப்பு, 2. வேலி.
அடைப்பை–வெற்றிலைப்பை.
அடைமழை–விடாமழை.
அடைமாங்காய்–மாங்காய் பூறுகாய்.
அடைமானம்–நாடு, 2. உவமை.
அடைமொழி–விசேடண மொழி.
அடைய–(வி) சேர.
அடையலர்–பகைவர்.
அடையாளம்–அறிகுறி, 2. சின்னம்.
அடைவு–நாடு, 2 முறை.
அட்சதை–மங்கலவரிசி.
அட்சபாதன்–கௌதம ரிஷி.
அட்சம்–உருத்திராக்ஷம், 2. கண்.
அட்சய–ஒரு வருஷம்.
அட்சயதூணி–அருச்சுனனம்புக் கூடு.
அட்சயபத்திரம்–பிச்சைப் பாத்திரம்.
அட்சரகணிதம்–பீசகணிதம்.
அட்சரம்–எழுத்து.
அட்சி–கண்.
அட்சௌகிணி–அக்குரோணி.
அட்டகம்–எட்டின் கூட்டம், 2. வடமொழியிலுள்ள பிரபந்தம்.
அட்டகாசம்–பெருங்கை.
அட்டவணைக்கால்–மடித்தகால.
அட்டமம்–எட்டாவது.
அட்டமி–எட்டாந்திதி.
அட்டமூர்த்தி–சிவன்.
அட்டம்–எட்டு, 2 குறுக்கு, 3. பக்கம்.

அட்டல்–(தொ. பெ) நெருப்பிற் காய்ச் சுதல், 2. அழித்தல்.
அட்டவணை–வரிசைக்குறிப்பு.
அட்டவிஞ்சதி–இருபத்தெட்டு.
அட்டாக்கரம் – ஸ்ரீ மகாவிஷ்ணுவைப் பூஜிக்குமோர் மந்திரம்.
அட்டாதசம்–பதினெட்டு.
அட்டாதுட்டி – மிக்க துடிக்குத்த னம்.
அட்டாலம்–மேல்வீடு.
அட்டாலிகை–மேல்வீடு.
அட்டாவதானம் – ஒரேவேளையிலெட் டுக் காரியத்தைச் சிந்திக்கை.
அட்டாவா–ஓர் மரம்.
அட்டி–சடை, 2. அதிமதுரர்.
அட்டிகை–ஓர்வகைக் கழுத்தணி.
அட்டிமை–ஓமம்.
அட்டியல்–அட்டிகை.
அட்டில்–மடைப்பள்ளி.
அட்டுதல்–(தொ. பெ) வார்த்தல்.
அட்டுப்பு–காய்ச்சிய உப்பு.
அட்டை–நீர் வாழ்வனவற்றி லொன்று, 2. செருப்பினடி, 3. காகித அட்டை.
அட்டோலகம்–ஆடம்பரம்.
அணங்காடுதல்–(தொ. பெ) வெறியாடு தல்.
அணங்கு–தெய்வம், 2. தெய்வப்பெண், 3. அழகு, 4. ஆசை, 5. நோய், 6. கொலை, 7. அச்சம், 8. தேவர்க்காடும் கூத்து.
அணங்குதல்–(தொ. பெ) கொல்லுதல், 2. விரும்புதல், 3. அஞ்சுதல்.
அணங்குதாக்கு–(தொ. பெ) காமநெறி யாகத் தெய்வப்பெண் (மோகினி) பி டித்தல்.
அணம்–மேல்வாய்.
அணல்–கீழ்வாய், 2. மிடறு, 3. தாடி.
அணவல்–(தொ. பெ) நெருங்கல், 2. இணைதல்.
அணப்பல் (தொ. பெ) எய்த்தல்.
அணி–அழகு, 2. ஆபரணம், 3. கூட் டம், 4. அடுக்கு, 5. அலங்காரம், 6. படைவகுப்பு.
அணிகலச்செப்பு–ஆபரணப் பெட்டி.
அணிகலம்–ஆபரணம்.
அணிகம்–சிவிகை.
அணிகலன்–ஆபரணம்.
அணிஞ்சில்–அழிஞ்சில், 2. கொடி வேலி, 3. நொச்சி, 4. முள்ளி.
அணிதல்–(தொ. பெ) அலங்கரித்தல், 2. பூணல், 3. உடுத்தல்.
அணிநுணா–சித்தா என்னும் மரம்.
அணிநிதம்–கோபுரவாசலின்மேடை.
அணிந்துரை–பாயிரம்.
அணிமா–அணுவளவாகச் சுருங்கல்.
அணிமை–சமீபம்.
அணியம் – கப்பலின் முற்பக்கம், 2. படைவகுப்பு.
அணியல்–அணிதல், 2. மாலை.
அணில்–அணிற்பிள்ளை.
அணிவகுத்தல்–(தொ. பெ) படைவ குத்தல்.
அணிவிரல்–மோதிரவிரல்.
அணு – நுண்மை பானது, 2. சிறுமை, 3. ஆன்மா.
அணுகலர்–அபலார், 2. பகைவர்.
அணுகல்–(தொ பெ) கிட்டல்.
அணுக்கத் தொண்டர் – அந்தரங்க (சீடர்) அடியார்.
அணுக்கர்–சினேகர்.
அணுக்கு–சமீபம்.
அணுத்துவம்–அணுத்தன்மை.
அணுமை–சமீபம்.
அணுருபி–கடவுள், 2. ஆன்மா.
அவணை–வரம்பு, 2. அணைகட்டு, 3. மெத்தை, 4. முட்டி, 5. படிக்கை.
அவ்வணகயிறு–பசுவைப் பால் கறக்கக் கட்டுங் கயிறு.
அவணக்கட்டு–வரம்புக்கட்டு.
அவணதல் – (தொ. பெ) சேர்தல், 2. அவிதல்.
அவணதறி–யாணை கட்டும் கயிறு.
அவணயாடை–எணத்துகில்.
அவணயார்–பகைவர்.
அண்டகம்–குப்பைமேனி.
அண்டகடாகம்–அண்டகோள ஓடு.
அண்டகோசம் – முட்டை வடிவான அண்டம்.

அண்டங்காக்கை–உடல் முழுமையும் கருநிறமுடைய காகம்.
அண்டசம்–முட்டையிற் செனிக்கும் உயிர்கள்.
அண்டா–பெரும்பாத்திரம்.
அண்டபிண்டம்–பிரமாண்டமுந் தேகமும்.
அண்டமுகடு–அண்டத்தினுச்சி.
அண்டம்–முட்டை, 2. உலகம், 3. ஆகாயம், 4. பீசம்.
அண்டரண்டம்–தேவருலகு.
அண்டரண்டப்பட்சி–ஒரு பெரும் பறவை.
அண்டர்–தேவர், 2. இடையர், 3. பகைவர்.
அண்டர்பிரான்–மகாவிஷ்ணு, 2. சிவன்.
அண்டலர்–பகைவர்.
அண்டல்–(தொ. பெ) நெருங்கல்.
அண்டவாணர்–தேவதைகள்.
அண்டவாதம்–விரைவாதம்.
அண்டவாயு–ஓர் நோய்.
அண்டாகாரம்–முட்டைவடிவம்.
அண்டார்–பகைவர்.
அண்டிகம்–செங்காய்.
அண்டில்–மாடு முதலியவற்றின் கண்ணிற்பற்றும் ஒரு பூச்சி.
அண்டுதல்–(தொ. பெ) நெருங்குதல்.
அண்டை–சமீபம், 2. மூட்டு, 3. வரம்பு.
அண்ணாந்தாள்–கழுத்திற்கும் காலுக்கும் பூட்டுங்கயிறு.
அண்ணம்–மேல்வாய், 2. அண்ணை.
அண்ணல்–பெருமை, 2. பெருமையிற் சிறந்தோன், 3. தமையன், 4. அரசன், 5. புத்தன்.
அண்ணன்–தமையன்.
அண்ணை–உண்ணைக்கு.
அண்ணைத்தல்–(தொ. பெ) அங்காத்தல், 2. மேலேக்கல்.
அண்ணைமலை–அருணாசலம்.
அண்ணைவி–உபாத்தியாயன்.
அண்ணி–தமையன் மனைவி.
அண்ணித்தல்–(தொ. பெ) பொருந்துதல், 2. மதுரித்தல்.
அண்ணுதல்–(தொ. பெ) அணுகுதல் 2. பொருந்துதல்.
அண்பல்–மேல்வாய்ப்பல்.
அண்மு–கிட்டு.
அண்மை–சமீபம்.
அதகம்–மருந்து.
அதக்கு–(வி) கசக்கு, 2. இலக்கு, 3. குதப்பு.
அதடம்–செங்குத்து.
அதட்டம்–அரவுயிர்ப்பு, 2. நச்சுப்பல்.
அதட்டு–(வி) கண்டி, 2. உறுக்கு.
அதப்பியம்–சபைக்கடாத சொல்.
அதமதானம்–கடைப்படுதானம்.
அதமம்–கடைத்தரம்.
அதமன்–தாழ்ந்தவன்.
அதம்–தாழ்வு, 2. பள்ளம், 3. பாதாளம், 4. சங்காரம்.
அதமர்ணிகன்–வாங்கினகடனைத் தராதவன்.
அதமாங்கம்–கால்.
அதரம்–கீழுதடு, 2. உதடு.
அதரிகொள்ளுதல்–(தொ. பெ) கடாவிடுதல்.
அதரிதிரித்தல்–(தொ பெ) கடாவிடுதல்.
அதரித்திரன்–கன்னன், 2. செல்வன்.
அதருமம்–பாவம்.
அதர்–வழி, 2. புழுதி, 3. ஆட்டின் கழுத்தினெலும்பு.
அதர்கொளல்–(தொ பெ) வழிப்பறித்தல்.
அதர்கோள்–வழிப்பறி.
அதர்வணம்–நான்காம் வேதம்.
அதலகுதலம்–கலகம்.
அதலம்–கீழேழுலகத்தொன்று.
அதவம்–அத்திமரம்.
அதவிடம்–அத்திவிடயம் (ஒரு மூலிகை).
அதவு–அத்திமரம்.
அதவுதல்–(தொ. பெ) கொல்லுதல்.
அதழ்–பூவிதழ்.
அதளி–அமளி.
அதளா–ஓர் பெரும்பாத்திரம், 2. புளியதனை, 3. வயல் வெளியிற் கட்டுங் காவற் குடிசை.
அதள்–தோல்.

அதறு–பதறு.
அதனப்பிரசங்கி–அகங்காரி.
அதனம்–மிகுதி.
அதன்மம்–அதர்மம்.
அதாதா–உலோபி.
அதாலத்து–நியாயஸ்தானம்.
அதி–மிகுதிப்பொருளைக் காட்டும் அசைச்சொல்.
அதிகடம்–யானை.
அதிகண்டம்–மரணவஸ்தை.
அதிகப்பிரசங்கம்–மிகுதியாகப் பேசுகை, 2. தன் மேம்பாட்டுரை.
அதிகம்–மிகுதி, 2. பொலிவு, 3. மேன்மை, 4. இலாபம், 5. குருக்கத்தி.
அதிகரணம்–நிலைக்களம்.
அதிகன்–மேலானவன், 2. ஒருவள்ளல்.
அதிகாசம்–பெருநகை.
அதிகாயன்–மிகப் பெருஞ்சரீரமுடையவன், 2. இராவணன் மக்களில் ஒருவன்.
அதிகாரம்–அதிகரித்தல், 2. தலைமை, 3. ஆரம்பம், 4. நூற்கூறுபாடு, 5. உத்தியோகம், 6. ஒழுங்கு.
அதிகாரி–அதிபதி, 2. சம்பந்தமுடையவன், 3. தூல்செய்வித்தோன், 4. நூல் கேட்டற்குரியோன்.
அதிகாலை–விடியற்காலம்.
அதிகை–தொண்டைநாட்டிலே உள்ள ஒரு சிவஸ்தலம்.
அதிக்கிரமம்–அக்கிரமம்.
அதிங்கம்–அதிமதுரம்.
அதிசயம்–ஆச்சரியம், 2. புதுமை, 3. அற்புதம், 4. ஓரலங்காரம்.
அதிசயன்–அருகன்.
அதிசயித்தல்–அதிசயங்கொள்ளல்.
அதிசயோத்தி–மிகக்கூறுமோரலங்காரம்.
அதிசரம்–கெட்டியிர்ப்பு.
அதிசாக்கிரதை–மிகு விழிப்பு.
அதிசாரணம்–மாவிலிங்கு.
அதிசாரம்–உஷ்ணபேதி.
அதிசீக்கிரம்–மிகுசுறுக்கு.
அதிசூக்குமம்–மிகுநுண்மை.
அதிட்டச்செல்லி–இந்திரபாஷாணம்.
அதிட்டம்–நல்லனுபோகம், 2. மிளகு.
அதிட்டாதா–ஆளுமதிபதி.
அதிட்டானம்–நிலை, 2. காரியத்திற்குக் காரணம், 3. பட்டினம்.
அதிட்டித்தல்–(தொ. பெ) நிலைபடுத்தல், 2. ஆவாகனமாதல்.
அதிட்டேயம்–அதிட்டிக்கப்பட்ட பொருள்.
அதிதலசிலேட்டுமம்–ஒருவகை சிலேட்டுமநோய்.
அதிதவளம்–மிகு வெண்மை.
அதிதனு–பொன்.
அதிதாதா–பெருங்கொடையாளன்.
அதிதாரம்–இலக்கை.
அதிதி–காசிபப்பிரமாவின் மனைவிகளொருத்தி, 2. விருந்தாய் வந்தவன், 3. பரதேசி, 4 சப்தப் பிதிர்களிலொருவர்.
அதிதிசேவை–விருந்தினரை உபசரித்தல்.
அதிதிபூசை–பரதேசிக்கன்னமிடல்.
அதிதீவிரம்–மிகக்கடுமை.
அதிதெய்வம்–மேலான தெய்வம்.
அதிதேசம்–ஒப்புமைகாட்டி யுணர்த்துவது.
அதிதேவதை–குலதெய்வம்.
அதிநுட்பம்–மிக நுண்மை.
அதிபதி–தலைவன், 2. அரசன்.
அதிபறிச்சம்–வாலுழுவை யரிசி.
அதிபன்–எப்பொருட்கு மிறைவன், 2. இராசா, 3. எசமான்.
அதிபாதகம்–பெரும்பாதகம்.
அதிபாரகம்–கோவேறு கழுதை.
அதிபாரகன்–மிகு நிபுணன்.
அதிபீடிதம்–அதிகமாக விறுக்குதல்.
அதிபூச்சியர்–அதிகம் பூசிக்கப்படத்தக்கவர்.
அதிமதுரம்–மிகு இனிமை, 2. ஒருசரக்கு.
அதிமலம்–மாவிலிங்கைமரம்.
அதிமாமிசம்–கண்ணில் வரும் ஒருவகைத் தசைச் சுரப்பு நோய்.
அதிமிதம்–அளவின் மிக்கது.

அதிமுத்தம்–குருக்கத்தி.
அதிமுத்தி–சாயுச்சிய முத்தி.
அதியம்–அதிகம்.
அதியாமம்–முயற்புல்.
அதிரசம் – ஒரு பண்ணிகாரம், 2. இரசம்.
அதிரல்–மிகுதூறு.
அதிராகம்–கக்தகம்.
அதிராத்திரம் – யாகமிருபத் தொன்றி னொன்று.
அதிராயம்–அதிசயம்.
அதிரிசியம் – தோன்றுமை, 2. கடவுள், 3. கலிஞானம்.
அதிருஷ்டம் – பார்வைக்குத் தோன்றுமை, 2. நல்வினைப் பயன்.
அதிருப்தி–திருப்தியில்லாமை.
அதிரேகம்–மேம்பாடு.
அதிர்ப்பு – தாக்கியொலிக்கை, 2. நடுக்கம், 3. அச்சம்.
அதிலுத்தன் – பிறர் பொருளில் மிக்க ஆசையுடையவன்.
அதிலோபம்–தன்பொருளைப் பிறர்க்குக் கொடுக்க விரும்பாமை.
அதிவருணச்சிரமி – வருணச்சிரமங் களைக் கடந்த ஆத்மஞானி.
அதிவன்னச்சிரமி–அதிவருணச்சிரமி.
அதிவாசம்–உபவாசத்திற்கு முதனாள், 2. கிரியை ஆரம்பர் சடங்கினொன்று, 3. மிகுவாசனை.
அதிவிடயம்–ஒரு மருந்து வள்ளு.
அதிவிடை–அதிவிடயம்.
அதிவிரகன்–மிக்க உபாயமுள்ளவன்.
அதிவிருஷ்டி–பெரு மழை.
அதிவினயம்–அதிகக் தீழ்ப்படிவு.
அதிவேகம்–மிகுகதி
அதிவேதனம்–மனவியைவிட வேறொரு ருச்சியை விவாகம்பண்ணல், 2. மிகக் கூலி.
அதீதகாலம்–இறந்தகாலம்.
அதீதம் – எட்டாதது, 2. கடந்தது, 3. கடவுளதோர் தன்மை.
அதீதன்–கடந்தவன், 2 பாசத்தினின்று விடுவிக்கப்பெற்றவன்.
அதீந்திரியம்–புலனுக்கெட்டாதது.
அதீனம்–உரித்து, 2. சார்பு.
அது – ஆருவது ஞெருமையுருபு, 2. அஃது.
அதுக்கல்–அடைசுசல், (தொ. பெ) 2. அடித்தல்.
அதுங்கு–ஒதுங்கு, 2. குழி.
அதுலம்–உவமையின்மை, 2. ஒரெண்.
அதுலன் – உவமை யில்லாதவன், 2. கடவுள்.
அதுல்லியம்–ஒப்பின்மை.
அதெந்து–பயப்படாதே எனப்பொருள் படும் ஒரு மொழி.
அதைத்தல்–(தொ. பெ) தாக்கிமீளல், 2. வீங்கல்.
அதைப்பு–தாக்கிமீளுகை, 2. வீக்கம்.
அதைரியம்–தைரியமின்மை.
அதோ–சேய்மைச் சுட்டு.
அதோகதி–இறங்குகை, 2. பள்ளம், 3. நரகம்.
அதோமாயை–ஒரு மாயை.
அதோமுகம்–கீழ்முகம், 2. ஆற்றுநீர்க் கழிமுகம்.
அத்தகடகம்–கைவளை.
அத்தகம் – ஆமணக்கு, 2. கருஞ்சீரகம்.
அத்தகிரி – சூரியன் அத்தமிக்கு மிடமாகக் கூறப்படும் மேற்குமலை.
அத்தகோரம்–நெல்லி.
அத்தசாமம்–நடுச்சாமம்.
அத்தநாரீசன் – தனதுடம்பிற் பாதி பெண்வடிவான சிவன்.
அத்தப்பிரகாரம் – காலேகால் நாழிகை கொண்டது.
அத்தமண்டபம்–கருப்பக்கிரக மண்டபம்.
அத்தமனம்–அஸ்தமிக்கும் காலம்.
அத்தமித்தல் – (தொ. பெ) மறைதல், 2. படிதல், 3. அற்றுப்போதல்.
அத்தம்–கை, 2. ஓர் நட்சத்திரம்.
அத்தம்–அர்த்தம்.
அத்தம்–வழி, 2. அருநெறி, 3. காடு, 4. கண்ணுடி, 5. குங்கிலியம் 6. அதிவிடயம்.
அத்தர்–ஓர் வாசனைத் தைலம்.

அத்தவாளம்-போர்வைச்சீலை, 2. காடு, 3. உல்லாசம்.
அத்தவனை—அவ்வளவு.
அத்தன்—கடவுள், 2. தகப்பன், 3. உயர்ந்தோன், 4. குரு.
அத்தன்மை—அம்மாதிரி.
அத்தாட்சி—திருஷ்டாந்தம்.
அத்தாணி—அரசிருக்கை.
அத்தாயம்-கடைச்சற் சக்கரத்தின் பிடி தடி.
அத்தான்—அக்காள் கணவன், 2. அத்தை மகன்.
அத்தி—ஓர் மரம்.
அத்தி—யானை, 2. திப்பிலி, 3. எலும்பு, 4. கொலை, 5. கடல்.
அத்திசுரம்—எலும்பைப்பற்றின சுரம்.
அத்திநாத்தி—உண்டு இல்லை.
அத்திபஞ்சரம்—எலும்புக்கூடு.
அத்திபாரம்—அடிப்படை.
அத்தியட்சன் — மேல் விசாரணைக்காரன்.
அத்தியந்தம்-அனந்தம், 2. ஒரெண்.
அத்தியயம்-அழிவு, 2. குற்றம்.
அத்தியயனம்—வேதமோதுகை.
அத்தியாசம்—ஆரோபம்.
அத்தியாசனம்—எகோதிட்ட ஆண்.
அத்தியாத்துமிகம் — தன்னால் வருந் துன்பம்.
அத்தியாபகன் - வேதமோது விப்போன்.
அத்தியாரோபம்—விபரீதவுணர்ச்சி.
அத்தியாவசியகம்-மிகுந்த அவசியம்.
அத்தியான்மிகம்—அத்தியாத்துமிகம்.
அத்திரசத்திரம்—அம்பும் வாளும்.
அத்திரம்—அம்பு, 2. கழுதை, 3. குதிரை, 4. மலை, 5. நிலையின்மை.
அத்திராசம்—பயமின்மை.
அத்திரி—உலைத்துருத்தி, 2. ஒட்டகம், 3. கழுதை, 4. குதிரை, 5. கோவேறு கழுதை, 6. மலை, 7. ஓர் முனிவர்.
அத்திரு—அரசமரம்.
அத்திவல—செருப்படை.
அத்தினபுரம்-பாண்டவர்களின் இராஜதானிப் பட்டினம்.
அத்தினி—நால்வகைப் பெண்களிலே ஒருத்தி, 2. பெண் யானை.
அத்து—அரைப்பட்டிகை, 2. சிவப்பு, 3. செவ்வை, 4. எல்லை.
அத்து—(வி) இசை, 2. சார், 3. துணைப் பற்று, 4. அடை.
அஸ்து—ஆகுக.
அத்துகமானி—அரசு.
அத்தூரிகம்—ஆமணக்கு.
அத்துவண—அவ்வளவு.
அத்துமம்—(வை. அ) அரத்தை.
அத்துலாக்கி—(வை. அ) கருஞ்சீரகம்.
அத்துவம்—வழி, 2. சிவப்பு.
அத்துவாக்காயம்—கருஞ்சீரகம்.
அத்துவாந்தம் - காலைமாலை வெளிச்சம்.
அத்துவானம்—பாழ்ங்காடு.
அத்துவிதம் — பரமாத்துமாவுஞ் சீவாத்துமாவு மொன்றென்கை.
அத்தூரம்—மரமஞ்சள்.
அத்தேயம்—களவுசெய்ய நினையாமை.
அத்தை—தலைவி, 2. குருவின் மனைவி, 3. தாய், 4. மாமி, 5. முன்னிலை யசைச்சொல்.
அத்தோ—அதிசய விரக்கச்சொல்.
அத்தோதயம் — அருத்தோதயம், ஒரு விசேட நாள்.
அநகம்—பாவமின்மை.
அநகன் — கடவுள், 2. பாவமில்லாதவன்.
அநங்கம்—ஆகாயம், 2. மல்லிகை.
அநங்கன்—மன்மதன்.
அநந்த சதுர்த்தசி — ஸ்ரீ விஷ்ணுவைப் பூசிக்கும் ஒரு விசேஷதினம். இது புரட்டாசி மாதத்துச் சுக்கிலபக்கச் சதுர்த்தசி திதியில் வரும்.
அநந்தசயனம்—சர்ப்பசயனம், 2. ஒரு விஷ்ணு ஸ்தலம்.
அநந்தசாயி—மகாவிட்டுணு.
அநந்தசொரூபி—கடவுள்.
அநந்தம்—முடிவில்லாதது.
அநந்தரம்—பின்.
அநந்தவிரதம் — வைஷ்ணவர் அனுஷ்டிக்கும் ஒரு விரதம்.

அநந்தன் – ஆதிசேடன், 2. கடவுள், 3. அருகன், 4. சிவன், 5. திருமால்.
அநந்நியம்–அன்னிய மல்லாதது
அநபாயம் – அழிவின்மை, 2. குறைவின்மை, 3. தேய்வின்மை.
அநபாயன்–அழிவில்லாதவன், 2. சிவன், 3. இப்பேர்கொண்ட ஒரு சோழன்.
அநருகர்–தகுதியற்றவர்.
அநர்த்தம்–பயனின்மை.
அநலம்–அக்கினி, 2. உட்டணம்.
அநலன்–அக்கினி, 2. அட்டவசுக்களிலொருவன்.
அநலி–சூரியன், 2. நெருப்பு.
அநல்–அக்கினி, 2. உட்டணம், 3. கொடிவேலி, 4. பித்தம்.
அநவத்தானம்–தவறுன நிலை.
அநவரதம்–எப்பொழுதும்.
அநாகதம்–அறியப்படாதது, 2. சொல்லப்படாதது, 3. வெளுக்கப்படாதும் புதியதுமான சீலை, 4. ஆறுசாங்களுளொன்று.
அநாகாலம்–பஞ்சகாலம்.
அநாசாரம்–ஒழுக்கமின்மை.
அநாசாரியன்–ஆசிரியனல்லாதவன்.
அநாசாரிதம் – சார்பில்லாதது, 2. பற்றுகோடாகாதது.
அநாதம்–ஆதரவற்றது.
அநாதரட்சகர்–கடவுள்.
அநாதரம்–மதியாமை.
அநாதன்–ஆதரவில்லாதவன்.
அநாதி–கடவுள், 2. புராதனம்.
அநாதிமலமுத்தர் – இயல்பாகவே பாசங்களின் நீங்கினவர்.
அநாதியன்–கடவுள்.
அநாதை–திக்கற்றவள், 2. ஒரு சத்தி.
அநாத்துமா–ஆத்துமாவல்லாத பதார்த்தம்.
அநாமதேயம்–பெயரில்லாதது.
அநாமயம்–நோயின்மை.
அநாமயன்–கடவுள்.
அநாமிகை–ஆழிவிரல்.
அநாயகம்–முதன்மையின்மை.
அநாயாசம்–இலகு, 2. சோம்பின்மை.
அநாரதம்–எப்போழ்தும்.
அநாரியர்–மிலேச்சர்.
அநாவிருஷ்டி–மழைக்குறைவு.
அநிகம்–சங்கம் மூன்றுகொண்ட சேனை
அநிக்கிரகம்–கட்டுப்பாடின்மை.
அநிசம்–நித்தியம்.
அநிச்சை–இச்சையின்மை.
அநிட்டை–உறுதியின்மை.
அநித்தம்–நிலையின்மை.
அநிதீதியம்–நிலையின்மை.
அநியாயம்–நீதியின்மை.
அநிருத்தன்–ஸ்ரீ கிருஷ்ணன் பௌத்திரன்.
அநிர்தம்–மாயை.
அநிலம் காற்று.
அநிலன்–வாயுதேவன்.
அநீகம்–சேனை.
அநீகினி–சேனை.
அநீச்சுவரன்–கடவுளில்லையென்பவன்.
அநீதம்–நீதியின்மை.
அநீதி–நீதிகேடு.
அநு–கதுப்பு.
அநு–ஓர் உபசருக்கம்.
அநுகமனம்–தனது நாயகனோடு உடன்கட்டையேறுதல்.
அநுகம்பம்–கிருபை.
அநுகரணம்–ஒப்பாதல்.
அநுகன் – கணவன், 2. பின்தொடர்வோன், 3. வேலைக்காரன்.
அநுகுணம்–தகுதியானது, 2. அநுகூலமானது.
அநுகூலம்–விக்கினமின்மை, 2. காரியசித்தி.
அநுகூலித்தல் – அநுகூல மூடையதாதல்.
அநுக்கிரகம்–கிருபை.
அநுக்கிரமணி–விஷயவாரிசை.
அநுக்ரஹம்–அநுக்கிரகம்.
அநுசந்தானம்–இடையறாது சிந்தித்தல்.
அநுசந்தித்தல் – (தொ. பெ) சிந்தித்தல்.
அநுசரணை–இசைவு, 2. சார்பு.
அநுசரி–சார்ந்து நட.
அநுசன்–தம்பி.
அநுசாசனம்–கட்டளை.

அநுசிதம்–பொய், 2. தகுதியின்மை.
அநுசை–தங்கை.
அநுசைவர்–சிவதீக்ஷை பெற்ற கூத்தி ரியரும் வைசியரும்.
அநுஞ்ஞை–கட்டளை.
அநுடம்–ஒரு நக்ஷத்திரம்.
அநுட்டானம்–ஒழுக்கம், 2. தவம்.
அநுட்டித்தல்–(தொ. பெ) சித்தாந்தப் படுத்தல்.
அநுதாத்தம்–படுத்தலோசை.
அநுதாபம்–பின் இரங்கல்.
அநுதினம்–நாடோறும்
அநுத்தம்–பொய்.
அநுநயம்–ஆசாரக்கிரமம், 2. மரியாதை, 3. விண்ணப்பம்.
அநுநாசிகம்–மெல்லெழுத்து.
அநுநாதம்–எதிரொலி.
அநுபந்தம்–அபிப்பிராயம், 2. ஒற்றுமை, 3. தொடர்ச்சி.
அநுபந்தித்தல்–(தொ. பெ) கூடிப் பற்றித்தல்
அநுபல்லவி–கீர்த்தனைபின் இரண்டாம் உறுப்பு.
அநுபவம்–தானே கண்டறியும் அறிவு, 2. கைவல்லியம்.
அநுபவி–ஞானி.
அநுபவித்தல்–(தொ. பெ) துய்த்தல்.
அநுபாடணம்–சொன்னதைப் பின்னுஞ் சொல்லுதல்.
அநுபாதம்–சரவங்களிலொன்று.
அநுபாலனம்–பாதுகாத்தல்.
அநுபாவம்–கன்காட்டுதல் முதலிய அங்கசேட்டைகளினால் மனக்கருத்தைவிளக்குங்குறி, 2. நிச்சயம், 3. திட எண்ணம்.
அநுபாவியம்–அனுபவிக்கத்தக்கது.
அநுபானம்–மருந்துடன் குடிக்கும் பானம்.
அநுபூதி–தான் கண்டறிந்ததும் பிறர்க்குச் சொல்ல முடியாததுமான அறிவு.
அநுப்பிராசம்–வழியெதுகை.
அநுமகுண்டம்–சேதுவிலுள்ள ஒரு புண்ணிய தீர்த்தம்.
அநுமக்கொடியோன்–அருச்சுனன்.
அநுமதம்–அங்கீகரிப்பு.
அநுமதி–சம்மதி.
அநுமந்தன்–அனுமான்.
அநுமானம்–ஒரு பிரமாணம், 2. சங்கேதம்.
அநுமான்–அஞ்சனை யென்பவளுடைய குமாரன்.
அநுமேயம்–அநுமானப் பிரமாணத்தாலறியப்பட்டது.
அநுமோதனம்–சம்மதம்
அநுயோகம்–விசாரணை.
அநுரதம்–ஆசையாயிருத்தல்.
அநுரதி–அன்பு, 2. மதிப்பு.
அநுராகபோகம்–காமவனுபவம்.
அநுராகம்–ஆசை.
அநுரூபம்–ஒத்தவடிவம்.
அநுலோமன்–உயர்குலத் தந்தைக்கும் இழிகுலத் தாய்க்கும் பிறந்த பிள்ளை.
அநுவசனம்–ஒத்தவாக்கியம்.
அநுவதித்தல்–(தொ. பெ) முற்கூறிய பொருளை ஒரு நிமித்தத்தால் பின்னு மெடுத்துக் கூறல்.
அநுவயித்தல்–(தொ. பெ) இலக்கண முறையே ஒரு வாக்கியத்தில் எழுவாய் பயனிலைகள் தெரியுமாறு சொற்களைக் கூட்டிச் சொல்லல்.
அநுவருத்தித்தல்–(தொ. பெ) தொடருதல்.
அநுவாகம்–வேதத்தினுட்பிரிவு.
அநுவாதம்–முன்பு கூறியபொருளை யாதேனுமொரு காரணத்தாற் பின்னும் கூறல்.
அநுவிருத்தி–இசைபச் செய்தல், 2. சேர்ந்திருத்தல்.
அநுவுரு–ஒத்த ரூபம்.
அநேகம்–பல.
அநேகன்–கடவுள்.
அந்தகம்–ஆமணக்கு, 2. ஒரு சன்னி நோய்.
அந்தகன்–நமன், 2. குருடன், 3. சனி, 4. சவுக்காரம்.
அந்தகாரம்–இருள், 2. நரகம், 3. மனவிருள்.
அந்தகாரி–சிவன்.

அந்தகாலம்–மரணகாலம்.
அந்தகோரம் – } நெல்லிமரம்.
அந்தகோலம்– }
அந்தக்கரணம் – மனம், 2. புத்தி, 3. ஆங்காரம், 4. சித்தம்.
அந்தக்கேடு–அழகேனம்.
அந்தணத்துவம்–அந்தணனந்தன்மை.
அந்தணர்–வேதத்தின் அந்தத்தை அணவுவோர், 2. அழகிய தட்பத்தினையுடையவர், 3. முனிவர், 4. பிராமணர்.
அந்தணன்–கடவுள், 2. பிரமன், 3. சிவன், 4. அருகன், 5. முனிவன், 6. பிராமணன், 7. சனி, 8. வியாழம்.
அந்தணாளர்–முனிவர், 2. அரசர்க்குறுதிச் சுற்றத்தி னொருவர், 3. பார்ப்பார்.
அந்தணாரிபி – விஷத்தைப் போகருடம் மருந்து.
அந்ததரம்–சித்தாந்தம்.
அந்தஸ்து–நிலை, 2. ஒழுங்கு.
அந்தப்புரம்–பெண்களது அறை, 2. மன்னன் தேவி வசிக்குமிடம்.
அந்தம்–அழகு, 2. முடிவு, 3. சாவு, 4. கஸ்தூரி.
அந்தரங்கம்–ஆலோசனை, 2. இரகசியம், 3. ஏகாந்தம்.
அந்தரச்சிந்து–கற்பாஷாணம்.
அந்தரதுந்துபி–ஒரு வாச்சியம்.
அந்தரத்தாமரை–ஆகாயத்தாமரை.
அந்தரம்–வெளி, 2. இடை, 3. ஆகாயம், 4. தேவர் கோயில், 5. தனிமை, 6. முடிவு, 7. பேதம், 8. அளவு, 9. காலம், 10. இருள், 11. கூட்டம்.
அந்தரவல்லி–கொல்லன் கோவை.
அந்தராயம்–தீமை.
அந்தரி–ஆகாயவாணி, 2. துர்க்கை, 3. பார்வதி.
அந்தர்–உள்.
அந்தரர்–தேவர்.
அந்தராத்துமா–உயிர்க்குளுயிராயிருப்பவன்.
அந்தராளம் – நடு, 2. கர்ப்பகிரகம், 3. இடைக்காலம்.
அந்தரான்மா–அந்தராத்துமா.
அந்தரிட்சம்–ஆகாயம்.
அந்தரித்தல்–(தொ. பெ) நிலைகெடல், 2. மனந்தடுமாறல்.
அந்தரியாகம்–உட்பூசை.
அந்தரியாமி–கடவுள்.
அந்தரியாமித்துவம் – ஆன்மாவொடு கலந்திருத்தல்.
அந்தரீயம்–உள் உடை.
அந்தர்க்கதம்–மறைந்திருக்கை.
அந்தர்த்தானம்–மறைவிடம்.
அந்தர்ப்புரம்–அந்தப்புரம்.
அந்தர்முகம்–உண்ணோக்கிய முகம்.
அந்தவலை–முடிவு, 2. சந்திப்பு, 3. மேடு, 4. பேறு.
அந்தளம்–கவசம்.
அந்தளி–தேவர்கோயில்.
அந்தன்–குருடன், 2. சனி.
அந்தாதி–நின்றபாட்டினிறுதியும் வரும் பாட்டின் முதலும் ஒன்றாய் வருமோர் தொடை.
அந்தாளி–ஒருவகைப் பண்.
அந்தி – மாலைக்காலம், 2. முத்தெருக் கூடுமிடம், 3. இரா, 4. சூரியாஸ்தமனத்தில் தோன்றும் செவ்வானம்.
அந்திகம்–அயல்.
அந்திகாவலன்–மாலை சமயத்தில் தெருக்களில் காவலாக உலாவும் தேவகை.
அந்திமகை – இரா, 2. பெண், 3. ஓர் கண்ணோய், 4. அக்காள், 5. அடுப்பு.
அந்திக்காலம்–சாயங்காலம்.
அந்திசந்தி – எப்பொழுதும், 2. காலை மாலை.
அந்தித்தல்–(தொ. பெ) பொருந்தல்.
அந்திபகல்–இராப்பகல்.
அந்திப்பொழுது–மாலைக்காலம்.
அந்திமகாலம்–இறுதிக்காலம்.
அந்திமந்தாரை–ஒரு பூமரம்.
அந்திமான்–இடையெழு வள்ளல்களி லொருவன்.
அந்தியகாலம்–மரணகாலம்.
அந்திரக்கொடிச்சி–கெந்தகம்.
அந்தியம்–மரணம், 2. முடிவு.
அந்தில்–அவ்விடம், 2. ஓரசைச் சொல்.

அந்திவண்ணன்–சிவன்.
அந்து–நெற்பூச்சி.
அந்துகம் – யானைச்சங்கிலி, 2. கைச் சங்கிலி.
அந்தோ–அதிசய விரக்கச் சொல்.
அந்தோர்–நெல்லிமரம்.
அந்நலார்–அப்பெண்கள், 2. அழகிய பெண்கள்.
அந்நியர்–அயலார்.
அந்நியோந்நியம்–ஒற்றுமை.
அப–ஒருதிர்மறை யுபசர்க்கம்.
அபகடம்–அவகடம்.
அபகரணம்–தீயொழுக்கம்.
அபகாரி–கவர்.
அபகாரம்–தீங்குசெய்தல், 2. நன்றியற்ற செய்கை.
அபகாரி – நன்றிகெட்டவன், 2. துஷ்டன்.
அபகீர்த்தி–நிந்தை.
அபக்கியாதி–பழி.
அபக்குவம்–பக்குவமின்மை.
அபசகுனம்–துர்க்குறி.
அபசத்தம் – வழுஉமொழி, 2. வீண் பேச்சு, 3. அசுபமொழி.
அபசயம்–தோல்வி.
அபசரணம்–புறப்பாடு.
அபசரிதம்–துன்னடை.
அபசவ்வியம்–வலதுபக்கம்.
அபசாரம்–குறைவு, 2. துன்னடை.
அபசாரி – ஒழுக்கம் தவறினவள், 2. வேசி.
அபசித்தாந்தம்–சித்தாந்தத்தின் கேடு.
அபசுமாரம்–காக்காய்வலி, 2. புத்தித் தெளிவு நீங்குதல்.
அபட்கை – பாம்பின் நச்சுப்பல்லி னொன்று.
அபட்சம்–பட்சமின்மை.
அபட்சியம்–உண்ணத்தகாதது.
அபதாறு–பழிமொழி, 2. கொள்ளை.
அபதேசம் – வஞ்சம், 2. உபாயம், 3. வேடம்.
அபத்தம்–பொய், 2. மோசம்.
அபத்தியசத்துரு–நண்டு.
அபத்தியம்–பத்தியத்தவறு.
அபநயனம்–கடனிறுக்கை.
அபநோதம்–அகற்றுதல்.
அபமிருத்தியு–சடுதிமரணம்.
அபயஹஸ்தம்–பயந்தீரக்காட்டும்கை.
அபயம் – அச்சமின்மை, 2. ஓலம், 3. அடைக்கலம்.
அபயமிடல்–முறையிடல்.
அபயன்–பயமில்லான், 2. சோழன்.
அபரகாத்திரம்–கால், 2. பின்கால்.
அபரஞ்சி–புடமிட்ட பொன்.
அபரபக்கம்–தேய்பிறை.
அபரபட்சம்–அமரபட்சம்.
அபரம்–பின், 2. பிணக்கு, 3. மேற்கு, 4. நரகம்.
அபராங்கம்–சரீரத்தின் பிற்பாகம்.
அபராசிதன்–மகாவிஷ்ணு, 2. சிவன்.
அபராணம்–பின்னேரம்.
அபராதம் – குற்றம், 2. பாவம், 3. தண்டம்.
அபராதி–குற்றவாளி.
அபராந்தம்–மேலைத்தேசம்.
அபராந்நம்–மத்தியானத்திற்குப் பிற குள்ள ஆறு காழிகை.
அபரிச்சின்னம்–வகுக்கப்படாமை.
அபரிமிதம்–அளவில்லாமை.
அபரியந்தம்–மட்டில்லாமை.
அபரோட்சம்–கடவுளைத் தரிசிக்கை.
அபலம்–பயனின்மை.
அபவருக்கம்–மூத்தி.
அபவாதம்–பழிச்சொல்.
அபவித்திரம்–புனிதமின்மை.
அபாக்கியம்–நிர்ப்பாக்கியம்.
அபாங்கம்–கடைக்கண்.
அபாசம்–விருப்பின்மை.
அபாண்டம்–நிந்தை.
அபாயம்–ஆபத்து, 2. மோசம், 3. வஞ்சகம்.
அபாரம்–எல்லைப்படாதது, 2. கடவுள்.
அபாவம்–இன்மை, 2. நியாயநூலிலே ளவை.
அபானம்–கடுக்காய், 2. குதம்.
அபானன்–தசவாயுவி னொன்று.
அபி–கேள்வி, மேன்மை, விருப்பம் இவற்றைக் காட்டுமோர் உபசர்க்கம்.

அபிகாதம்–அடித்தல், 2. பருத்தம்.
அபிகாயம்–ஓர் காசம்.
அபிசரன்–தோழன்.
அபிசாரம்–மந்திரவித்தை
அபிசாரி–வியபிசாரி.
அபிடேகம்–திருமுழுக்கு.
அபிட்டம்–இரதம்.
அபிதானம்–பெயர்.
அபிநயம்–கூத்து, 2. கைமெய்களட்டல்.
அபிநயர்–கூத்தர்.
அபிநயித்தல்–(தொ. பெ) அபிநயஞ் செய்யல்.
அபிநவம்–புதிது.
அபிநிவேசம்–தொழிலிற பிரவேசிக்கை.
அபிபராயம்–உட்கருத்து, 2. தோக்கம், 3. மறைபொருள், 4. எண்ணம்.
அபிமதம்–சம்மதம்.
அபிமந்திரித்தல்–(தொ. பெ) பிரதிஷ்டை பண்ணல்.
அபிமான புத்திரன்–ஸ்வீகார புத்திரன்.
அபிமானம்–தேசம், 2. உபாகுனம்.
அபிமானித்தல்–(தொ. பெ) மெச்சல், 2. கனம் பண்ணல், 3. மதித்தல்.
அபிமுகம்–தோர்முகம்.
அபியோகம்–போருக்கழைக்கை, 2. போர், 3. தடை.
அபிரட்சை–சர்வரட்சணம்.
அபிராமம்–அழகு.
அபிராமி–பார்வதி, 2. சரஸ்வதி.
அபிருசி–ஈர்த்திப் பிரியம்.
அபிஜ்ஞன்–அறிவுடையோன், 2. காமன்.
அபிலாசம்–விருப்பம்.
அபிவாதனம்–பெரியோர்க்குச் செய்யும் உபசாரம்.
அபிவியத்தம்–தெளிவு, 2. வெளிப்படை.
அபிவிருத்தி–மிகப் பெருகுகை.
அபிணி, அபின்–ஓர் லாகிரி வஸ்து.
அபின்னம்–ஒற்றுமை.
அபீட்டம்–மிகவிருப்பம்.
அபூருவம்–அருமை.
அபேட்சித்தல்–(தொ. பெ) மிகவிரும்புதல்.
அபேதம்–வேறுபாடின்மை.
அப்சரசுக்கள்–தேவருலகத்திலுள்ள வேசிகள்.
அப்சன்–சந்திரன், 2. தண்ணீர்.
அப்தம்–ஆண்டு.
அப்தி–சமுத்திரம்.
அப்ப–ஓரதிபச் சொல்.
அப்படி–அவ்வாறு.
அப்பட்டா–வட்டத்திருப்பி.
அப்பணை–உத்தரவு, 2. பிணை, 3. ஆதாரம்.
அப்பத்தாள்–அக்காள்
அப்பம்–சிற்றுண்டி.
அப்பர்–சைவசமயாசாரிகளி லொருவராகிய திருநாவுக்கரசு நாயனார், 2. தகப்பையர்.
அப்பல்–(தொ. பெ) அப்புதல்.
அப்பளம்–அப்பவருக்குத்தொன்று.
அப்பளாகாரம்–உறைப்பு மூவர்ப்பு முள்ள ஓர் வஸ்து.
அப்பன்–தகப்பன்.
அப்பாட்டன்–முப்பாட்டன்.
அப்பால்–அப்புறம்.
அப்பாவி–பேதை.
அப்பி–அககாள்.
அப்பியங்கம்–முழுக எண்ணெய் பூசுகை.
அப்பியசித்தல்–(தொ. பெ) பழகல்.
அப்பியந்தம்–தாமதம்.
அப்பியந்தரம்–உள்ளிடம், 2. தாமதம்.
அப்பியாகமம்–சந்தித்தல், 2. கொலை, 3. யுத்தம்.
அப்பியாகாரம்–களவு.
அப்பியாசம்–பயிற்சி.
அப்பிரகம்–ஓர்வகை லோகக்கல்.
அப்பிரகாசம்–இருள்.
அப்பிரசித்தம்–பிரபலியமின்மை.
அப்பிரதக்ஷிணம்–இடசாரியாகச் சுற்றுகை.
அப்பிரதானம்–முக்கியமல்லாதது.
அப்பிரமாணம்–கடவுள்.

அப்பிரமேயம்–அளக்கப்படாதது.
அப்பிரமேயன்–கடவுள்.
அப் பிரயோசனம்–பயனின்மை.
அப்பிராணி – உயிரில்லாதது, 2. ஏழை.
அப்பிராமணன் – பிராமணனல்லாதவன்.
அப்பு–நீர், 2. கடல்.
அப்புதல் – (தொ. பெ) ஒற்றல், 2. பூசுதல், 3. கௌவல்.
அப்புது–யானையைப் பாகன்தட்டு மோசை.
அப்புறப்படல்–குறித்த ஸ்தானத்தைக் கடந்துபோதல்.
அப்புறம்–அந்தப்பக்கம், 2. பின்பு.
அப்பை–அப்பைக்கோரை, 2. கொன்றை.
அப்பொழுது–
அப்போது–
அப்போழ்து– } அக்காலத்தில்.
அமங்கலம்–மங்கலமின்மை.
அமங்கலி–
அமங்கலை– } விதவை.
அமசடக்கம்–மறைப்பு.
அமச்சன்–மந்திரி, 2. வியாழம்.
அமஞ்சி – கூலிகொடாமல் வாங்கும் வேலை.
அமடு–மடிப்பு.
அமட்டு–(வி) அதட்டு, 2. சிக்குப்படுத்து, 3. புரட்டு, 4 மேற்கொள்.
அமணம்–இருபதினாயிரம் பாக்கு, 2. அம்மணம்.
அமணர்–சமணர்.
அமண்–சமணமதம்.
அமண்டம்–ஆமணக்கஞ்செடி.
அமதி–மதியின்மை.
அமயம்–காலம்.
அமரபக்கம் – பௌர்ணமைக்குப் பின் சந்திரன் நிற்கும் பகுதம்.
அம்ரம்–ஓர் வடமொழி நிகண்டு.
அமரம் – கண்ணேய், 2. தோணியின் பிற்பக்கம், 3. ஆயிரங் காலாள்களோடு யானைகை.
அமரர்–வானோர்.
அமராடல்–(தொ. பெ) போர்புரிதல்.
அமரார்–பகைவர்.
அமராவதி–இந்திரன் நகரம்.
அமரி–அமிழ்து, 2. சிறுநீர், 3. துர்க்கை, 4. விஷம்.
அமரிக்கை–அமைவு.
அமரியம்–குருந்து, 2. செண்பகப்பூ.
அமரியுப்பு–சிறுநீரிலிருந்தெடுக்குமுப்பு.
அமருதல்–(தொ. பெ) அடங்குதல்.
அம்ருலகம்–தேவலோகம்.
அமரேசன்–இந்திரன்.
அமர்–யுத்தம், 2. வெறி.
அமர்க்களம் – போர்க்களம், 2. ஆரவாரம்.
அமர்தல் – (தொ. பெ) இணைப்பாறல், 2. அடங்குதல், 3. பொருந்தல்.
அமர்த்தல் – (தொ. பெ) அமரச்செய்தல், 2. ஏற்படுத்தல்.
அமலகம்–நெல்லி.
அமலம்–அழுக்கின்மை, 2. அழகு.
அமலன்–கடவுள், 2. சிவன், 3. அருகன், 4. மகாவிட்டுணு.
அமவை–இலக்குமி, 2. உமையாள்.
அமவை–சோறு, 2. ஒலி, 3. மிகுதி.
அமல்–மிகுதி.
அமல்தார்–அரசிறை தண்டல்செய்யும் உத்தியோகஸ்தன்.
அமளி – ஆரவாரம், 2. மெத்தை, 3. பள்ளியறை.
அமவை–ஓர் பூமி.
அமறல்–மிகுதி.
அமாத்தியன்–மந்திரி.
அமார்–கப்பற்கயிறு.
அமார்க்கம்–துன்மார்க்கம்.
அமாவாசி–
அமாவசி–
அமாவாசியை–
அமாவாசை– } சூரியனுஞ் சந்திரனுங் கூடுநாள்.
அமானத்து–சேமிப்பு.
அமானி–இராஜ விசாரணைக்குள்ளான நிலம்.
அமிசம்–பங்கு, 2. பின்னம், 3. அதிர்ஷ்டம்.
அமிசு–சூரியன், 2. அணு, 3. பிரபை.

அமிஞ்சி–அமஞ்சி.
அமிதம்–அளவின்மை.
அமித்திரன்–பகைவன்.
அமிருதம்–அழிபாமை, 2. அமிழ்தம், 3. இனிமை, 4. நீர், 5. மோக்ஷம்.
அமிர்தகவல–சந்திரகலே.
அமிர்தகிரணன்–சந்திரன்.
அமிர்தம்–அமிருதம்.
அமிர்தவல்லி–சீந்திற்கொடி.
அமிர்தன்–கடவுள்.
அமில்தார்–அமல்தார்.
அமிழ்தல்–(தொ. பெ) ஆழ்தல்.
அமிழ்தம்–தேனருணவு.
அமிழ்து–அமிர்தம், 2. இனிமை.
அமிழ்த்து–(வி) ஆழ்த்து, 2. அழுத்து.
அமீர்–பிரபு.
அமீனு–ஒருத்தியோகஸ்தன்.
அமுக்கடி–மந்திரம், 2. மூடமாயிருத்தல்.
அமுக்கல் (தொ. பெ) அமிழப்பண்ணல்.
அமுக்கனங்கிழங்கு–அசுவகெந்தி.
அமுக்கன்–இரகசியத்திற் கருமமுடிப்போன், 2. தந்திரக்காரன்.
அமுக்கிரா– } அமுக்கனங்கிழங்கு.
அமுக்குரா– }
அமுக்கு–(வி) அமிழ்த்து, 2. நெருக்கு.
அமுங்கல்–(தொ. பெ) அழுந்தல், 2. தாழ்தல்.
அமுசம்–சிறுசெருப்படை.
அமுசு–ஒட்டறை
அமுதம்–அமிர்தம்.
அமுதகுலர்–இடையர், 2. பெரியோர்.
அமுதபுட்பம்–சிறுகுறிஞ்சா.
அமுதர்–இடையர், 2. வானோர்.
அமுதவல்லி – அமிர்தவல்லி, 2. இலக்ஷ்மி.
அமுது–அமுதம், 2. இனிமை, 3. நீர், 4. பால், 5. சோறு, 6. சுவை.
அமுதுசெய்தல்–(தொ. பெ) புசித்தல்.
அமுதுபடி–அரிசி.
அமுதூட்டல்–(தொ. பெ) சோறு அல்லது பாலுண்பித்தல்.
அமுத்தம்–வசகாபி.
அமுரி–சிறுநீர்.
அமுல்–களவு.
அமூர்த்தம்–உருவமில்லது.
அமேத்தியம்–அசுத்தம்.
அமை–மூங்கில்.
அமைச்சன்–மந்திரி.
அமைச்சு–மந்திரித்தொழில், 2. மந்திரி.
அமைதல்–(தொ. பெ) பொருந்தல், 2. அடங்குதல், 3. நிறைதல்.
அமைதி – அடக்கம், 2. மாட்சிமை, 3. தன்மை, 4. சமயம், 5. காலம், 6. வாசஸ்தலம்.
அமைத்தல் – (தொ. பெ) சமைத்தல், 2. ஏற்படுத்தல், 3. அடக்கல், 4. அழுத்துதல்.
அமைப்பு - (தொ. பெ) நியமிப்பு, 2. விதி.
அமையம்–(தொ. பெ) காலம், 2. சமயம்.
அமையாமை–(தொ. பெ) கீழ்ப்படியாமை.
அமைவடக்கம்–(தொ. பெ) அடக்கம்.
அமைவு–(தொ. பெ) அடக்கம்.
அமோகம்–மிகுதி.
அம்–அழகு, 2. நீர், 3. மேகம், 4. ஓர் சாரியை, 5. வினையின் விகுதி.
அம்சம்–அன்னப்பறவை, 2. பங்கு.
அம்சுமாலி–சூரியன்.
அம்பகம்–கண், 2. எழுச்சி, 3. உத்தரவு, 4. செம்பு.
அம்பகன்–சீர்பந்த பாஷாணம்.
அம்படம்–புழுக்கொல்லி.
அம்படலம்–அம்மி, 2. இரதம், 3. ஓடம், 4. வெளி, 5. வெள்ளி, 6. ரயம், 7. மரக்கால்.
அம்பட்டச்சி– } நாவிதப்பெண்.
அம்பட்டத்தி– }
அம்பட்டன்–நாவிதன்.
அம்பணத்தி–துர்க்கை.
அம்பணம் – மரக்கால், 2. ஆமை, 3. சலம், 4. வாழை, 5. துலாக்கோல்.
அம்பணவர்–பாணர் என்னும் சாதியார்.
அம்பரம்–ஆகாசம், 2. சீலை, 3. திசை, 4. கடல், 5. மஞ்சள்.

அம்பரை–நிமிர்.
அம்பர் – அவ்விடம், 2. சோழதேசத்திலோரூர், 3. ஓக்கோலை.
அம்பலக்காரன் – கள்ளச்சாதித் தலைவன், 2. சபையின் தீர்மானம் வெளியிடுவோன்.
அம்பலக்கூத்தன்–, அம்பலத்தாடி– } சிவன்.
அம்பலத்தி – தான்றிக்காய், 2. நில்லை மரம்.
அம்பலம்–சபை, 2. வெளி, 3. சித்திரகூடம்.
அம்பலவிருக்கம்–நில்லைமரம்.
அம்பல் – பழிமொழி, 2. சேந்தன்காடு, 3. புறங்கூறல்.
அம்பறத்தூணி–அம்புக்கூடு.
அம்பா – தாய், 2. துர்க்கை, 3. பசுக்கதறல்.
அம்பாயம்–பிரசவவேதனை, 2. உபாதி.
அம்பாரம்–குவியல்.
அம்பாரி–யானைமேற்றவிசு.
அம்பாலிகை – பாண்டுவின்ரூய், 2. துர்க்கை, 3. தருமதேவதை.
அம்பால்–தோட்டம்.
அம்பாவனம்–சரபப்பட்சி.
அம்பி–தெப்பம், 2. மரக்கலம், 3. ஓடம், 4. இறைகூடை, 5. தாம்பு, 6. மிடா.
அம்பிகாபதி–சிவன், 2. கம்பர்மகன்.
அம்பிகை–பார்வதி, 2. தருமதேவதை, 3. காளி, 4. திருதராட்டிரன் தாய்.
அம்பிகைபாகன்–சிவன்.
அம்பு – அத்திரம், 2. எலுமிச்சை, 3. தளிர், 4. மூங்கில், 5. சரகாண்ட பாஷாணம், 6. பாதிரி.
அம்பு–நீர், 2. மேகம்.
அம்புக்குதை–அம்பினிறகு.
அம்புக்கூடு – அம்பு வைத்திருக்குங் கூடு.
அம்புசம்–இடியேறு, 2. தாமரை.
அம்புசாதம்–தாமரை.
அம்புதம்–மேகம், 2. நீர், 3. கோரை.
அம்புதி–சமுத்திரம்.
அம்புயம்–தாமரை, 2. இறைகூடை.
அம்புயன்–பிரமன்.
அம்புயாதம்–தாமரைக் கொடி.
அம்புயை–இலக்குமி.
அம்புராசி–கடல்
அம்புலி–சந்திரன்.
அம்புலிப்பருவம் – பிள்ளைக்குச் சந்திரனைக் காட்டும்பருவம்.
அம்புலிமான்–சந்திரன்.
அம்புவாகினி–எலுமிச்சை, 2. பாதிரி.
அம்புவி–சகம்.
அம்பை – வெட்டிவேர், 2. உமாதேவி, 3. தாய்.
அம்போசன்–சந்திரன்.
அம்போதரங்கம் – கலிப்பாவினுறுப்பு.
அம்போதி–கடல்.
அம்போதி–காற்று, 2. பாட்டினர்த்தம்.
அம்போருகத்தாள்–இலக்குமி.
அம்போருகம்–தாமரை.
அம்போருகன்–பிரமன்.
அம்ம–கேளெனல், 2. ஓரதிசயக் குறிப்புச் சொல்.
அம்மகோ–ஓரிரக்கக் குறிப்புச் சொல்.
அம்மட்டு–அவ்வளவு.
அம்மணம்–நிருவாணம், 2. சோரமார்க்கம்.
அம்மம்–பெண் மார்பு.
அம்மவனை – அம்மானை, 2. அம்மானைக்காய், 3. தாய்.
அம்மன்–தாய்.
அம்மா – தாய், 2. எசமானி, 3. ஓரதிசயக் குறிப்பு, 4. அசைச்சொல்.
அம்மாச்சி–தாயைப்பெற்ற பாட்டி.
அம்மாத்திரம்–அவ்வளவு.
அம்மாய்–தாயைப்பெற்றவள்.
அம்மாள்–தாய்.
அம்மானை–ஓர் விளையாட்டு, 2. ஓர் பிரபந்தம்.
அம்மான் – தாய் மாமன், 2. அத்தை கணவன், 3. தகப்பன்.
அம்மான்பச்சரிசி–சித்திரப்பாலாவி.
அம்மி–அம்மிக்கல்.
அம்மியம் – கள், 2. காளம், 3. சிறு சின்னம்.
அம்மிரம்–மாமரம்.

அம்மிலிகா– } புளியமரம்.
அம்மிலிகை– }
அம்முக்கள்ளன்–வஞ்சகன்.
அம்மெனல்–ஒலிக்குறிப்பு.
அம்மை–வைசூரி, 2. தாய், 3. பார்வதி, 4. அழகு, 5. வருபிறப்பு, 6. தவப் பெண்.
அம்மையப்பர்–சிவனுர்.
அம்மையார் கூந்தல்–கொடியார் கூந்தற்பூண்டு.
அம்மைவார்த்தல்–வைசூரி காணல்.
அம்ருதம்–அமிர்தம்.
அயகம்–சிறுகுறிஞ்சா, 2. வசம்பு.
அயக்கதை–இருப்புத்தண்டம்.
அயக்காந்தம்–ஊசிக்காந்தம்.
அயக்கிரீவன்–மகாவிஷ்ணு, 2. ஓரசுரன்.
அயசு – இரும்பு, 2. எஃகு, 3. வழுக்கல் நிலம்.
அயசுபடில்–வெள்ளீயமணல்.
அயச்சிந்தூரம்–இரும்புச் சிந்தூரம்.
அயணம்–1. செலவு, 2. வழி.
அயநகாலம்–தலாயனத்துக்கும் மேடாயனத்துக்கும் இடையே நிகழுங் காலம்.
அயநம் – பிறப்பு, 2. வருடப்பாதி, 3. வழி, 4. வீடு, 5. சரித்திரம்.
அயபற்பம்–இரும்புத்தூள்.
அயம்–விழா, 2. சேறு, 3. நீர், 4. குளம், 5. நிலம், 6. அலரிச்செடி, 7. ஆடு.
அயர்–வாட்டம்.
அயர்ச்சி–(தொ. பெ) மறதி, 2. உணா வழிவு, 3 சோம்பு, 4. பலவீனம், 5. வருத்தம்.
அயர்தி–(தொ. பெ) மறதி.
அயர்வு–(தொ. பெ) சோர்வு, 2. தளர்வு, 3. வருத்தம், 4. அகலம்.
அயலவர்–பிறர்.
அயலார்–அயலோர்.
அயல்–அருகிடம், 2. அன்னியமானது.
அயவாரி–வசம்பு.
அயவெள்வளை–அயபற்பம்.
அயறு–அசறு, 2. புண்வழலை.
அயனம்–பிறப்பு.
அயனுள்–உரோகணிநாள்.
அயன்–பிரமன், 2. அருகன், 3. தசரதன் தந்தை.
அயா–வருத்தம்.
அயாசிதம் – கேளாமற்றரக்கொள்ளும் பிச்சை.
அயாவுயிர்த்தல்–(தொ. பெ) வருத்தம் நீங்கல்.
அயிகம்–ஊமத்தை.
அயிக்கம்–ஐக்கியம்.
அயிங்கிதை–கொல்லாமை.
அயிச்சுவரியம்–ஐசுவரியம்.
அயிணம்–மான்ரோல்.
அயிரம்–கண்டசருக்கரை.
அயிராணி–இந்திராணி, 2. பார்வதி.
அயிராவணம்–தேவேந்திரன் யானை.
அயிராவதம்–ஐராவதம்.
அயிரி–மீன்முள்ளாரி கத்தி, 2. நெட்டிப்புல்.
அயிரியம்–நெட்டி.
அயிரை–ஓர் சிறுமீன், 2. நுண்மணல்.
அயிர் – நுண்மை, 2. நுண்மணல், 3. சருக்கரை.
அயிர்ப்பு–(தொ. பெ) சந்தேகம்.
அயிலல்– } (தொ. பெ) உண்ணல்.
அயிலுதல்– }
அயில் – கூர்மை, 2. கைவேல், 3. இரும்பு, 4. கலப்பை, 5. அழகு, 6. கோரைப்புல்.
அயிறல்–(தொ. பெ) அயிலல்.
அயினி–சோறு.
அயினிநீர்–சோறுகலந்த ஆலத்திநீர்.
அயின்றல்–(தொ. பெ) உண்டல்.
அயீன்றுள்–தாய்.
அயுக்தம்–தகாதது.
அயுக்தி–பிரியமின்மை
அயுதம்–பதினாயிரம்.
அயுத்தம்–அயுக்தம்.
அயுத்தி–அயுக்தி.
அயோக்கியதனம்– } யோக்கியமின்மை.
அயோக்கியதை– }
அயோக்கியம்– }
அயோக்கியன்–துஷ்டன்.
அயோநிசன்–அசாதாரண பிறப்புடையவன்.

அய்யலி–ஐயலி.
அயோத்தி–சச்தபுரியிலொன்று.
அய்யோ–துன்பச்சொல்.
அர–பாம்பு.
அரகர – சிவசிவ எனப் பொருள்படும் ஓரடுக்குமொழி.
அரக்கம்–நன்னரி.
அரக்கர்–இராக்கதர்.
அரக்கல்–(தொ. பெ) தேய்த்தல், 2. அரைத்தல்.
அரக்காம்பல்–செவ்வாம்பல்.
அரக்கி–இராக்கதப்பெண்.
அரக்கு – சிவப்பு, 2. செம்மெழுகு, 3. சாதிலிங்கம்.
அரக்குமஞ்சள் – மிகச் சிவந்த மஞ்சள்.
அரக்குமாளிகை–செம்மெழுகாற்செய்யப்பட்ட மாளிகை.
அரங்கம் – நாடகசாலை, 2. போர்க்களம், 3. சூது முதலியவை பயிலுமிடம், 4. சதுரச்சாலை, 5. சிலம்பக் கூடம், 6. சத்திரம், 7. சபை, 8. கல்விச்சாலை, 9. ஆற்றிடைக்குறை.
அரங்கல்–(தொ. பெ) அழுந்தல்.
அரங்கன்–சீரங்கத்தேகோயில்கொண்ட ஸ்ரீ மகாவிஷ்ணு.
அரங்கு – இடம், 2. அறை, 3. நாடகசாலை, 4. சபை, 5. சூதாடற்கு வகுத்தவறை.
அரங்கேற்று–அரங்கேற்றம்.
அரங்கேற்றுசல் – தாம் செய்த நூலை சபையிலுள்ள பெரியார்க்குக் காட்டி அதனை உயர்ச்சிப்படுத்த அவரது சம்மதம் வாங்கல்.
அரசச்சின்னம் – இராசரீக அடையாளம்.
அரசன்–இராசா, 2. வியாழம், 3. எப்பொருட்குமிறைவன்.
அரசாட்சி–இராசரீகம்.
அரசாணிக்கால் – விவாகமண்டபத்திலே அரசாணியிலே முருக்குடன் நாட்டப்படும் அரசங்கொம்பு.
அரசாளல்–அரசுசெய்தல்.
அரசி–இராசாத்தி, 2. தலைவி.
அரசிகம்–இரசமின்மை, 2. சுவையில்லாதது.
அரசிகன்–சுவை அறியாதவன்.
அரசியல்–இராசரீகமுறை.
அரசிருக்கை–அரசுவீற்றிருக்குமிடம்.
அரசிவல–அரசமரத்தினிலை, 2. மிருகங்களுக்கிடும் அரசிலைக்குறி.
அரசிறை–அரசர்க்கரசன், 2. கப்பம்.
அரசு – இராசா, 2. ஒரு மரம், 3. அரசாட்சி.
அரசுவா–பட்டத்தியாகை.
அரட்டர்–குறுநிலமன்னர், 2. குறும்பர்.
அரட்டல்–(தொ. பெ) பயமுறுத்தல்.
அரட்டி–அச்சம்.
அரணம் – காவற்காடு, 2. கோட்டை, 3. மதில், 4. வேலி, 5. கவசம், 6. கதவு, 7. வேல், 8 மஞ்சம், 9. தொடுதோல்.
அரணி – தீக்கடைக்கோல், 2. சூரியன்.
அரணி–கவசம், 2. மதில், 3. காடு.
அரணித்தல்–(தொ. பெ) காவல்செய்தல், 2. சிறப்பித்தல், 3. முறைத்தல்.
அரணியம்–காடு
அரணியா–காட்டுக்கருணை.
அரவண–ஒரு செந்து.
அரண் – காவல், 2. அழகு, 3. மதில், 4. கடல், 5. மலை, 6. காடு, 7. கோட்டை.
அரண்மவன–மதிலாற்காவல் செய்யப்பட்ட வீடு, 2. கோட்டை.
அரண்யம்–அரணியம், காடு.
அரதனம்–இரத்தினம், 2. மிருதபாஷாணம், 3. சிலம்பணி, 4. அகன்மணி.
அரதனாகரம்–இரத்தினமிருக்கும் சுரங்கம், 2. கடல்.
அரதி–வேண்டாமை.
அரதேசி [impro. for அகதேசி] பரதேசி.
அரத்தகம்–செம்பஞ்சு.
அரத்தம் – இரத்தம், 2. சிவப்பு, 3. பவளம், 4. செம்பரத்தை, 5. செங்குவளை, 6 கடம்பு, 7. அரக்கு, 8. பொன், 9. செம்மை.

அரத்தனம்–இரத்தினம்.
அரத்தன்–செவ்வாய்.
அரதீதுறை–ஒரு சிவஸ்தலம்.
அரந்தை–மனக்கவலை, 2. வருத்தம.
அரப்பள்ளியான்–மகாவிஷ்ணு.
அரப்பு–அரைப்பு.
அரமகள் – தெய்வப்பெண்.
அரமனை–அரசன்மனை.
அரமாதர்–தெய்வப்பெண்கள்.
அரமியம் – அரமனை, 2. வீட்டின்மேலாவும் வெளி, 3 பிரபி என்னும் செடி.
அரம்–ஓர் கருவி, 2 கீழறை, 3 பாதாளம்.
அரம்பு–தூரும்பு, 2. தினை.
அரம்பை – வாழை, 2. தேவலோக தாசி, 3. ஓமம்.
அரயன்–அரசன்.
அரரம்–தேவ
அரவ – கழலைகட்டி, 2. கடல், 3. கோட்டை, 4. மரல்.
அரவகிரி–திருவேங்கடமலை.
அரவணை–(வி) தழுவிக்கொள்
அரவணை–(பெ) சேஷசயனம்.
அரவணையான்–மகாவிஷ்ணு.
அரவப்பகை–கருடன்.
அரவமணி–நாகரத்தினம்
அரவம்–ஒலி, 2. பேரொலி, 3. சிலம்பு.
அரவம்–பாம்பு, 2. ஆயிலியநாள்.
அரவன்–சிவன்.
அரவாபரணன்–சிவன்.
அரவித்தல்–(தொ. பெ) ஒலித்தல்.
அரவிந்தம்–தாமரை.
அரவிந்தலோசனன்–ஸ்ரீ மகாவிஷ்ணு.
அரவிந்தன்–பிரமன்.
அரவிந்தை–இலக்குமி.
அரவு–பாம்பு.
அரவுயர்த்தோன்–துரியோதனன்.
அரவோன்–பதஞ்சலி முனிவன்.
அரளி–பீநாறி.
அரஹ–(வி) பிரமி.
அரற்று–(வி) அழு, 2. ஒலி, 3. அலறு.
அரன்–சிவன், 2. எப்பொருட்கு மிறைவன்.
அரன்மகன்–முருகன், 2. விநாயகன், 3. வீரபத்திரன்.
அரன்வெற்பு–கைலைமலை.
அரன்றேழன்–குபேரன்,
அரா–டாம்பு.
அராகம்–ஆசை, 2. ஒருடண், 3. அடங்காமை, 4. சிவப்பு, 5. பூலியாழ்த திறம், 6. பொன்.
அராதி–சத்துரு.
அராத்தல்–(தொ. பெ) தேய்த்தல்.
அராருட்பு–வேண்டா வெறுப்பு.
அராபதம்–வண்டு.
அராமம்–சோலை, 2. டபிர்.
அராமி கெட்டவன்.
அராவல் – (தொ பெ) உராஞ்சல், 2. செய்த்தல்.
அராவரி–கருடன், 2. கீரி, 3. மயில்.
அராளம்–இருவாட்சி, 2. குங்கிலியம்.
அரி–சத்துரு, 2. சக்கரம், 3. பச்சை நிறம், 4. குதிரை, 5. சிங்கம், 6. சிங்க ராசி, 7. சூரியன், 8. மகாவிஷ்ணு, 9. யமன், 10. காற்று, 11. சந்திரன், 12 தேவேந்திரன், 13. கிரணம், 14. கிளி, 15. குரங்கு, 16. பாம்பு, 17. தவளை, 18. நவகண்டத்தொன்று, 19. நீ, 20. மரகதம், 21. நிறம், 22. புகை, 23. டகை, 24 கூர்மை, 25. ஆடதப்பொது, 26. கார்வாள்.
அரி–அரிப்பிடி, 2. நெற்கதிர், 3. தேர், 4. சோலை, 5. பொன், 6. கண்வரி, 7. வரி, 8. கடல், 9. வண்டு, 10. செம்மறியாட்டுக்கடா, 11. பன்றி, 12. உட்டுவைப்பொருள், 13. மூங்கில், 14. நெருக்கம், 15. இமைவடிவு, 16. அடர்பு, 17. மழைத்தூவல், 18. மாலை, 19. சிலம்பின் பருக்கைக்கல், 20. சிலம்பு, 21. வலி, 22. மரவயிரம், 23. கட்டில், 24. படிக்கை, 25. டறை, 26. மலை, 27. கூள், 28. குற்றம், 29. விசி.
அரிகண்டபுலவர்–காளமேகப்புலவர்.
அரிகரபுத்திரன்–ஐயனார்.
அரிகண்டம்–கொந்தரை, 2. ஒரு விரத வேடம்.

அரிகள்–பகைவர்.
அரிகூடம்–கோபுரவாயில்.
அரிக்கண்சட்டி–அரிசியரிக்கும்சட்டி.
அரிக்குதல் – (தொ. பெ) அரித்துப் போடுதல், 2. பேச்சினால் வருத்துதல்.
அரிசயம்– } எலுமிச்சை, 2. கொன்றை
அரிசலம்– } மரம்.
அரிசனம்–மஞ்சள்.
அரிசா–பெருங்குமிழி மரம்.
அரிசி–தண்டுலம்.
அரிச்சந்தனம்–ஐந்தருவிலொன்று.
பேதாளை–ஒரு விதை.
பேதி–பிரிப்பது, 2. பேதம், 3. கழிச்சல், 4 பேதிமருந்து, 5. இரதம்.
பேதிக்க – (வி) பிரிக்க, 2. பேதகஞ் செய்ய, 3. வேறுபடுத்த, 4. மனமலையச்செய்ய, 5. மாற்ற, 6. நிந்திக்க, 7. வேறுபட, 8 கெட, 9. குழம்ப.
பேது–இரகசியம்.
பேது–திடமாற்றம், 2. உன்மத்தம்.
பேதை – அறிவிலான், 2. பெண், 3. ஏழுவயசுப்பெண், 4. பேடி, 5. தரித்திரன், 6. கள்.
பேதைமை–யாதுமறியாமை.
பேதையர் – தரித்திரர், 2. கீழ்மக்கள், 3. பாலிலிலமகளிர், 4. அறிவீனர், 5. பெண்கள்.
பேத்தி–பேர்த்தி.
பேத்தை–ஓர் மீன்.
பேம்–பயம்.
பேயன்–பைத்தியகாரன்.
பேயாழ்வார்–ஓராழ்வார்.
பேய்–பிசாசம்.
பேய்க்கரும்பு–ஒருவிதக் கரும்பு.
பேய்ச்சி–ஒரு பெண்பேய்.
பேய்த்தண்ணீர்–மதுநீர்.
பேய்த்தனம்–அறிவின்மை.

பேய்த்தேர்–கானல்.
பேய்நாய்–வெறிநாய்.
பேய்ப்பசலை – ஒருவகைப் பசலைக் கீரை.
பேய்ப்புடல்–ஒரு புடோல்.
பேர–(வி) நீங்க, 2. சிதைய.
பேரன்–பௌத்திரன்.
பேராளன் – கீர்த்தியுடையோன், 2. மிருகசீரிடம்.
பேரி– } முரசு.
பேரிகை– }
பேரிளம்பெண் – நாற்பது வயதுப் பெண்.
பேரீச்சு– }
பேரீஞ்சு– } ஒரு மரம்.
பேரீந்து– }
பேர்த்தி–பௌத்திரி.
பேல்–(வி) மலவிசர்ச்சனை செய்ய.
பேலிகை–எச்சில்.
பேழை–பெட்டி.
பேழ்–பெரிய
பேறு – ஆதாயம், 2. வரம், 3 ஒருமதி, 4. பலன், 5. சுகுதி, 6. டெறகை, 7. சந்தானம்.
பேறுகாலம்–பிள்ளைபெறுங்காலம்.
பேனம்–நுரை.
பேன்–தலையிற் பற்றும்பூச்சி.

பை

பை–அழகு, 2. சாக்கு, 3. பாம்பின் படம், 4. குடற்பை, 5. நிறம், 6. பசுமை.
பைகோ– }
பைகோவு– } ஓர் நோய்.
பைகோவை– }
பைக்க–(வி) சினக்குறிப்புக்காட்ட, 2. கோபிக்க.
பைக்கம்–பிச்சை.
பைங்கூழ்–பயிர், 2. நோய்
பைசந்தி–வாக்கு நான்கினொன்று.
பைசல்–தீர்ப்பு.
பைசாசநிலை – ஒரு காலினின்று மற்றைத்தாண்மூடக்கி நிற்றல்; இஃது யுத்தநிலை நான்கினொன்று.
பைசாசம்–பிசாசம், 2. பைசாசமணம்.
பைசார்–ஓர் தொடுதோல்.
பைஞ்ஞீலம்– } மக்கட்பரப்பு.
பைஞ்ஞீல்– }
பைஞ்ஞீலி–ஒரூர்.
பைதல்–துன்பம்.
பைதிரம்–நாடு.
பைத்தியம் – பயித்தியம்.
பைத்து–பசுமை.
பைபீலவாதம் – } எறும்புகளின்
பைபீலிகாவாதம் – } பேச்சறிதல்; அது: கலைஞான மறுபத்து நான்கனு ளொன்று.
பைம்மை–பச்சைநிறம், 2. கரும்பெண்.
பையை–மெல்ல.
பையல்– }
பையன்– } சிறுவன.
பையுள் – சிறுமை, 2 துனபம், 3 நோய்.
பையெனல்–மந்தகுறிப்பு.
பைரவம் – அச்சம், 2. உட்சமயமாறினொன்று.
பைரவன்–சூத்திரப்பெண் கிடாதகனை கூடிப்பெற்ற பிள்ளை, 2. வைரவன்.
பைரவி–ஓரிராகம், 2. காளி.
பைராகி–வைராகி.

பொ

பொகுட்டு – சேற்றிலெழுங்குமிழி, 2. தாமரைகொட்டை, 3. மலர்.
பொக்க–(வி) துளைக்க.
பொக்கசம்–திரவியசாலை.
பொக்கணம்–ஒருவகைப் பை.
பொக்கணி–குழிபுரல், 2. விரிந்தசெறிப்புள், 3 ஓர் பானபாத்திரம்.
பொக்கவலை–மரப்பொத்து, 2. குழியுரல்
பொக்கம் – பொய், 2 பொலிவு, 3. மிகுதி.
பொக்கல்வாய்–பொக்கைவாய்.
பொக்கு–குற்றம், 2. பொள்ளல்.
பொக்குப் பொக்கெனல் – ஒலிக்குறிப்பு, 2. விரைவுக்குறிப்பு.
பொக்குளிக்க–(வி) கொப்புளிக்க.

பொக்குளிப்பான் – கொப்புளிப்பான், ஒரு பிணி.
பொக்கெனல்–விரைவின் குறிப்பு.
பொக்கை–சிறு துளை.
பொங்க – (வி) கொதிக்க, 2. கொந்தளிக்க, 3. நுரையெழ, 4. சினக்க, 5. மிக, 6. பெருக, 7. செழிக்க, 8. உயர, 9. நிலைத்துமகிழ, 10. பெருமிதங்கொள்ள, 11. சோறாக்க.
பொங்கடி–யாளை.
பொங்கம்–பொலிவு.
பொங்கர் – மரக்கொம்பு, 2. மலை, 3. இலவமரம், 4. சோலை.
பொங்கல் – உயர்ச்சி, 2. மிகுதி, 3. சமைத்தல்.
பொங்கழி–தூற்றுநெல்.
பொங்காரம்–மிகுதுக்கம்.
பொசிய–(வி) வடிய, 2, மனதுருக, 3 வெளிப்பட.
பொசுக்க–(வி) தீய்க்க, 2. வெதுப்ப, 3. பொசுங்கச்செய்ய.
பொசுங்க–(வி) கருக, 2. டொருந்த, 3. சீர்குன்ற.
பொச்சடித்தல்-(தொ. பெ) வெறுங்காக் கடித்தல்.
பொச்சம்–குற்றம், 2. அவா, 3. தேங்காய்மட்டை.
பொச்சாப்பு–மறதி, 2. பொல்லாங்கு.
பொச்சு–குற்றம்.
பொச்சை–காடு, 2. சிறுமலை, 3. மலை, 4. யானைக்காடு, 5. புழுக்கூடு, 6. தொப்பையயிறு.
பொஸ்தகம்–புத்தகம்.
பொஸ்ச–(வி) செழிக்க.
பொடி–தூள், 2. புழுதி, 3. சிறியது, 4. மூக்குத்தூள், 5. சொக்குப்பொடி, 6. சாம்பல், 7. திருநூறு.
பொடிக்க–(வி) துகளாக்க, 2. கெடுக்க, 3. மூளாக்க, 4. மயிர்சிலிர்க்க.
பொடிய–(வி) துகளாக, 2. கெட, 3. சபிக்க.
பொடிகண்–சிற்றுள்.
பொடிகு–ஒருவகைச் சிரங்கு.
பொடிதவல்–ஒரு பூண்டு.
பொடுபொடுக்க – (வி) வெடிக்க, 2. துளிக்க, 3. குறைய, 4. விரைவாய்ப் பேச, 5. வயிறிரைய.
பொட்டணம்– / பொட்டணி– / பொட்டலம்– } சீலைமூட்டை, 2. ஒக்கிடும்பொட்டலம்.
பொட்டல்–கரம்பு, பாழ்நிலம்.
பொட்டிலி– / பொட்டில்– } ஒரு வெடி.
பொட்டிலுப்பு–வெடியுப்பு.
பொட்டு – நெற்றித் திலகம், 2. காலிப் பொட்டு, 3. ஓர்புழு, 4. அடையாளம், 5. நுழைவழி, 6. காணியப் பொட்டு.
பொட்டெனல்–சீக்கிரக்குறிப்பு.
பொட்டை–குருடி.
பொதி–மாட்டின்மேற்பொதி, 2. மூட்டை, 3. ஓலைக்குடை, 4. கரிக்காடி, 5. அம்பலம், 6. மலர்அரும்பு, 7. பொதிசல்.
பொதிகை–பொதியம்.
பொதிய–(வி) சுருட்ட, 2 அடைக்க, 3. மறைக்க, 4. பிணிக்க
பொதியமுனி–அகத்தியன்.
பொதியம்– / பொதியமலை– } தென்மலை.
பொதியில் – அம்பலம், 2. பொதிய மலை.
பொதிர–(வி) மிக, 2. அஞ்ச, 3. நடுங்க.
பொதிர்–நடுக்கம்.
பொதிர்ப்பு– / பொதிர்வு– } நடுக்கம்.
பொதீர் பொதீரெனல்–ஒலிக்குறிப்பு.
பொது–சாதாரணம், 2. பொதுவினம, 3. சபை.
பொதுக்க–(வி) பறைக்க, 2. கவர, 3. துளைக்க.
பொதுபொதெனல்–ஓசைக்குறிப்பு.
பொதுமை–பொதுத்தன்மை.
பொதும்பர்–மரச்செறிவு, 2. மரப்பொந்து.
பொதும்பு–பொந்து.
பொதுவர்–இடையர்.

பொதுள–(வி) நெருங்க, 2. தழைக்க.
பொத்த – (வி) மூட, 2. அடைக்க, 3. கைகட்ட, 4. மறைக்க, 5 அடிக்க.
பொத்தல்–துவாரம், 2. மூடுதல்.
பொத்தாறு–
பொத்தாறுகட்டை– } ஏர்க்கால்.
பொத்தி–சீலை, 2. மடல்விரியா வாழைப்பூ, 3. தோலுரியாத பனங்கிழங்கு.
பொத்து–தவறு, 2. தீயொழுக்கம், 3. பொய், 4. மூடுகை, 5. அடைப்பு, 6. பொந்து.
பொத்துமான்–ஓர்வகை மான்.
பொத்தை–பருமை.
பொத்தைக்கால்–யானைக்கால்.
பொந்தர்–ஓர்வகை நீர்ப்புள்.
பொந்தி–சரீரம், 2. மரவாள்.
பொந்து–மரப்பொந்து, 2. வளை.
பொம்மலாட்டு–பாவைக்கூத்து, 2. மாயம்.
பொம்மல் – பொலிவு, 2. மிகுதி, 3. சோறு.
பொம்மெனல்–அனுகரண ஓசை.
பொம்மை–பிரதிமை, 2. சிறு சுவர்.
பொய்–அசத்தியம், இல்லதுகூறல், 2. வேஷம், 3. மரப்பொந்து, 4. சிறுசிராய்.
பொய்கை–குளம், 2. கோட்டான்
பொய்கையார்–ஒரு புலவர்.
பொய்க்க–(வி) பொய்பேச, 2. தவற.
பொய்க்கை–ஓருமீன், 2. பொய்த்தல்.
பொய்ச்சாக்க–(வி) மறக்க.
பொய்தல்–தோழி, 2. மகளிர்கூட்டம், 3. மகளிர் விளையாட்டு.
பொய்மை–பொய், 2. மாயம், 3. கரவடம்.
பொய்யடி–வெருட்டு.
பொய்யாவணை–பொய்சத்தியம்.
பொய்யாமை–தவறுமை.
பொர – (வி) போர்செய்ய, 2. சூதாட, 3. ஒப்பாக, 4. பொருந்த, 5. தாக்க, 6. வாதாட, 7. அலைமோத.
பொரி – தென்முதலியவற்றின் பொரி, 2. யானைக்காடி.
பொரிகாரம்–வெண்காரம்.
பொரிக்க – (வி) பொரியச்செய்ய, 2. வறுக்க, 3. கந்தம் பொரிக்க, 4. குஞ்சுபொரிக்க.
பொரிய–(வி) பொரியாக, 2. வறுபட, 3. பூக்க, 4. படிய, 5. சினந்தொலிக்க, 6. மெல்லவொலிக்க, 7. அலப்ப.
பொரியல்–பொரிக்கறி.
பொருகு–சோறு.
பொருக்கு–செதிள், 2. சிகிரக்குறிப்பு.
பொருட்செல்வம்–திரவியசம்பத்து.
பொருட்டு–காரணம், 2. நிமித்தம், 3. மேம்பட்டது.
பொருட்பெண்டிர்–விலைமகளிர்.
பொருணி–கள்.
பொருத–(வி) ஒன்ற, 2. போர்செய்ய, 3. இணைக்க.
பொருத்த–(வி) பொருந்தச்செய்ய, 2. உடன்படுத்த, 3. ஒப்புரவாக்க, 4. கூலிக்குப்பொருத்த, 5. அமையச்செய்ய, 6. வாக்கியத்தோடு பொருத்த, 7 பிணைக்க, 8. கொளுத்த.
பொருத்தம் – சம்மதம், 2 தகுதி, 3. இணக்கம், 4. திருத்தி, 5. சபதம்.
பொருத்தவன–
பொருத்திவன– } நேர்த்திகடன்.
பொருந–(வி) உடன்பட.
பொருநன் – அரசன், 2. படைதலிலவன், 3. படைவீரன்.
பொருநை–தாமிரபர்ணி.
பொருந்த – (வி) கலக்க, 2. ஒக்க, 3. சேர, 4. சம்பவிக்க, 5. இயைய, 6. ஒன்றிவாழ, 7. இணப்பட.
பொருந்தம்–பொருகை நதி.
பொருந்தர் – நெய்வோர், 2. மேதகவர்.
பொருந்தலர்–பகைவர்.
பொருபுவி – பாலைநிலம், 2. போர்க்களம்.
பொருபொருத்தல் – (தொ. பெ) மனவெரிச்சற்படல்.
பொருபொரெனல்–ஓரொலிக்குறிப்பு.
பொருப்பு–கொல்லிமலை, 2. மலை.
பொருமல் – (தொ. பெ) அழுதல், 2. வீங்கல்.

பொருவ–உவமைச்சொல்.
பொதுவாய்–ஒரு மீன்.
பொருள்–சொற்பொருள், 2. திரவியம், 3. வஸ்து, 4. பலபண்டம், 5. வாய்மை, 6. தலைமை, 7. பொன், 8. பிள்ளை, 9. விணைப்பயன், 10. குணம்.
பொலம்–பொன், 2. அழகு, 3. மேன்மை, 4. பொல்லாங்கு.
பொலன்–பொன், 2. அழகு, 3. பொன்னிறம்.
பொலி–தூற்றுகெற்குவியல், 2. புடைத்தகெல்.
பொலிசை–இலாபம்.
பொலிதல்– பொலிவு– பருமை, 2. அதிகரிப்பு, 3. மிகுதி, 4. செழிப்பு, 5. முகமலர்ச்சி, 6. பூரிப்பு, 7. அழகு, 8. புணர்தல்.
பொலிய–(வி) பெருக, 2. மிக, 3. அதிகரிக்க, 4. செழிக்க, 5. மலர, 6. தாராளமாக, 7. எழுச்சியாக.
பொலுபொலெனல்–(தொ. பெ) உதிரல், 2. கொறுங்கல்.
பொல்லம்–தைக்கை, 2. தண்டு.
பொல்லர்–தையற்காரர், 2. செம்மார், 3. சக்கிலியர்.
பொல்லாங்கு – தீங்கு, 2. ஈனம், 3. கேடு, 4. மறதி.
பொல்லாது–பொல்லாதது.
பொல்லாப்பு–பொல்லாங்கு.
பொல்லாமணி–தூயிடாதமணி.
பொல்லார்–தீயோர்.
பொல்லு–பதர், 2. தடி.
பொழிப்பு–சுருக்கம், 2. பொழிப்புரை, 3. குறிப்பு, 4. அனுமானம்.
பொழிய–(வி) சொரிய, 2. மிகைய, 3. அதிகரிக்க, 4. வல்லமையாய்ப்பேச.
பொழில் – பெருமை, 2. பூமி, 3. உலகம், 4. நாடு, 5. சோலை, 6. பூந்தோட்டம்.
பொழிவு – வருமானம், 2. பொழிதல், 3. ஆதாயம்.
பொழுது–காலம், 2. சூரியன்.
பொளி – தினை, 2. உளிப்பதிவு, 3. வரம்பு.
பொளிய–(வி) கல்முதலியகொத்த, 2. தினைசெய்ய.
பொள்ள–(வி) இழிய.
பொள்ளல்–பொத்தல், 2. மரப்பொந்து, 3. அப்பவருக்கம்.
பொள்ளெனல் – சீக்கிரக்குறிப்பு, 2. அனுகரண ஒசை.
பொறுமை – பிறர்செல்வ முதலியவற்றைக்கண்டு சகியாமை, 2. பொறையின்மை.
பொறி – அடையாளம், 2. அறிவு, 3. எழுத்து, 4. அனற்பொறி, 5. தேமல், 6. முத்திரை, 7. விரலிறை, 8. பிதாணி, 9. பொலிவு, 10. இலக்குமி, 11. செல்வம், 12. புள்ளி, 13. இயந்திரம்.
பொறிக்க–(வி) பதிக்க, 2. கலிக்க, 3. எழுத.
பொறிய – (வி) பதிய, 2. சுறுக்க, 3. சரிய, 4. விழ, 5. கலைய.
பொறியிலார் – கீழ்மக்கள், 2. அறிவிலார்.
பொறுக்க – (வி) கிக்க, 2. சாந்தமாயிருக்க, 3. தாமதிக்க, 4. மன்னிக்க, 5. உத்தரவாதமாக, 6. நின்றுகொள்ள, 7. தோணிதட்டிப்போக, 8. மாட்டிக்கொள்ள, 9. விலை பெற, 10. இணங்கி இருக்க.
பொறுதி – பொறுமை, 2. மன்னிப்பு, 3. தணிவு, 4. ஒய்வு, 5. தாமதம்.
பொறுப்பிக்க–(வி) சுமத்த, 2. உத்தரவாதஞ்செய்விக்க, 3. முட்டுக்கொடுக்க.
பொறுப்பு–பாரம், 2. முட்டு, 3. கடனேறுகை, 4 கனம், 5. தகுதி, 6. பொறுமை.
பொறுமை–சகிப்பு, 2. தாங்குகை.
பொறை–சுமை, 2. பாரம், 3. மலை, 4. பூமி, 5. சலதாரை முதலிய அடைக்குங்கல், 6. பொறுமை.
பொறையன்–சேரன், 2. தருமராசன்.
பொற்ப–அழகாக.
பொற்பு–அழகு, 2. அலங்கரிப்பு, 3. பொலிவு, 4. மிகுதி.

பொற்றை – சிறுதூறு, 2. சிறுமலை, 3. மலை.
பொன்–சொர்ணம், 2. இலக்குமி, 3. அழகு, 4. ஒரு நாணயம், 5. வியாழன், 6. பொலிவு, 7. பிரகாசம், 8. சூரியன்.
பொன்செய்கொல்லர்–தட்டார்.
பொன்மலாம்–பொற்பூச்சு.
பொன்மலை–மாமேருமலை, 2. இமையமலை.
பொன்மை–பொன்னிறம்.
பொன்வாய்ப்புள்–சிச்சிலிக்குருவி.
பொன்விலைமகளிர்–வேசையர்.
பொன்ற–(வி) இறக்க, 2. அழிய.
பொன்னகர்–சுவர்க்கம்.
பொன்னவன்–வியாழன், 2. இரணியன்.
பொன்னன்–பொன்னுடையவன், 2. அருகன்.
பொன்னங்கண்ணி - பொன்னங்காணி– } ஓர் கீரை.
பொன்னி–காவிரி நதி.
பொன்னுரை – பொன்னின்றேய்மானம்.
பொன்னுலகு–தேவலோகம்.

போ

போக – (வி) செல்ல, 2. ஒழிய, 3. அடிக்க, 4. அடைய, 5. கழிய, 6. மாற, 7. சுவற, 8. பரவ.
போகடல்–(தொ. பெ) போகவிடல்.
போகணி–ஒரு பாத்திரம்.
போகம்–இன்பம், 2. அனுபோகம், 3. ஆனந்தம், 4. செல்வம், 5. விளைவு, 6. பாம்பினுடல்.
போகர்–ஒரு சித்தர்.
போகல் – செல்லல், 2. கோமை, 3. நீளம்.
போகவதி – நரகர்பதி, 2. நல்லனுபவமுடையான்.
போகி – இந்திரன், 2. பாம்பு, 3. நல்லனுபவமுடையோன், 4. ஒரு பெருமான்.
போகிக்க–(வி) அனுபவிக்க, 2. பயனடைய, 3. புணர.
போகில்–பூமொட்டு, 2. உந்தி, 3. பறவை.
போக்க–(வி) போகச்செய்ய, 2. அழுக்குப்போக்க, 3. பொழுதுபோக்க, 4. உட்புகுக்க, 5 நடத்த, 6. அழிக்க, 7. முடிக்க.
போக்கடி–அழிவு, 2. கட்டம், 3. வழிச்செலவு.
போக்கணம் – இலச்சை, 2. கட்டிச்சோறு.
போக்கன் – துஷ்டன், 2. வழிச்செல்வோன்.
போக்காடு–சாவு.
போக்கிடம்–ஒதுங்குமிடம்.
போக்கியம் – அனுபவம், 2 செல்வம்.
போக்கியார் – கடைச்சங்கப் புலவருளொருவர்.
போக்கிரி–ஒழுங்கில்லாதவன்.
போக்கு – போகச்செய்கை, 2. செல்லுகை, 3. வழி, 4. நடை, 5. சாய்வு, 6. பழக்கம், 7. நூல்நடை, 8. நடையின் சாயல், 9. முகச்சாயல், 10. பிடிப்பு, 11 சுரங்கவழி, 12. நிலவாசி, 13. வீண்செலவு, 14. குற்றம், 15. புறப்படிகை, 16. நீரோட்டம்.
போங்காலம்–அழிவுகாலம்.
போசக்கை–மாயம், 2. மேற்பூச்சு.
போசனம்–ஆகாரம், 2. உண்கை.
போசன் – போசராசன், 2. செல்வமுடையோன்.
போஷகன்–காப்பவன்.
போஷணம்– போஷணை– } ஆதரிப்பு.
போஷிக்க–(வி) காப்பாற்ற.
போஷிப்பு–பேணுதல்.
போட–(வி) எறிய, 2. இட, 3. தரிக்க, 4. உணவிட, 5. ஈன.
போடகம்–அம்மைக்கொப்புளம்.
போடம்–தேயம் ஐம்பத்தாறிலொன்று.
போட்டி–எதிரிடை.

போணி – முதல் விகிரயம்.
போதகம்–உபதேசம், 2. இளமை, 3. யானை புலி சிங்கமிவற்றின் குட்டி, 4. யானை, 5. மரக்கன்று.
போதகன்–ஆசிரியன்.
போதம்–ஞானம், 2. அறிவு, 3. விவேகம், 4. மரக்கலம், 5. பரணிநாள்
போதர–(வி) போக, 2. கொண்டுபோக, 3. கொண்டுவர.
போதரவு – நயச்சொல், 2. உபசாரம், 3. இச்சகம்.
போதலிப்பு – உபசாரம், 2. பேணுகை.
போதவை–போதிப்பு, 2. கறபனை, 3. தூண்டுகை.
போதன்-பிரமன், 2. அறிவுடையோன், 3. அருகன்.
போதா–பெருநாரை.
போதாமை–குறைவு.
போதாந்தம்–போதமுடிவு.
போதாந்தன்–கடவுள்.
போதாயநீயம்–உபநிடத முப்பதிரண்டிலொன்று.
போதி–மலை, 2. அரசமரம்.
போதிகை– } சுமையடைக்
போதிகைக்கட்டை– } கட்டை.
போதிக்க – (வி) போதகஞ்செய்ய, 2. கல்விபயிற்ற, 3. கற்பிக்க, 4. தூண்டிவிட.
போதிவேந்தன்–புத்தன்.
போது–காலம், 2. மலரும் பருவத்தரும்பு, 3. பூ.
போதை–மூதறிவு, 2. மயக்கம்.
போதைப்புல்–காவட்டம்புல்.
போத்திரி–பன்றி.
போத்து–எருது, 2. எருமைக்கடா, 3. காட்டெருது, 4. ஆண்மரை, 5. ஆண்புலி, 6. ஆண்மயில், 7. ஆண்பூவை, 8. நீர் வாழ்வனவற்றினுண், 9. மரக்[illegible] 10. விலங்கின்படிக்கை.
[illegible]ருமை.
போந்தை–பனைமரம், 2. அதனுடைகாள்.
போந்தை–இளம்பனைமரம், 2. அதனுடை
போபடி–சாடை.
போம்–பயம், 2. ஓரசைச்சொல்.
போரடித்தல் – (தொ. பெ) சூதிதறல்.
போராட–(வி) மற்கட்ட, 2. பொர, 3. வாக்குவாதஞ்செய்ய.
போராட்டம்–தொந்தரை செய்தல்.
போர்–அமர், 2. சண்டை, 3. யுத்தம், 4. மல், 5. எதிரித்தனம், 6. தானிபப்போர், 7. சதயநாள், 8. மரப்பொந்து.
போர்க்க–(வி) மூட, 2. முழுதுமூட.
போர்க்களம்–யுத்தகளம்.
போர்மடந்தை–துர்க்கை.
போர்முகம்– } படைமுகம்.
போர்முனை– }
போர்வை–துப்பட்டி, 2 போர்ப்பு, 3. தோல்.
போல–ஒருவமைச்சொல்.
போலல்–(தொ. பெ) போலுதல.
போலி–ஒப்பு, 2. சாயல், 3. கள்ளத்தன்மை, 4. பிரதி, 5. மாரீசம், 6. ஒப்பானது.
போல்–ஒருவமைச்சொல, 2. பதர், 3. பொந்து, 4. மூங்கில்.
போழ–(வி) பிளக்க, 2 வெடிக்க, 3 பிரிய.
போழ்து–பொழுது.
போழ்முகம்–பன்றி.
போழ்வு–பிளப்பு.
போளம்–நிலக்கடம்பு, (ஒரு பூ.)
போளி–அப்பவருக்கத்தொன்று.
போறல்–(தொ. பெ) போலுதல்.
போறை–பொந்து.
போற்ற–(வி) துதிக்க, 2. வணங்க, 3. காக்க, 4. வளர்க்க, 5. முயற்சிக்க, 6. பேண.
போற்றலர்– } பகைவர்.
போற்றார்– }
போற்றி–துதி, 2. பாட்டன்.
போற்றிமார்–ஓர்வகைப் பிராமணர்.
போனகம்–சோறு.
போனு– } எலிப்பிடிக்கும் கூடு.
போன்– }

பௌ

பௌஞ்சு–சேனை.
பௌடம்–, பௌஷம்– } கைமாதகம்.
பௌடிகம்–, பௌஷிகம்– } இருக்குவேளம்.
பௌடியம்–, பௌஷியம்– } பதினெண்புராணத்தொன்று.
பௌடியன்–ஓர் சக்கரவர்த்தி.
பௌண்டிரம்–ஓர் தேயம்.
பௌதிகம்–பூதசம்பந்தம்.
பௌதீகம்–உலகம்.
பௌத்தம்–புத்தமதம்.
பௌத்தி–மரணம்.
பௌத்திரன்–மகன்மகன்.
பௌமம்–நிலத்திற்பிறப்பன.
பௌமன்–செவ்வாய்.
பௌரவண – பௌர்ணமி, 2. மரக்கன்று.
பௌரவர்–குருகுலவேந்தர்.
பௌருஷம்–புருஷத்தன்மை.
பௌரோகித்தியம் – புரோகிதத்தன்மை.
பௌர்ணிமி–பூரணை.
பௌலஸ்தி–சூர்ப்பநகை.
பௌலோமி–இந்திரன் மனைவி.
பௌவம் – கடல், 2. நீர்க்குமிழி, 3. மலை, 4. பூரணை.
பௌளி – ஒரிராகம், 2. பூபாளன் மனைவி.

ம

ம – பிரமன், 2. சிவன், 3. மகாவிஷ்ணு.
மக–இளமை, 2. பிள்ளை.
மகக்கமா–நியாயசபை.
மகடி–, மகிடி–, மகுடி– } ஓர் குழல், 2. ஓர்வகை வித்தை, 3. ஓர்வினோயாட்டு, 4. ஒருதுகுழல்.
மகடூஉ–பெண்.
மகதம் – தேயம் ஐம்பத்தாறினொன்று, 2. பதினெண்பாடையினொன்று.
மகதி–நாரதன் வீணை.
மகத்து–பெரியது, 2. அதிகமானது, 3. மகத்துவமானது, 4. பெரியவர்.
மகத்துவம்–மேன்மை.
மகபதி–இந்திரன்.
மகமை–தருமக்கொடை.
மகம்–ஒரு நட்சத்திரம், 2. யாகம்.
மகரகுண்டலம் – காதணியினொன்று; அது: மகரவடிவாகச் செய்யப்பட்டது.
மகரகேதனன்–, மகரக்கொடியோன்–, மகரத்துவசன்– } மன்மதன்.
மகரந்தம்–பூந்தேன், 2. மலர்த்தாது, 3. கள்.
மகரம் – சுறுமீன், 2. ஓரிராசி, 3. மூங்கில், 4. தேவருலகு, 5. சாயங்கிறம், 6. பூந்தாது, 7. ஒருமுத்து.
மகரம்பு–வெண்தையம்.
மகரயாழ்–நால்வகை யாழினொன்று.
மகரயூகம்–படைவகுப்பினொன்று.
மகராலயம்–கடல்.
மகரிகை–குறங்குசெறி யென்னுமணி.
மகவான்–இந்திரன்.
மகவு–விலங்கின்பிள்ளை, 2. மகன்.
மகளிக்கீலர–ஒரு கீரை.
மகளிர்–, மகளீர்– } பெண்கள்.
மகள்–புத்திரி, 2. பெண்.
மகன்–புகல்வன், 2. புருடன்.
மகா–பெருமையான, 2. அளவற்ற, 3. உயர்ந்த, 4. மிகுந்த.
மகாசேனன் – சேனபதி, 2. கந்தன், 3. அருகன்.
மகாச்சாயம்–ஆலமரம்.
மகாதேவன்–கடவுள், 2. சிவன்.
மகாதேவி–பார்வதி.
மகாத்துமா–பெரியவர்.
மகாநுபாவன்–மகாத்துமன்.
மகாபதுமம்–பத்துக்கோடாகோடி.
மகாபதுமன்–அட்டமாநிதத்தொன்று.
மகாபலி–பலிச்சக்கிரவர்த்தி.
மகாபித்தம்–வில்வமரம்.
மகாமாயி–, மகாமாரி– } துர்க்கை.

மகாமேரு–பொன்மலை.
மகாராசன்–அரசன், 2. செல்வமுடையோன்.
மகாராட்டிரம்–ஒரு தேசம், 2. ஒரு பாடை.
மகார்–புதல்வர்.
மகி– } பூமி.
மகீ– }
மகிஷி–பட்டஸ்திரி.
மகிடம்– } எருமை.
மகிஷம்– }
மகிடன்– }
மகிடாசுரன்– } ஓர் அசுரன்.
மயிடன்– }
மகிடித்தல் – (தொ. பெ) மக்களித்தல்.
மகிணன்–மகிழ்நன்.
மகிதலம்–பூமி.
மகிபதி– } அரசன்.
மகிபன்– }
மகிமா – அட்ட சித்தியிலொன்று; அது: மிகப்பருத்தல்.
மகிமை–பெருமை, 2. கனம்.
மகிழ–(வி) களிக்க, 2. உற்சாகமாக.
மகிழ்–ஒருமரம், 2. களிப்பு.
மகிழ்ச்சி– } சந்தோஷம், 2. பூரிப்பு.
மகிழ்வு– }
மகிழ்நன்–கணவன், 2. மருதநிலத்தலைவன்.
மகீதலம்–பூமி.
மகுடம்–முடி, 2. தலையணி, 3. சிகரம், 4. பாட்டின் மகுடம், 5. மறைவு, 6. மாதரணியிலொன்று.
மகுடராகம்– } ஓரிராகம்.
மகுடராமக்கிரியம்– }
மகுணன்–புருஷன்.
மகேந்திரம்–ஒரு நகரம், 2. ஒரு மலை.
மகேந்திரன்–இந்திரன்.
மகோததி–கடல்.
மகோதயம்–ஓர் புண்ணியகாலம்.
மகோதரம்–ஓர் நோய், 2. பெருவயிறு.
மகோற்சவம்–பெரிய திருவிழா.
மகௌடதம் – சுக்கு, 2. திப்பிலி, 3. கும்பு.

மக்க–(வி) கெட, 2. அழிய, 3. அழுக்கேற.
மக்கடம்– } குரங்கு.
மர்க்கடம்– }
மக்கடா–மந்தன்.
மக்கடிக்க–(வி) உருவழிக்க.
மக்கட்பரப்பு–மன்பதை, 2. நாட்டார்.
மக்கம்–நெய்வார் தறி.
மக்கம்–அரபியிலுள்ள் நகரம்.
மக்களிக்க – (வி) மாற்ற, 2. ஒழிக்க, நோய் திரும்ப, 3. கணுப்பிசக, 4 சாறுக்க.
மக்களிப்பு–புரளல்.
மக்கள்–பிள்ளைகள், 2. மனிதர்கள்.
மக்கனம்– } ஆழ்தல், 2. அவமானம்.
மக்கினம்– }
மக்காச்சோளம்–பெரியசோளம்.
மக்கி–ஒரு மருந்து.
மக்கு–அடைமண், 2. மந்தகுணம்.
மங்க–(வி) ஒளிமழுங்க, 2 நிறங்குன்ற, 3. பார்வைகுன்ற, 4. தோற்றங்குறைய, 5. மறைய, 6. வாட, 7. கெட, 8. சாய.
மங்கலகாரியம்–சுபகாரியம்.
மங்கலகௌரிசுகம்–ஓரிராகம்.
மங்கலஸ்நானம்–மங்கலகாரியத்திற்கு முழுகுதல்.
மங்கலநாண் – கழுத்திலணியு மங்கலசூத்திரம்.
மங்கலம் – சுபம், 2. பொலிவு, 3. தருமம், 4. கலியாணம், 5. வாழ்த்து.
மங்கலவாரம்–செவ்வாய்க்கிழமை.
மங்கலன்–செவ்வாய், 2. ராவிதன்.
மங்கலி–கட்டுக்கழுத்தி, 2. அம்பட்டன்
மங்கலியம்– } தாலி.
மங்கிலியம்– }
மங்கவல – இலக்குமி, 2. பார்வதி, 3. மங்கலியவதி, 4. அம்பட்டத்தி.
மங்கல்–ஒளியின்மை, 2. கெடுதல்.
மங்களம்–மங்கலம்.
மங்களாதேவி–இலக்குமி.
மங்கவள–யோகினி திசையிலொன்று, 2. உமை.
மங்கிணி–மிக்க மந்தன்.

மங்குங்காலம்–துன்புறுகாலம்.
மங்குலம்– } மழுக்கம், 2. கலக்கம், 3.
மங்குளம்– } முகவாட்டம், 4. பார் வைமந்தம், 5. ஐயம், 6. நிறமழுக் கம்.
மங்குல்–மேகம், 2. வானம், 3. இரா, 4. இருள்.
மங்கை – பெண், 2. பதின்மூன்று வய துப்பெண்.
மங்கைபங்கன்– } சிவன்.
மங்கைபங்காளன்– }
மங்கைபாகன்– }
மசங்க–(வி) மயங்க, 2. சந்தேகிக்க.
மசகம்– } கொசுகு.
மசம்– }
மசகிற்புள்–ஓர் கடற்பறவை.
மசகு– } கடலிற்றிசைதெரியாத இடம்,
மசவு– } 2. வண்டிக்கீல்.
மசக்க–(வி)மயக்க, 2. கலக்க, 3. கசக்க.
மசக்கை–கருப்பமசக்கு.
மசக்கைக்காரி–கருப்பஸ்திரி.
மசங்க–(வி) மயங்க, 2. கசங்க.
மசண்டை–அந்திநேரம்.
மசமசத்தல்–(தொ. பெ) தினவுகொ ள்ளல்.
மசம்–கொசுகு.
மசரதம்–பெய்த்தேர்.
மசாலை–சம்பாரம்.
மசால்– } தீவர்த்தி.
மஷால்– }
மசானம்–மயானம்.
மசி– } மை.
மஷி– }
மசிக்க–(வி) குழைக்க.
மசிர்–அறுகம்புல், 2. மயிர்.
மசீது– } துருக்கர் கோயில்.
மஸ்தி– }
மசுக்கரம்– } மூங்கில்.
மஸ்கரம்– }
மசூசிகம்– }
மசூரி– } துருக்கர் கல்லறை.
மசூரிகம்– }
மச்சம்–மாற்றறிய வெட்டும்பொன், 2. மச்சை.
மச்சம்–மீன், 2. மீனவிராசி, 3. ஓர்தே சம்.
மச்சரம்–பொறுமை.
மச்சனம்–ஸ்நானம்.
மச்சாள்– } மைத்துனி.
மச்சி– }
மச்சான்–மைத்துனன்.
மச்சிங்கை–மோர், 2. ஈ.
மச்சியம்–சிவபுராணத்தொன்று, 2. கடு குரோகிணி.
மச்சினன்– } மைத்துனன்.
மச்சுனன்– }
மச்சினி– }
மச்சினச்சி– } மைத்துனி.
மச்சினிச்சி– }
மச்சு – மேனிலை, 2 உரவுபலகை, 3. தூறறமை.
மச்சுப்போக – (வி) மக்க, 2. வெந்து குழைய.
மச்சுனமை–மைத்துனவுரிமை.
மச்சை–மூளை, 2. மறு, 3. மீனம்பர்; இது: கடலிலுண்டாவது
மஜரா–பட்டணஞ்சார்ந்த ஊர்.
மஜ்கூர்–மேற்படி.
மஜ்முதா– } கருத்து, 2. அடக்கம்.
மஜ்மூன்– }
மஸ்தகம்–தலை.
மஸ்து–மதம்.
மஸ்டு–வண்டல்.
மஞ்சம்–கட்டில்.
மஞ்சரி–பூங்கொத்து, 2. பூத்திரள், 3. பூமாலை, 4. தளிர், 5. ஒரு பிரபந்தம், 6. மலர்காம்பு, 7. காயுருவிச்செடி.
மஞ்சள்–அரிசனம்.
மஞ்சனம்–முழுகல்
மஞ்சன்–மகன்.
மஞ்சாடி–ஒருமரம், 2. இரண்டு குன்றி மணிகொண்ட நிறை.
மஞ்சாளி–வயிரநிறுக்கு நிறை.
மஞ்சி–படகு, 2. சிறுவரம்பு, 3. பேழை.
மஞ்சிகம்–பெட்டி, 2. தாளிக்கொடி.
மஞ்சிகன்–கர்விதன்.
மஞ்சிகை – பேழை, 2. தாளிக்கொடி, 3. குண்டலம்.

மஞ்சிட்டி – ஒரு செடி, 2. நுணவேர்ப் பட்டை.
மஞ்சிலிக்கான்–உருத்திரசடைப்பூடி.
மஞ்சில்–பழையவரம்பின் வழி.
மஞ்சு–அழகு, 2. மேகம், 3. பனி, 4. ஆபரணம், 5. களஞ்சியம், 6. வலி, 7. இலைமை, 8. முகடு, 9. யானைமுகுது, 10. கட்டில்.
மஞ்சுகம்–கொக்கு.
மஞ்சுளம்–அழகு, 2. மிருது.
மஞ்சூடை– மஞ்சூவை– கூடை, 2. பெட்டி.
மஞ்சூரம்–கடலை.
மஞ்ஞை–மயில்.
மடக்க–(வி) மடிக்க, 2. திருப்ப, 3. மாறி மாறிச்செய்ய, 4. மறுக்க, 5. கீழ்ப்படுத்த, 6. அடக்க, 7. வசப்படுத்த, 8. தடுக்க, 9. நோய்தணிக்க, 10. எதிரெற்ற, 11. பணிவாக்க, 12. முறிக்க, 13. உடற்கட்டுக்குலைக்க.
மடக்கடி–தந்திரம்.
மடக்கம்–வளைவு, 2. அடக்கம்.
மடக்கு–மூடக்கு, 2. திருப்பு, 3, மடிப்பு, 4. தடை, 5. ஓர் மட்பாத்திரம், 6. மாறிமாறி வருகல், 7. ஓரலங்காரம், மடக்கலங்காரம்.
மடக்குமடக்கெனல் – ஈரடுக்கொலிக்குறிப்பு.
மடங்க–(வி) வளைய, 2. முடங்க, 3. கோண, 4. சாய, 5. மீள, 6. முறுக்க, 7. நெளிய, 8. தீழ்ப்பட, 9. தாழ, 10. தணிய. 11. உக்கிரமடங்க, 12. அமர, 13. தடைபட, 14. வாயடங்க, 15. அடைய.
மடங்கடித்தல்–(தொ. பெ) தோற்றோடச்செய்தல்.
மடங்கலர்–பகைவர்.
மடங்கல்–சிங்கம், 2. இடி, 3. ஊழித்தீ, 4. யுகமுடிவு, 5. நோய், 6. இயமன், 7. மடக்குதல்.
மடந்தை–பெண், 2. பெண்களுக்குரிய பருவமேழனுளொன்று.
மடப்பம்–இளமை, 2. மகளிர்குணங்களிலொன்று.
மடப்பளி–சமையல் வீடு.
மடமட–ஒலிக்குறிப்பு.
மடமை – அறிவின்மை, இஃது பெண்கள் நாற்குணத்துளொன்று.
மடம்–வேதம் படிக்குமிடம், 2. முனிவர்வாசம், 3. தருமசாலை, 4. சத்திரம், 5. இளைப்பாறுமிடம், 6. மேன்மை.
மடலிக்க–(வி) கோண, 2. மடங்க, 3. சுருங்க, 4. நெளிய, 5. குடலையாக, 6. நெறிக்க.
மடலூர்தல்–(தொ. பெ) மடற்குதிரையிவர்தல்; இஃது அகப்பொருட்டிறையினொன்று.
மடல்–ஈந்து முதலியவற்றின் ஏடு, 2. திருநீற்றுமடல், 3. ஓர் பிரபந்தம், 4. கண்ணிமை, 5. சோளக்கதிர் முதலியவற்றின் பொத்தி, 6. பூவிதழ், 7. ஏற்றமடல், 8. சிறுவாய்க்கால், 9. காதின்மடல்.
மடவரல்–இளம்பெண்.
மடவார்–அறிவீனர், 2. பெண்கள்.
மடவியர்–பெண்கள்.
மடவை–ஒருமீன், 2. கடவுமரம்.
மடன்–அறிவிலான்.
மடாதிபதி–மடத்தலைவன்.
மடாதிபத்தியம்–மடத்தலைமை.
மடாரெனல்–ஒரொலிக்குறிப்பு.
மடி–வயிறு, 2. வஸ்திரம், 3. மடிந்தது, 4. கேடு, 5. சோம்பல், 6. புலம்பு, 7. நோய், 8. பொய், 9. தாழைவிழுது.
மடிக்க – (வி) மடக்க, 2. பேச்சிலே மடங்கடிக்க, 3. கொல்ல.
மடிமை–சோம்பு.
மடிவிக்க – (வி) முணமடங்கச்செய்ய, 2. கொல்ல.
மடிவு–சாவு, 2. கேடு, 3. சோம்பு.
மடு–குளம், 2. ஆற்றினுட்பள்ளம்.
மடுக்க – (வி) பற்றி அடைய, 2. நிறைக்க, 3. உண்ண, 4. பொறிவழியாற்கொள்ள, 5. விழுங்க, 6. மயக்க, 7. தடுக்க.
மடுத்தல்–சத்தியல்.

மடிப்பு–நிறைத்தல். (பு-தொழிற்பெயர் விகுதி.)
மடை – சோறு, 2. நீர்பாயும்வழி, 3. மதகு, 4. ஆபரணக்கலைப்பூட்டு, 5. வாய்க்கால், 6. துவாரம், 7. தேவதைகட்குப் படைப்பது.
மடைத்தலை–ஆற்றுவரம்பு.
மடைத்தொழில்–சமையல்வேலை.
மடைபரவுதல்–(தொ. பெ) நிவேதனஞ் செய்தல்.
மடைப்பள்ளி–அடுக்களை.
மட்கலம்–மண்பாண்டம்.
மட்கல்–(தொ பெ) அழுகுகேறல், 2. ஒளிமழுங்கல்.
மட்டங்கட்டுதல்–(தொ. பெ) சரியாய் நிறுத்தல்.
மட்டத்துருத்தி–ஒரு வித்தை.
மட்டப்பலகை–சமனறி கருவி.
மட்டம்–சமம், 2. அளவு, 3. ஓரளவு கோல், 4. எல்லை, 5. உத்தேசம், 6. ஒப்புரவு, 7. யானைக்குட்டி, 8. வாழை கரும்பு முதலியவற்றின் கன்று, 9. மிதம், 10. குறைவு, 11. கேடகம்.
மட்டாயுதம்–வாள்.
மட்டி – ஒழுங்கின்மை, 2. மதிகேடன், 3. படைக்கலம்.
மட்டிக்க–(வி) மண்டவிக்க, 2. வட்டமாக்க, 3. பூச.
மட்டியம்–சத்ததாளதொன்று.
மட்டு–அளவு, 2. எல்லை, 3. உத்தேசம், 4. தேன், 5. கள்.
மட்டுத்திட்டம்–சரிநிதானம்.
மட்டுமதியம்–அளவு, 2. நிதானம்.
மட்டை–மடல், 2. தேங்காய்மட்டை, 3. முட்டாள், 4. ஓர்பாம்பு, 5. உடற்குறை.
மட்டைத்தேள்–பிள்ளைத்தேள், 2. திருநீலகண்டன்.
மட்பகைஞர்–குயவர்.
மணக்க–(வி) மோக்க, 2. கூட்ட, 3. கலியாணம்பண்ண, 4. கூட, 5. வாசனைவீச.
மணங்தல்–பார்க்க, 2. மிடர்.
மணங்கு–ஆட்டுக்குட்டி, 2. ஓர்நிறை.
மணத்தக்காளி–ஒரு செடி.
மணமகள்–மணவாட்டி.
மணமகன்–மணவாளன்.
மணம்–வாசனை, 2. கூட்டம், 3. கலியாணம்; அது: பிரமமணம் முதலாக எட்டுவகைப்படும்.
மணலி–ஒரூர், 2. மணலிக்கீரை.
மணவல–ஒரு மீன்.
மணல்-கருமணல், வெண்மணல் எனப் பலவகைப்படும்.
மணவாட்டி–மணமகள்
மணவாளன்–நாயகன்.
மணவை–அடுப்பு.
மணாளன்–மணவாளன்
மணி–பொன் முதலிய மணி, 2. மணிமாலை, 3. உருத்திராகூடம், 4. ஒன்பான் மணி முதலியன, 5. கண்மணி, 6. அழகு, 7. நன்மை, 8. கறுப்பு.
மணி–இரத்தினம், 2. மூதது, 3. அதர், 4. மணிக்கட்டு, 5. ஓசை, 6. கிலுக்குமணி, 7. மணிநேரம், 8. விஷக்கல்.
மணிகன்னிகை - காசித்தீர்த்தத்திலொன்று.
மணிக்கட்டு–கையிலேருறுப்பு.
மணிக்கிரீவன் – குபேரன் மக்களிலொருவன்.
மணிக்குடல்–சிறுகுடல்.
மணிக்கூடு – நாழிகைவட்டில், 2. கடிகாரக்கூடு.
மணிநாள்–ஒன்பதுநாள்.
மணிபூரம்–கொப்பூழ்.
மணிப்புரு–ஒரு புரு.
மணியகாரன்–விசாரணைகாரன்.
மணியம்–மணியவேலை.
மணியாசம்–மணியாசப்பலகை.
மணிவடம்–இரத்தினமாலை, 2. அககமாலை.
மணை – சிறுபீடம, 2. மழுங்கல், 3. மழுங்கலாயுதம், 4. புருத்திமரம்.
மண்–சட்டசாந்து, 2. அணு, 3. நிலம், 4. மாட்டிமை, 5. முழவின்மாச்சை, 6. ஒப்பனை.

மண்கவண–ஒரு பறை.
மண்டகம்–சர்க்கரைபோடாத பூரி
மண்டக்கம்– } முத்துக்குளிப்பவர்களே
மண்டக்கு– } யிழுக்குங்கயிறு.
மண்டபம்–கோயில்மண்டபம், 2 சத்திரம்.
மண்டம் – ஆமணக்கஞ்செடி, 2 மண்டை.
மண்டலபுருடன்–சூடாமணி நிகண்டு செய்த வாசிரியன்.
மண்டலமாக்கள்–அரசர்.
மண்டலம் – வட்டம், 2. சூரியமண்டலம் முதலியன, 3. பூமி, 4. வலயம், 5. பாம்புச்சுற்று, 6. இயந்திரம், 7. இருகாலும பக்கல்வளைய நிற்குநிலை, 8. நாற்பதுநாள் கொண்டது.
மண்டலம்போட– } (வி) சுற்றிச்சுற்றி
மண்டலமிட– } வர, 2. யந்திரம் வகுக்க.
மண்டலாதிபதி–ஏகசக்கிராதிபதி.
மண்டலி–ஒருவகைப் பாம்பு, 2. பூனை, 3. நாய், 4. பூமி, 5. கூட்டம்.
மண்டலிகன் – இருபதுயோசனை விஸ்தாரமான தேசத்தையாள்வோன்.
மண்டலிக்க–(வி) வட்டமிட, 2. விருத்தமாக்க.
மண்டலீகர் – அவ்வத்தேசதத்தையாளு மன்னர்.
மண்டலேசன்–மண்டலாதிபதி.
மண்டா–இரட்டைகருவீட்டி.
மண்டி – பெரியகடை, 2. இருகால முடக்கி நிற்குநிலை.
மண்டிகை–அப்பவருக்கம.
மண்டிபோட– } (வி) இருகால் முட
மண்டியிட– } க்கிநிற்க.
மண்டிலம் – வட்டமாயோடல், 2. குதிரை, 3. நாடு, 4. கூத்து, 5. போர்.
மண்டுகம்–தவளை.
மண்டுதல்–(தொ. பெ) நெருங்கல், 2. மிகல், 3. தாக்கல், 4. ஆவலாய்ப் பருகல்.
மண்டூகம்–தவளை.
மண்டூகர்–ஓரிருடி.
மண்டூரம்–பழஞ்செங்கறைகிட்டம.
மண்டெரி–பெருங்தி.
மண்டை–தலையோடி, 2. இரப்போர் கலம்.
மண்டைக்கரப்பான்–ஒரு நோய்.
மண்டைப்பீனசம்–ஒரு நோய்.
மண்டோதரி–இராவணன் மனைவி.
மண்ணை–(வி) அலங்கரிக்க.
மண்ணைம்–சுண்ணாம்பு.
மண்ணை–ஓர் மீன்.
மண்ணை–அறிவிலான், 2. பசாசு, 3. இளமை.
மண்ணைத்தனம்–அறியாமை.
மண்ணைர்–மனிதர்.
மண்மகள்–பூமிதேவி.
மண்வெட்டி–ஓராயுதம்.
மதகு–குளத்தின் சலதாரை.
மதக்க–(வி) செருக்க, 2. கொழுக்க, 3. மயங்க, 4. வெறிக்க.
மதங்கநாதர் – நவநாத சித்தரிலொருவர்.
மதங்கம்–ஓராகமம், 2. மதங்கமலை.
மதங்கர்–பாணர்.
மதங்கி – பதினாறுவயதுப்பெண், 2. காளி, 3. பாடுவிச்சிப்பெண்
மதமதெனல்–ஈறடிக்கொலிக்குறிப்பு.
மதமத்தகம்–கஞ்சாச்செடி.
மதம் – களிப்பு, 2. மதநீர், 3. வலி, 4. செருக்கு; அது: உட்பகையாறனுளொன்று, 5. காமவிகாரம், 6. கொழுப்பு, 7. மயக்கம், 8. கருத்து, 9. சமயமதம், 10 சம்மதம்.
மதர்–மிகுதி, 2. செருகசு, 3. களிப்பு.
மதர்க்க–(வி) செழிக்க, 2. செருக்க, 3. களிக்க
மதர்ப்பு– } செழிப்பு, 2. மிகுதி, 3. வ
மதர்வு– } லிமை.
மதலை–கப்பல், 2. தூண், 3. கொன்றை மரம், 4. கொடிங்கை, 5. மகன், 6. மழலை, 7. குழந்தை.
மதனம்–காமம், 2. கடைதல், 3. மௌனம்; இது பஞ்சபாணவத்தைக் குணங்களினொன்று, 4. மனக்கலக்கம்.
மதனன்–காமன்.

மதனி–
மதினி–
மதுனி–
} மைத்துனி.

மதன்–காமன், 2. அழகு, 3. கலக்கம், 4. மாட்சிமை, 5. வலி, 6. வளமை.

மதாணி–பதக்கம், 2. ஆபரணம்.

மதாவளம்–யானை.

மதாளிக்க–(வி) செழிக்க.

மதி – ஓர் முன்னிலை யசைச்சொல், (உ–ம்.) கேண்மதி.

மதி–சந்திரன், 2. அறிவு, 3. மிருகசீரிடம், 4. பிறை, 5. மாதம், 6. கற்கடகவிராசி.

மதிக்க–(வி) வரையறுக்க, 2. கணிக்க, 3. கடைய, 4. கொழுக்க.

மதிதம்–மோர்.

மதித்தல் – (தொ. பெ) எண்ணல், 2. கருதல், 3. கடைதல்.

மதிமகன்–புதன்.

மதியம்–சந்திரன், 2. கணிசம், 3. மத்தியானம், 4. மாதம்.

மதியாணி–
மதியாணிக்கட்டை–
} துகத்தினடுவாணி.

மதிரை–கள்.

மதிலுண்மேடை–கொத்தளம்.

மதில்–
மதிள்–
} சுற்றுச்சுவர்: இஃது இராசசின்னத்தொன்று.

மது–இனிமை, 2. கள், 3. இலுப்பைப் பூச்சிராவகம், 4. தேன், 5. பூந்தேன், 6. மகரந்தம், 7. பால், 8. வசந்தகாலீம், 9. ஓரரக்கன்.

மதுகம்–தித்திப்பு, 2. அதிமதுரம், 3. இலுப்பைமரம், 4. எட்டிமரம், 5. தித்தகாகம்.

மதுகரம்–தேனீ, 2. வண்டு, 3. கள்.

மதுகை–வலிமை.

மதுசூதனன்–திருமால்.

மதுபம்–
மதுவம்–
} கள்.

மதுரம்–இனிமை, 2. நாற்கவியினொன்று, 3. முந்திரிகைக்கொடி, 4. செஞ்சந்தனம், 5. மத்திம இசை, 6. அதிமதுரம்.

மதுரிக்க–(வி) தித்திக்க, 2. செவிக்கின்பமாக, 3. உருசியாக்க.

மதுரை–ஒரு நகரம், 2. கள்.

மதூகம் – வண்டு, 2. இலுப்பைமரம்.

மத்குணம்–மூட்டுப்பூச்சி, 2. யானை.

மத்தகம்–
மஸ்தகம்–
} தலை, 2. நெற்றி, 3. பொல்லாநிலம், 4. யானை மத்தகம்.

மத்தம்–களிப்பு, 2. வெறி, 3. ஊமத்தஞ்செடி, 4. முத்து.

மத்தளம் – ஒருவகை யுதமத தோற் கருவி.

மத்தனம்–கடைதல்.

மத்தாப்பு–ஒரு வாணம்

மத்தி–நடு.

மத்திகை–குதிரைச்சம்மட்டி, 2. விளக்குத்தண்டு, 3. பூமாலை.

மத்திக்க–(வி) கடைய.

மத்திக்காய்–ஓர் காதணி.

மத்திமம் – நடு, 2. மத்திமகாதம், 3. இடை.

மத்திமன்–நடுத்தரமானவன், 2. சாமானியன்.

மத்திமை – நடுவிரல், 2. நான்கு வாக்கினொன்று.

மத்தியஸ்தம்–நடுநியாயம்.

மத்தியமம்–நடு, 2. நடுவிரல்.

மத்தியமாவதி–ஓரிராகம்.

மத்தியம்–நடு, 2. கள், 3. இடை.

மத்தியலோகம்–பூலோகம்.

மத்தியவிருத்தம்–உந்தி.

மத்தியானம்–உச்சிப்பொழுது.

மத்தியை–காமமும் நாணமும் சமமாக உள்ளவள்.

மத்திரிப்பு–செற்றம், 2. கோபம்.

மத்திரை–பாண்டுவினிரண்டாம் மனைவி.

மத்து–தயிர்கடை கருவி, 2. தயிர்.

மத்துவம்–மத்துவமதம்.

மத்தை–ஊமத்தஞ்செடி.

மந்தகாசம்–புன்னகை.

மந்தணம்–இரகசிய ஆலோசனை.

மந்தமாருதம்–சிறுதென்றல்.

மந்தம் – தாமதம், 2. கூர்மையின்மை, 3. அசிரணம், 4. அற்பம், 5. மந்த விசை; சமனிசை யென்க, 6. சோம்பல், 7. ஒரு நோய்.

மந்தரம் – ஓர் மலை, 2. மறைவிடம், 3. மந்த இசை, 4. வெண்ணெய்.

மந்தவாரம்–சனிக்கிழமை

மந்தனி–
மந்தினி– } தயிர்கடைதாழி.

மந்தாகினி–கங்கை, 2. அறுபதாண்டுள் ளவள்.

மந்தாரம்–ஐந்தருவிலொன்று, 2. செம்பரத்தை, 3. மேகமூடிய தன்மை.

மந்தாரிக்க–(வி) மப்பாயிருக்க

மந்தாரை–ஒரு பூச்செடி; அது: காட்டு மந்தாரை, அந்திமந்தாரை, கொக்கு மந்தாரை, சிவப்புமந்தாரை, வெள்ளைமந்தாரை யெனப் பலதிறப்படும்

மந்தானம்–மத்து.

மந்தி–கருங்குரங்கின்பெண், 2. பெண்மூசு, 3. பெண்குரங்கு, 4. வண்டி, 5. குரங்கு.

மந்திக்க–(வி) அசிரணப்பட, 2 மந்தப்பட.

மந்திட்டி–மஞ்சிட்டி

மந்திப்பு–மந்தம்

மந்திரகாஷாயம்–காவிசலீலை.

மந்திரகூர்மை–இந்துப்பு.

மந்திரம்–ஆலோசனை, 2. வேதாங்கம், 3. எண்ணம், 4. வீடு, 5. தேவர்கோயில், 6. அரசன்மனை, 7. குதிரைப்பந்தி, 8. ஓர் தெய்வம், 9. கள், 10. சூகை.

மந்திரி – அரசர்க்குத் துணைவரிலொருவன், 2. அமைச்சன், 3. வருங்காரியஞ் சொல்வோன், 4. குபேரன், 5. சுக்கிரன், 6. புதன், 7. வியாழன்.

மந்திரிக்க–(வி) மந்திரத்தாற்கட்ட, 2. தராலோசனைசெய்ய.

மந்திரோச்சாரணம்–மந்திரவுச்சரிப்பு.

மந்துரம்–குதிரைப்பந்தி.

மந்தை–ஆட்டுமாட்டுத் தொகுதி.

மந்தையன்–அவிவேகி, 2. கூர்மையற்றவன்.

மந்தோதரி–இராவணன் மனைவி.

மப்பு–மந்தாரம், 2. மந்தம், 3. மயக்கம்.

மமகாரம்–ஒரு பொருளை எனதென்பது.

மமகாரன்–ஓரரசன்.

மமதை–அகந்தை.

மம்மர்–துன்பம், 2. மயக்கம.

மயக்க–(வி) கலங்கச்செய்ய.

மயக்கடி–மயக்கம்.

மயக்கம்–
மய்க்கு– } உன்மத்தம், 2. கலப்பு.

மயங்க–(வி) மருள.

மயம்–செருக்கு, 2. அழகு, 3. ஈறபநூல் முப்பத்திரண்டனுள் ஒன்று.

மயர்வு–மயக்கம்.

மயல் – உன்மத்தம், 2 மயக்கம், 3. பிசாசம், 4. செத்தை.

மயன்–ஓர் வேததச்சன், 2. விஸ்வகருமன், 3. கின்னரன், 4. தச்சன்.

மயானம்–சுடலை

மயிடம்–எருமை.

மயிந்துதல்–(தொ. பெ) பதுங்குதல

மயிர் – உரோமம்.

மயிர்க்குச்சு–துகிலிகை, 2. கொண்டைக்குசசு.

மயிர்க்குட்டி–கமபளிப்பூச்சி

மயிர்க்கூச்சு–உரோமபுளகிதம்.

மயிர்மாட்டி–ஓராபரணம்.

மயிர்மாணிக்கம் – பற்படாகம், (ஒரு மருந்துப்பூடு), 2. கோரோசனை.

மயிர்வினைஞர்–நாவிதர்.

மயிலடி–மாதர் காலாழியிலொன்று.

மயிலை – சாம்பனிறம், 2. இருவாட்சி மரம், 3. மயிலாப்பூர், 4. மீன், 5. மீனராசி, 6. அழுக்கு.

மயில்–ஓர் பட்சி.

மயிற்பீலி–மயிலிறகு.

மயிற்றுத்தம்–துருசு.

மயிற்றேகை–மயில்வால்.

மயினை–
மைனை– } நாகணவாய்ப்புள்.

மயூரம்–மயில், 2. காயுருவிச்செடி.

மயூராரி–ஒற்றி, 2. மயிலுக்குப்பகை.

மயேசுரன்–
யேசுவரன்– } வெள்.

மயேந்திரம்–ஓர் மலை.
மரகதமேனியன்–திருமால்.
மரகதம்–நவரத்தினத்திலொன்று, 2. பச்சைநிறம்.
மரகதவல்லி–பார்வதி, 2. தருமதேவதை.
மரகதன்–குபேரன்.
மரக்கலம்–கப்பல், 2. தோணி.
மரக்கா–நந்தனவனம்.
மரக்காணம்–ஓரூர்.
மரிக்கால்–ஓர் முகத்தலளவைக் கருவி, 2. துர்க்கைக்கூத்து, 3. விஷ்ணு கூத்து, 4. சோதிநாள், 5. உப்பளம்.
மரணசாதனம்–சாகுந்தறுவாயி லெழுதப்பட்ட வோலை.
மரணம்–சாவு.
மரவண–சாவு, 2. ஞாபகம்.
மரதம்–சாவு.
மரத்தல்–(தொ. பெ) விறைத்தல்.
மரபு–வமிசம், 2. குணம், 3. பழமை.
மரம்–விருட்சம், 2. வெட்டிமரம்.
மரல் – அரலியென்னும் ஒரு புதர், 2. மருள்.
மரவம்–குங்குமமரம்.
மரா – ஆச்சாமரம், 2. வெண்கடம்பமரம், 3. அரசமரம்.
மராம்–வெண்கடம்பமரம்.
மராளம்–அன்னம், 2. பாம்பு, 3. மாதுளமரம்.
மரிக்க–(வி) சாக.
மரிசி–புதுவரம்புவழி.
மரியாதம்–ரீதி.
மரியாதை–ஒழுக்கம், 2. வணக்கம், 3. வரம்பு, 4. கடற்கரை, 5. ரீதி, 6. அமைவித்த நிச்சயம், 7. விதம்.
மரீசம்–மிளகு.
மரீசி–ஒரு முனிவர். இவர் பிரமபுத்திரர்களிலொருவர், 2. கிரணம்
மரீசிகம்– } கானல்.
மரீசிகை– }
மரு–ஓர் பரிமளப்பூடு, 2. வாசனை, 3. வனம்.
மருகல்–திருமருகலென்னும் ஓர் ஊர்.
மருகன்–மருமகன்.
மருகு–மகரவாழை, 2. ஓர் வாசனைப் பூண்டு.
மருக்கடம்–மர்க்கடம்.
மருங்கு–இடை, 2. பக்கம், 3. ஒழுக்கு.
மருங்குல்–இடை, 2. பக்கம்
மருங்கை–பிரசவித்தைதந்தாளாள்.
மருச்சகன்–இந்திரன், 2. அக்கினி.
மருட்கிழங்கு–மருளின்வேர்.
மருட்சி–மயக்கம், 2. அறிவின்மை
மருட்ட–(வி) மயக்க
மருட்டம்–மயககந்தருவது, 2. கள்.
மருட்பா – ஐந்துபாவினொன்று. முதற கண்வெண்பாவும், இறுதிக்கண் அகவலுமாக வருவது.
மருண்மா–மதயானை
மருண்மாவல–அந்திநேரம்.
மருதணி– } ஓர் பூடு.
மருதாணி– }
மருதம் – ஐந்நிலத்தொன்று, அது வயலும் வயல்சார்ந்த இடமும், 2 ஓர் மரம், 3. மருதநிலப்பண், 4. வயல்
மருது–மருதமரம்.
மருதோன்றி–ஒரு மரவிசேடம்.
மருத்து–காற்று.
மருத்துவம்–வைத்தியம்.
மருத்துவன்–வைத்தியன், 2. இந்திரன்
மருந்தம்–நஞ்சு, 2. காலம்பபாஷாணம்.
மருந்து–ஔஷதம், 2. வெடிமருந்து, 3. அமுதம்.
மருபூ–பாலைநிலம்.
மருப்பு–விலங்கின்கொம்பு, 2. இஞ்சி.
மருமகள் – சகோதரிமகள், 2. மகன் மனைவி.
மருமகன் – சகோதரிமகன், 2 மகள் கணவன்.
மருமம்–இரகசியம், 2. உயிர்நிலை, 3. மார்பு.
மருமரம்– } அசையுஞ்சிலையானும்
மருமராஞ்சம்– } இலையானு மெழுமொலி.
மருமான்–மகன், 2. மருமகன், 3. வழித்தோன்றல்.
மருவ–(வி) கிட்ட, 2. கலக்க, 3. இடையிலேசேர.

மருவலர்–பகைவர்.
மருவு–வாசனை, 2. கலியாணத்திடவிருந்து.
மருள–(வி) மயங்க, 2. பயப்பட.
மருளிந்தம்–, மருளிந்தராகம்– } ஓர் பண்.
மருள்–மயக்கம், 2. பிசாசம், 3. பேயாட்டம், 4. உவமையுருபு.
மரூஉ–மருவி வழங்குமொழி.
மரை–ஓர்வகைமான், 2. சாமரை, 3. தவளை.
மரைக்காயர்–, மரைக்கார்– } துலுக்கரிலொருவகையார்.
மரைநீகம்–தவளை.
மர்க்கடம்–குரங்கு.
மர்ஜி–சுபாவம்.
மர்த்தனம்–இடிக்கை, 2. கடைதல்
மர்த்திக்க–(வி) மருந்துகலக்க, 2. அரைக்க, 3. கடைய.
மர்த்தியம்–உலகம்.
மர்மம்–உயிர்நிலை, 2. இரகசியம்.
மலகரி–ஓரிராகம்.
மலக்கடி–, மலக்கம்– } கலக்கம்.
மலங்க–(வி) குழம்ப, 2. அசைய, 3. மனங்கலங்க.
மலங்கல்–குளம்.
மலங்கு–ஓர்மீன்.
மலடு–பாழ், 2. கருவற்றது.
மலபரிபாகம்–பந்தபாசநீங்கிப் பக்குவமடைதல்.
மலமலத்தல்–, மலமலெனல்– } ஒலிக்குறிப்பு.
மலம்–உடம்பினழுக்கு, 2. பாவம், 3. அழுக்கு, 4. வண்டல்.
மலயசம்–சந்தனம், 2. தென்றல்.
மலயம்–பொதியமலை.
மலயாசலம்–பொதிகை.
மலர–(வி) மூகைவிள்ள, 2. விரிய, 3. களிப்புற, 4. தோன்ற, 5. எதிர்ப்பட, 6. நிறைய.
மலரவன்–பிரமன்.
மலர்–புஷ்பம்.
மலர்மிசையேகினன்–புத்தன்.
மலாக்கா–, மலாயு–, மலாய்– } ஓர் தீவு.
மலாடனுர்–ஓர் சங்கப்புலவர்.
மலாடு–கொடுந்தமிழ் நாட்டிலொன்று; அது மலையமானாடு.
மலார்–வளார்.
மலாவகம்–பிண்ணாக்கு.
மலிய–(வி) நயமாயிருக்க, 2. நிறைய, 3. அதிகரிக்க.
மலிவு–மிகுதி, 2. நயவிலை.
மலினமுகன்–அக்கினி, 2. பிசாசு, 3. மூசு, 4. கொடியவன், 5. வண்டு.
மலினம்–அழுக்கு, 2. கெடுதி, 3. கறுப்பு, 4. பாவம்.
மலீமசம்–அழுக்கு.
மவல–பருப்பதம், 2. உவமை.
மவலக்க–(வி) மயங்க, 2. மாலையணிவிக்க, 3. போர்செய்ய.
மவலச்சாரல்–, மவலச்சார்வு– } மலையருகு.
மவலப்பு–கூத்தின்விகற்பம், 2. திகைப்பு, 3. மாறுபாடு.
மவலமகள்–, மவலமடந்தை– } உமை.
மவலயகம்–ஓர்சாதி.
மவலயசம்–சந்தனம், 2. தென்றல்.
மவலயத்துவசன்–ஓர் பாண்டியன்.
மவலயமான்–சேரன்.
மவலயம்–மலையினுச்சி, 2. குறிஞ்சியாழ்த்திறம், 3. பொதியமலை.
மவலயன்–கடையெழு வள்ளலிலொருவன், 2. குறிஞ்சி நிலத்தலைவன்.
மவலயாரம்–சந்தனம்.
மவலயாளம்–ஒருதேயம்.
மவலயானிலம்–மலையாநிலம், தென்றல்.
மவலவாணர்–வேடர்.
மவலவு–மயக்கம், 2. பொருள்மாறுபாடு, 3. போர், 4. உவமைச்சொல்.
மல்–மற்போர், 2. பலம், 3. திண்மை, 4. வளம், 5. திருமால்கூத்து, 6. கூத்தின் விகற்பம்.
மல்க–(வி) அதிகரிக்க, 2. நிறைய.

மல்காக்க–(வி) முதுகுகீழாய்க்கிடக்க.
மல்லம்–தட்டம், 2. வலிமை, 3. மற்பிடி.
மல்லல்–மிகுதி, 2. வலி, 3. வளம்.
மல்லன்–வலியோன், 2. மற்போர் செய்வோன்.
மல்லாய்–ஓர் பாஷ்திரம்.
மல்லாரி – பம்பைவாத்தியம், 2. சண்டைக்காரி.
மல்லி–மல்லிகை, 2. கொத்துமல்லி.
மல்லிகார்ச்சுனம்–ஓர் சிவஸ்தலம்.
மல்லிகை–ஒருபூச்செடி, 2. இரப்போர் கலம், 3. விளக்குத்தண்டு, 4. பாத்திரம்.
மல்லு–ஓர்போர், 2. ஓர்கூத்து
மல்லுக்கட்டுதல்–(தொ. பெ) போராட்டமாடுதல்.
மல்லை–இரப்போர்கலம், 2. வட்டம்.
மவுலி–மௌலி.
மவுனம்–பேசாமை, 2. யோகம்.
மழ–இளமையான.
மழவல – இளமை, 2 நிரம்பாமெண் சொல்.
மழவு–இளமை, 2. குழந்தை.
மழிக்க–(வி) மொட்டையாக்க.
மழ–பரசாயுதம், 2. சிவனாயுதத்தொன்று, 3. எரியிரும்பு.
மழுக்க–(வி) மூணமழுங்கச்செய்ய, 2. ஒளிகுறைக்க, 3. புத்தியைக்குறைக்க, 4. அடிக்க, 5. நெல்லுமி கழிக்க.
மழுக்கம்–கூரின்மை, 2. தாழ்வு, 3. ஒளிமழுங்குகை, 4. விவேகமின்மை.
மழுங்க–(வி) மூணமழுங்க, 2. காந்தி குறைய, 3. புத்திகுறைய, 4. ஒளிமங்க, 5. மறைந்துபோக.
மழுப்ப–(வி) தாமதப்படுத்த.
மழுவன் – அஞ்சாதவன், 2. நகர்காப்போன்.
மழுவாளி–, மழுவேந்தி– } சிவன், 2. பரசிராமன்.
மழை–மாரி, 2. மேகம், 3. நீர், 4. குளிர்ச்சி, 5. மிகுதி.
மழைக்கண்ணி–ஒரு பறவை.
மழைக்கோள்–சுக்கிரன்.
மழைவண்ணன்–மகாவிஷ்ணு.
மளமளத்தல்–, மளமளப்பு–, மளமளெனல்– } ஈரடுக்கொலிக் குறிப்பு.
மளாரெனல்–ஒலிக்குறிப்பு.
மளிங்கை–பலசரக்குக்கடை.
மளுக்கெனல்–ஒலிக்குறிப்பு.
மள்ளம்–, மள்ளல்– } வலி.
மள்ளர் – வீரர், 2. குறிஞ்சிநிலமாகக்கள், 3. மருதநிலமாகக்கள்.
மள்ளு–கைமரம்.
மறக்க–(வி) அயர்க்க, 2. விட்டுவிட, 3. அசட்டைபண்ண.
மறதி–மறப்பு, அது சாமபகுணத்தொன்று.
மறத்தியர்–பாலைநிலப்பெண்கள்.
மறப்புலி–சிங்கம்.
மறம்–பிணக்கு, 2. பாவம, 3. கொலை, 4. வலி, 5. வீரம், 6. இயமன், 7 சினம், 8. கோபம், 9. கெடுதி.
மறலி–இயமன், 2. மயக்கம்.
மறல்–இயமன், 2. மயக்கம், 3. ஓர் கூத்து, 4. பகை, 5. பிணக்கு, 6. உயரம், 7. குற்றம், 8. மரணம், 9. மறதி, 10. போர், 11. தரித்திரம்.
மறவர்–ஓர் சாதியார், 2. பாலைநிலமாக்கள், 3. வேடர், 4. வீரர்.
மறவி–கள், 2. குறைவு, 3. மறதி.
மருடர்–, மருட்டியர்– } மகராட்டிரர்.
மறி–அழுங்கு ஆடு குதிரை மான் இவற்றின்குட்டி, 2. மேடவிராசி, 3. கஸ்தூரிமான்.
மறிக்க–(வி) தடுக்க, 2. திருப்ப, 3. மேல்கீழாக்க.
மறிதர–(வி) திரும்பவர.
மறியல்–தடை, 2. சிறுத்தலை, 3. காவல்.
மறு–வேறு, 2. மச்சம், 3. மாசு, 4. குற்றம்.
மறுக–(வி) சுழல, 2. மயங்க.
மறுகல்–(தொ. பெ) வியாதி திரும்பல், 2. சுழலல்.

மறுகு–தெரு, 2. குறுந்தெரு, 3. இரண்டாம் வினைச்சல்.
மறுகை–தங்கு, 2. பொறியினெருபக்கம்.
மறுக்க–(வி) இல்லையென, 2. தடுக்க, 3. ஆட்சேபித்துத் தள்ள, 4. மாறியுழ, 5. வெட்க, 6. நீக்க.
மறுக்கம்–சுழற்சி, 2. மனக்குழப்பம்.
மறுக்காரை–மருக்காரை, (ஓர் காரைச்செடி.)
மறுக்குத்து–ஓர் செடி.
மறுதலிக்க–(வி) மறுக்க, 2. நோய்மக்களிக்க, 3. வேறுபட.
மறுதலை–சத்துரு, 2. மறுதலிப்பு.
மறுமை–வருபிறப்பு.
மறுவல்– } கஸ்தூரிமிருகம்.
மறுவி– }
மறை – கறை, 2. இரகசியம், 3. வேதம், 4. மந்திரம், 5. சொல், 6. பரிசை, 7. அடைக்கலம், 8. திருகுமறை, 9. மறுஉழவு.
மறைக்க–(வி) ஒளிக்க, 2. மூட.
மறைக்காடு–வேதாரணியம்.
மறைக்கொடியோன் – துரோணாசாரியன், 2. பிரமன்.
மறைசை–வேதாரணியம்.
மறைத்தலவலி–இலக்குமி, 2. ஈரச்சுவலி, 3. உமை.
மறைமுதல்–சிவன், 2. கடவுள்.
மறையவர்– } பிராமணர், 2. முனி
மறையோர்– } வர்.
மற்கடம்–குரங்கு.
மற்குணம்–மூட்டுப்பூச்சி.
மற்கோல்–பகை.
மற்சரம்–விரோதம்.
மற்சியம்–மீன்.
மற்றவர்–பிறர், 2. மறுபெயர்.
மற்று–அசைநிலை, 2. பிறிது, 3. வினைமாற்று, இம்மூன்று பொருளையுந்தரும் இடைச்சொல்.
மற்றும்–பிறவும்.
மற்றை– } சுட்டியதற்றினம்.
மற்றைய– }
மற்றே–அசைநிலை, இரக்கக்குறிப்பு.
மனக்கசப்பு–மனவெறுப்பு.
மனக்கசிவு–மனவருக்கம்.
மனக்குறிப்பு–கருத்து.
மனக்கோட்டம்–அழுக்காறு.
மனங்கரைதல்–(தொ. பெ) மனமுருகல்.
மனங்கூம்புதல்–(தொ. பெ) மனமடங்குதல்.
மனசார–(வி) மனமாற.
மனசு– } உள்ளம், 2. எண்ணம், 3
மனது– } விருப்பம்.
மனச்சஞ்சலம்– } துக்கம்.
மனச்சடைவு– }
மனச்சாட்சி–பகுத்தறியுமறிவு.
மனஞ்சலித்தல் – (தொ. பெ) துக்கித்தல்.
மனத்தளர்ச்சி–மனமெலிவு.
மனத்தாபம்–மனவிதனம்.
மனத்திருத்தி–மனப்பூரணம்.
மனநெருடு–வெடுவெடுப்பு.
மனப்பூரணம் – உள்ளக்களிப்பு, 2. மனத்திருத்தி.
மனப்பூரிப்பு–மிகுகளிப்பு.
மனமடிவு–தைரியமின்மை.
மனம்–உள்ளம், 2. இந்துப்பு.
மனம்பொங்குதல் – (தொ. பெ) கோபங்கொள்ளல், 2. மனங்களித்தல்.
மனவு–சங்குமணி, 2. புடவை, 3. மணிப்பொது.
மனனம்–சிந்தித்தல், 2. ஞாபகம்.
மனுகுலம்–மனுவிதனம்.
மனுவு–அரைப்பட்டிகை.
மனிதன்–மானிடன்.
மனிலா–ஒரூர்.
மனிலாப்பயறு–வேர்க்கடலை.
மனு–விண்ணப்பம்.
மனு–மனுச்சக்கரவர்த்தி, 2. மனுஷன், 3. மந்திரம், 4. தருமநூல் பதினெட்டிலொன்று.
மனுசன்– }
மனுஷன்– } மனிதன், 2. ஆத்துமா
மனுடன்– }
மனுஷீகம்–மனுஷ்சுபாவம்.

மனுநீதி–
மனுநெறி– } மனுமுறை.
மனுவந்தரம்–மனுவின் காலவளவு.
மனுவர்–சம்மாளர்.
மனுஸ்மிருதி–மனுதர்மசாஸ்திரம்.
மனை–இரண்டாயிரத்து நானூறு குழி கொண்டநிலம், 2. வீடு, 3. மனைவி, 4. குடும்பம், 5. சூதாடுபலகையினை.
மனைக்கிழத்தி–மனைவி.
மனைக்கோள்–பல்லி.
மனையறம்–இல்லொழுக்கமாகிய தருமம்.
மனையாட்டி–
மனையாள்– } மனைவி.
மனைவாழ்க்கை–இல்லாச்சிரமம்.
மனைவி–காயகி.
மனோகரம்–அழகு, 2. மகிழ்ச்சி.
மனோசிலை–ஒரு மருந்து; விஷவுப்பாடாண முப்பத்திரண்டி லொன்றென்பர்.
மனோச்சாகம்–மனவூகம்
மனோபலம்–தைரியம்.
மனோபாவம்–மனவெண்ணம்.
மனோபாவனை–மனப்பாவிப்பு.
மனோரஞ்சிதம்–மனப்பிரியம்.
மனோரதம்–இன்பம், 2. விருப்பம்.
மனோரம்மியம்–மனத்திருத்தி.
மனோலயம்–மனவொடுக்கம்.
மனோற்பவன்–மன்மதன்.
மனோன்மணி–பார்வதி, 2. அப்பிரகம்.
மன்–ஓரசைச்சொல் (உ–ம்.) அது மற்கொண்கன்றேரே, 2. பெருமை, 3. ஆக்கம், 4. மிகுதி, 5. அரசன், 6. நிலைபேறு.
மன்பதை–மக்கட்பரப்பு.
மன்மத – இருபத்தொன்பதாவது வருஷத்தின் பெயர்.
மன்மதன் – காமன், 2. மனங்கலக்குவிப்போன்.
மன்வந்தரம்–மனுவந்தரம்.
மன்னிருத்தம்–ஆரியவிருத்தம்.
மன்ற–அசைச்சொல், 2. அறுதியாக, 3. நிச்சயமாக.
மன்றம்–அம்பலம், 2. வெளி, 3. நெடுந்தெரு, 4. வாசனை, 5. நிச்சயம்.
மன்றல்–விவாகம், 2. வாசனை, 3. பாலையாழிசை.
மன்றுட–(வி) வேண்ட.
மன்று–சபை, 2. சிதம்பரம், 3. வெளி.
மன்னவன்–
மன்னன்– } அரசன், 2. உத்தரட்டாதி, 3. எப்பொருட்கு மிறைவன்.
மன்னுர்–ஒரூர், இது கடற்கரையிலுள்ளது, 2. பகைவர்.
மன்னிக்க–(வி) பொறுக்க.
மன்னிறைதருதல்–(தொ. பெ) இறை கொடுத்தல்.
மன்னுதல்–(தொ. பெ) நிலைபெறுதல், 2. சேர்தல்.
மன்னை–அசைச்சொல்.

மா

மா–இடிகதமா, 2. மாமரம், 3. தேமாமரம், 4. சரச்சுவதி, 5. விலங்கின் பொது, 6. குதிரைப்பொது, 7. வலி, 8. கறுப்பு, 9. சீலை, 10. வண்டு, 11. வயல், 12. துகள், 13. அழைப்பு, 14. நஞ்சுக்கொடி.
மா–இலக்குமி, 2. செல்வம், 3. அழகு, 4. வெறுப்பு, 5. மாதா.
மாகதர்–இருங்தேத்துவோர், 2. மகத தேயத்தார்.
மாகதி–திப்பிலி, (ஒரு சரக்கு), 2. முல்லைக்கொடி.
மாகந்தம்–மாமரம்.
மாகம்–மாசிமாதம், 2. மகநாள், 3. ஆகாயம்.
மாகயம்–கௌரிபாடாணம்.
மாகாணம் – தேசம், 2. தாலூகா, 3. நாடு.
மாகாணி–ஒரெண். அது பதினாறிலொன்று.
மாகுலவர்–வேடர்.
மாகேசுவரி–பார்வதி.
மாக்கள்–மனிதர்கள், 2. விலங்குகள்.

மாங்கல்யம்–
மாங்கல்லியம்– } தாலி.
மாங்கன்–ஓர் மீன், 2. ஓரீரல்.
மாங்கிசம்–
மாங்கிஷம்– } மாமிசம்.
மாங்குடி–ஒரூர்.
மாசக்காய்–ஒருமருந்துச் சரக்கு. (இதனை மாச்சக்காயென்பர்).
மாசம்–மாதம்.
மாசனம்–ஓர் லாகரி மருந்து.
மாசி–ஓர் மாதம், 2. மகாளி, 3. புதுவரம்பு, 4. மேகம்.
மாசிகம்–
மாசியம்– } இறக்தோர்க்கு மாசக்தோறுஞ்செய்யுமோர்கடன்.
மாசிப்பத்திரி–ஓர் பூடு.
மாசு–அழுக்கு, 2. குற்றம், 3. மேகம், 4. கருமை, 5. பால்வீதிமண்டலம்.
மாசுணம்–மலைப்பாம்பு, 2. பெரும்பாம்பு.
மாசேனன்–அருகன், 2. திருமால்.
மாசை–பொன்.
மாச்சரியம்–பொறுமை.
மாச்சல்–வருத்தம்.
மாஞ்சி–சடாமாஞ்சில், (ஒரு மருந்து), 2. பெருங்கோரைப்புல், 3. மண்ணீரல்.
மாடகம்–வீணை முறுக்காணி.
மாடம்–உப்பரிகை, 2. வீடு, 3. உழுந்து.
மாடல்–(தொ. பெ) செய்தல்.
மாடன்–முட்டாள், 2. ஓர்பேய்.
மாடி–அரமனை, 2. இக்கட்டு, 3. கோபம், 4. புடவையோரம்.
மாடு–மாட்டின்பொது, 2. இடம், 3. பக்கம், 4. ஒருருபிடைச்சொல்.
மாடு–செல்வம், 2. பொன், 3. அகன்மணி.
மாடை – பொன், 2. அரைவராகனெடைப்பொன்.
மாட்சி–
மாட்சிமை– } மகிமை, 2. அழகு.
மாட்ட – (வி) பூட்ட, 2. அடிக்க, 3. அழைக்க.
மாட்டார்–இயலாதோர்.
மாட்டிவலயான்–பெரிய ஈ.
மாணம் – மாட்சிமை. (அம்–சாரியையென்பர்.)
மாணல்–மாட்சிமை.
மாணவகன் – மாணாக்கன், 2. பிரமசாரி.
மாணவன்–மாணாக்கன்.
மாணவ்வியம்–பிள்ளைத்தன்மை.
மாணாக்கன்–கற்போன்.
மாணி–ஆண்குறி, 2. குறள்வடிவம்.
மாணிக்கம்–நவமணியிலொன்று.
மாணிக்கவாசகர்–திருவாதவூரடிகளுக்கொருபெயர்.
மாண்–பெருமை.
மாண்டேகம்–உபநிடத முப்பத்திரண்டனுளொன்று.
மாதங்கம்–யானை, 2. அரசாட்சி.
மாதங்கர்–சண்டாளர்.
மாதங்கன்–கீழ்மகன், 2. வேடன், 3. அரசமாதுக்கும் வேடனுக்கும் பிறந்து செருப்புத்தைப்போன்.
மாதங்கி–காளி, 2. துர்க்கை.
மாதம்–மாசம், 2. கிராம்பு.
மாதரி–காளி.
மாதர்–பெண்கள், 2. தலைவியர், 3. அழகு, 4. ஆசை.
மாதலி–
மாதுலி– } இந்திரன்சாரதி.
மாதவம் – வசந்தகாலம், 2. வைகாசிமாதம், 3. கள், 4. தவம்.
மாதவன்–வசந்தன், 2. மகாவிஷ்ணு.
மாதவி–தூதிகை, 2. நாடகக்கணிகை, 3. அருச்சுனன் மனைவி, 4. கோவலன் காதல்மாது, 5. குருக்கத்திமரம்.
மாதவிகா–மாதுளஞ்செடி.
மாதா–தாய், 2. பார்வதி.
மாதாமஹன் – தாயைப்பெற்ற பாட்டன்.
மாதி–வட்டமாயோடல்.
மாதிகம்–குதிரைமார்க்கம்.
மாதிரம்–ஆகாயம், 2. திசை, 3. பூமி, 4. மலை, 5. யானை.
மாதிரி–சாயல்.
மாதிரிகை–விதம்.

மாது–பெண், 2. ஓரசைச்சொல்.
மாதுகரம்–, மாதூகரம்– } பிரமசாரிப்பிச்சை.
மாதுரியம்–இனிமை.
மாதுரு–மாதா.
மாதுலன்–தாயுடன்பிறந்த மாமன்.
மாதுலுங்கம்–, மாதுளங்கம்–, மாதுளம்– } மாதளஞ்செடி.
மாதுவம்–கள்.
மாதோ–ஓரசைச்சொல்.
மாத்தியானம்–, மாத்தியான்னம்– } மத்தியானம்
மாத்திரம்–பிரமாணம, 2. தன்மை.
மாத்திரை–குளிகை, 2. அளவு, 3. எழுத்தினளவு, 4. கணம், 5. காலவிரைவு.
மாத்திரைக்கோல்–அளவுகோல்.
மாந்த–(வி) உண்ண, 2. குடிக்க, 3. ஊழ்வினைப்பயனநுபவிக்க.
மாந்தம்–ஒருநோய், (மந்தம்.)
மாந்தன்–ஆண்மகன், 2 மனிதன்.
மாந்தாதா–ஓரரசன்.
மாந்தி–மாமரம், 2. ஓர் கலியாணச்சடங்கு.
மாந்திரியர்–மந்திரவாதிகள்.
மாந்தை–ஒரூர்.
மாபலன்–காற்று.
மாபலி–ஒரு சக்கரவர்த்தி.
மாப்பிள்ளை–மணமகன்.
மாப்பு–மன்னிப்பு, 2. மிகுதி, 3. மீன்நிரள்.
மாமகீன்–அம்மான், 2. பிசுனன்.
மாமடி–மாமன்.
மாமணி–மாணிக்கம்.
மாமன்–தாயுடன்பிறந்தோன், 2. அத்தைகொழுநன்.
மாமாங்கம்–கும்பகோணத்தில் பன்னிரண்டு வருஷத்துக்கொருதரம் நடக்கும் விசேஷ திருவிழா.
மாமி–அம்மான்மகனவி.
மாமிசம்–, மாம்சம்– } தசை.
மாமிலத்து–, மாமலத்து– } பணம் அறுவிடுமுறை.
மாமூலனர்–சங்கப்புலவரு ளொருவர்.
மாமூல்–புராதனவழக்கம்.
மாயை–அழகு, 2. நிறம்.
மாயம்–வஞ்சனை, 2. தந்திரம், 3. பொய், 4. தீமை, 5. அழகு, 6. கறுப்பு.
மாயவரம்–ஒரூர்.
மாயவன்–திருமால், 2. கரியவன்.
மாயாதேவி–புத்தன்றாய்.
மாயாபுரி – சப்தபுரிகளிலொன்று, 2. பித்தளை, 3 பூமாசரீரம்.
மாயாவி–ஓரசுரன்; இவன் வாலியாற் கொல்லப்பட்டவன்.
மாயிலி–ஓர்வகைப் படவு.
மாயுநாடி–பித்தநாடி
மாயூரம்–ஒரூர், 2. மயில்.
மாயேசுவரி – சத்தமாதரி ளொருத்தி, பார்வதி.
மாயை–பொய், 2. மாயாசதுரி, 3. வஞ்சகம், 4. இந்திரசால மூதலியன, 5. இலக்குமி, 6. காளி, 7. இரதி, 8. சத்தபுரியிலொன்று, 9. விந்தியாதத்துவம் ஏழிலொன்று.
மாயையுற்றுள்–காளி.
மாயோன்–திருமால்.
மாய்ச்சல்–சாவருத்தம்.
மாய்ச்சி–பூட்டு விலங்கு.
மாய்தல்–(செ பெ) சாதல், 2 மறைதல்.
மாய்த்தல் – (செ. பெ) கொல்லல், 2. மறைத்தல்.
மாய்மாலம்–மாரீசம்.
மாரகம்–மரணம், 2. மரணம் வருவிக்கிறது, 3. மாரி.
மாரகன்–கொல்வோன்.
மாரசயன்–புத்தன்.
மாரணம்–கொலை, 2. மந்திரத்தாற் கொல்லல்.
மாரன்–காமன்.
மாராட்டம்–ஒரு தேயம்.
மாராயம்–நற்செய்தி, 2. வந்தனம்.
மாரி–மழை, 2. மேகம், 3. நீர், 4. கள்.
மாரி–சாவு, 2. ஓர் ஒட்டுநோய்.
மாரிசா–பெருந்திரைக்கிளர்ச்சி, 2. மாறுபாடு.

மாரிநாள்–உத்திரகாள்.
மாரீசம்–வஞ்சகம்.
மாரீசன்–இராவணன் மாமனான ஓரரக்கன்.
மாருதம்–காற்று, 2. வாயு.
மாருதி–அனுமான், 2. வீமன்.
மார்–மார்பு, 2. இடைச்சொல்.
மார்கழி–ஓர் மாதம், 2. மிருகசீரிடம்.
மார்க்கசிரம்–மார்கழிமாதம்.
மார்க்கணம்–இரப்பு, 2 அம்பு, 3. தேடுகை.
மார்க்கண்டர்– மார்க்கண்டேயர்– } மிருகண்டு முனிவர் புத்திரர்.
மார்க்கம்–வழி, 2. ஒழுக்கம், 3. மார்கழிமாதம், 4. நெடுந்தெரு, 5. ஓர் சூத்திரம்.
மார்ச்சனம்–துடைத்தல்
மார்ச்சனி–விளக்குமாறு.
மார்ச்சனை–முழவொலி, 2 முழவின்வார்.
மார்ச்சாலம்–பூனை.
மார்த்தாண்டன்–சூரியன்
மார்பகம்– மார்பம்– } நெஞ்சு.
மார்பு–நெஞ்சு, 2. அகலம்
மால–(வி) மயங்க.
மாலதி–நிறசண்பகம், 2. மல்லிகை, 3. விளக்குத்தண்டு.
மாலமாய்ம்–பேயின்றன்நிரம்.
மாலம்–குங்குமமரம், 2. பேய்.
மாலயம்–சந்தனம்.
மாலர்–கவசம், 2. வேடர், 3. புலையர்.
மாலவன்–புதன்.
மாலி–ஓரிராக்கதன், 2. மாலையணிந்தோன், 3. கள்.
மாலிகை–மாலை, 2. நிரல்படநிற்குங் குழூஉ.
மாலிங்கம்–இலிங்கபாஷாணம்.
மாலிமி–இளம்பருவத்திற் செய்நட்பு.
மாலியவான்–ஓரரக்கன்.
மாலினி–துர்க்கை.
மாலுகம்–வேப்பமரம்.
மாலுதானம்–கண்குத்திப்பாம்பு.
மாலுமி–கப்பலோட்டி.
மாலூரம்–வில்வமரம்.
மாலை–பூ முதலிய தொடுத்தமாலை, 2. ஓர் பிரபந்தம், 3. ஒழுங்கு, 4. இயல்பு, 5. அந்திப்பொழுது, 6. பெண்.
மாலைக்கண்–மாலைக்காலத்திருட்பிடிக குங்கண்.
மாலைசூட்டு–சுயம்வரம்.
மாலைமாற்று–ஓர் சித்திரகவி.
மாலையணி–ஓரலங்காரம். (முன்வந்த சொல்லைப் பின்னு மறுவகித்து மொழிதல்.)
மாலோன்–திருமால், 2. புதன்.
மால்–பெருமை, 2. மயக்கம், 3. மகாவிஷ்ணு, 4. அருகன், 5 இந்திரன், 6. புதன், 7. சோழன், 8. காற்று, 9. மேகம், 10. கருமை, 11. வேட்கை, 12. கண்ணேணி, 13. சிற்பத்தொழிற் கருவியிலொன்று.
மால்பு–கண்ணேணி.
மாவலர்–குதிரைப்பாகர், 2. யானைப்பாகர்.
மாவிலங்கு– மாவிலங்கை– } ஓர் மரம்.
மாவிளம்–வில்வமரம்.
மாவுத்தன்–யானைப்பாகன், 2. குதிரைப்பாகன்.
மாழாக்க–(வி) மயங்க.
மாழை–பொன், 2. அழகு, 3. நிரட்சி, 4 அறிவின்மை, 5. உலோகக்கட்டி, 6 ஓலை, 7. மாமரம், 8. புளிமாமரம்.
மாழ்கு–மிருகசீரிடம்.
மாழ்குதல்–(தொ. பெ) மயங்குதல்.
மாள–ஓர் முன்னிலை அசை.
மாள–(வி) அழிய, 2. ஒழிய, 3. இயல.
மாளயம் – புரட்டாசிமாதத்திற் பண்ணும் பொதுச்சிரார்த்தம்.
மாளவம்–தேய்மைம்பத்தாறி னொன்று.
மாளவி–ஓரிராகம்.
மாளிகை–அரசன்மனை, 2. வீடு.
மாறன்–பாண்டியன், 2. சடகோபாழ்வார்.
மாறுட–(வி) புரட்ட, 2. தடுமாற.
மாறுட்டம்–மாறுபாடு.

மாறு–துடைப்பம், 2. மிலாறு, 3. வேறு, 4. பகை, 5. கைம்மாறு
மாறுகண்–ஓரக்கண்.
மாறுகம்–சீலை
மாறுகோள் – விரோதம், 2. ஒவ்வாமை.
மாற்சரியம்–பொறாமை, (இஃது உட்பகையாறினொன்று.)
மாற்ற–(வி) வேறுபடுத்த, 2. சமமைப்படுத்த, 3. நீக்க, 4. கலைக்க, 5. நீங்கு க்க, 6. நிக்கிரகிக்க, 7 பணமாற்ற, 8 சாமதிக்க.
மாற்றம்–சொல், 2. பகை, 3. வேறுமை.
மாற்றலர்–பகைவர்.
மாற்றவள்–சக்களத்தி
மாற்றன்–பகைவன்.
மாற்று–உபசாந்தம, 2. மாறுதல், 3. பொன்வெள்ளிகளின் மாற்று
மான–உவமைச்சொல, 2 முன்னிலை பசைச்சொல், 3 ஓர் வினையெச்சம்.
மானசம் – மானதம்; அது மனத்தாற் செய்வது, 2. மானசவாவி மானமடு எனவுங் கூறுவர்
மானதம்–மானசம்
மானதீபம்–உபநிடத முப்பத்திரண்டி லொன்று
மானத்தாழ்ச்சி–மானகேடு.
மானவம்–உபபுராணத்தொன்று.
மானவர்–மனிதர், 2. மானமுள்ளவர்.
மாநகம்–பெருநாரை
மாந்தர்–பெண்கள், 2. பகைவர்
மானிக்க–(வி) மதிக்க.
மானிடம்–
மானுடம்–
மானுஷம்– } மனுஷப்பிறப்பு.
மானியம் – அரசர்கள் சம்மானமாக விட்ட நிலம்.
மானினி–பெண்.
மானுதல்–(தொ. பெ) ஒத்தல்.
மான்–ஓர் மிருகம், 2. உருவம், 3. குதிரை, 4. மகராசி, 5. மகரமீன், 6. விலங்கின்பொது.
மான்மகன்–பிரமன், 2. மன்மதன்.
மான்மதம்–கத்தூரி.
மான்மியம்–மகிமை.
மான்றலை–மிருகசீரிடம்.
மான்றல்–(தொ பெ) மயங்கல்.

மி

மிக–(வி) அதிகரிக்க
மிகுக்க–(வி) அதிகப்படுத்த, 2. உயர்த்த, 3. பெருக.
மிகுதம்– } அதிகம், 2. மீதி, 3. திரட்சி,
மிகுதி– } 4 பூரிப்பு, 5. பொலிவு.
மிஞ்கை–மிகுதி, 2 துன்பம், 3. கேடு, 4. வருத்தம், 5 குற்றம்.
மிக்கவன்–
மிக்கான்– } உயர்ந்தோன்
மிக்கிளமை–கட்டினமை.
மிக்கோர்–அறிஞர்.
மிசிரம்–கலப்பு.
மிசுக்கன்–ஈனன், 2 தரித்திரன்.
மிசுக்கை–அற்பத்தனம்.
மிஞ்சை–உயர்ச்சி, 2 மேடு, 3 தரித்திரம, 4. சோறு, 5 மேல்.
மிஞ்சைய–(வி) உண்ண.
மிஞ்சைவடம்–வீரதண்டை
மிச்சம்–மீதி.
மிச்சிரம்–கலப்பு.
மிச்சில்–எச்சில், 2. ஒழிபொருள்.
மிச்சை–பொய், 2. அஞ்ஞானம், 3. தரித்திரம்.
மிஞிறு–வண்டு.
மிஞ்ச–(வி) மிக, 2. பெருமைகொள்ள.
மிஞ்சி–காலணியிலொன்று.
மிடல்–வலி.
மிடறு–தொண்டை, 2. கழுத்து, 3. கீழ்வாய்.
மிடா–குழிசி, 2. பாண.
மிடி–தரித்திரம்.
மிடிக்க–(வி) வறுமையுற.
மிடிமை–வறுமை.
மிடியன்–தரித்திரன்.
மிடுக்கு–வலி.
மிடை–தூறு.
மிடைய–(வி) நெருக்க.
மிட்டா–சுதந்திரம்.

மிட்டாயி–பலகாரம்.
மிணுமிணுத்தல்– } ஒசொலிக் குறிப்பு.
மிணுமிணுப்பு– }
மிண்ட–(வி) நெருங்க, 2. தள்ள.
மிண்டி–கிளப்புமோர்கருவி.
மிண்டு–மதத்தாற்செய்பிழை.
மிதக்க–(வி) மேலெழும்ப, 2. மட்டு மிஞ்ச, 3. மேலாக, 4 வெறும் பெருமைபண்ண.
மிதம்–அளவு.
மிதவல–கொப்பூழ்.
மிதவை–தெப்பம், 2. சோறு.
மிதி–நெய்வார்கருவியிலொன்று, 2. ஞானம்.
மிதிக்க – (வி) காலான்மிதிக்க, 2. சூதிக்க
மிதியடி–பாதகுறடு
மிதிவல–சனகாகர்.
மிதுக்கை–ஓர் கொடி.
மிதுனம்–மிதுனவிராசி, 2 இரட்டை.
மித்தியம்– } பொய்
மித்தியை– }
மித்திரம்–நட்பு.
மித்திரன்–சினேகிதன், 2 சூரியன்
மித்திரை–தோழி.
மித்துரு–சினேகன்
மித்தை–பொய்
மியா–முன்னிலையசைச்சொல், (உ–ம்.) கேண்மியா.
மிரட்ட–(வி) பயமுறுத்த, 2. மயக்க.
மிரதம்–பாம்பு.
மிரளுதல்–(தொ. பெ) பயப்படுதல்.
மிராசி– } உரிமை.
மிராசு– }
மிரிகை–முறுக்காணி.
மிரியல்–மிளகு.
மிருகசீரிடம்–ஓர் நட்சத்திரம்.
மிருகண்டன்– } ஓரிருடி.
மிருகண்டு– }
மிருகதரன்–சந்திரன்.
மிருகதூர்த்தகன்–நரி.
மிருகநாபி – கஸ்தூரி, 2. கஸ்தூரிப் பூனை.
மிருகராசன்–சிங்கம்.
மிருகாங்கன்–சிவன், 2. சந்திரன்.
மிருகாரி–சிங்கம், 2. புலி, 3. நாய்.
மிருகேந்திரன்–சிங்கம்.
மிருசம்–காட்சி.
மிருடங்கணம்–பிள்ளை
மிருடன்–சிவன்.
மிருடாலகம்– } ஆமரம்.
மிருஷாலகம்– }
மிருடோத்தயம்–பொய்.
மிருத்தகம்–பிரேதம.
மிருதங்கம்–முழவு.
மிருதம்–மரணம், 2. பாஷாணம் முபபத்திரண்டிலொன்று, 3. போர்.
மிருதாண்டன்–சூரியன்.
மிருதாரசிங்கி – சிங்கிபாஷாணம், 2. ரயம், 3. ஓர் பூடு.
மிருதி–சருமநூல், 2. நினைப்பு, 3. மரணம்.
மிருது–மென்மை, 2. சாந்தம்.
மிருதுன்னகம்–பொன்
மிரூதை–பூமி.
மிருத்தஞ்சயன்– } சிவன்.
மிருத்தியுஞ்சயன்– }
மிருத்திகை–மண்.
மிருத்தியு–இயமன்.
மிருத்து–மண், 2. மரணம.
மிருநாளம்–தாமரைகொடி.
மிலாரடி–மயக்கம்.
மிலாறு–வளார்.
மிலேச்சம்–சரசுவதியாற்றின் வடதேசம்.
மிலேச்சன்–அறிவீனன், 2 மிலேச்ச தேசத்தோன்.
மிவலச்ச–(வி) அணிய.
மிவலய–(வி) அணிய, 2. சூட.
மிழலை–நிரம்பாமென்சொல்.
மிழற்ற–(வி) மென்மையாய்ச்சொல்ல.
மிளகாய்–ஓர் செடி.
மிளகு – ஓர் சரக்கு, உறைப்புச்சுவையுடையது
மிளகுசம்பா–ஓர் நெல்.
மிளிர–(வி) பெருமைப்பட, 2. ஒளி செய்ய.
மிளிர்–பெருமை, 2. ஒளி.

மிளிறு–கரடி.
மிறல்–பெருமை.
மிறை – அச்சம், 2. குற்றம், 3. வருத்தம்.
மிறைக்க – (வி) துன்பப்பட, 2. துன் பஞ்செய்ய.
மினக்கெட–(வி) தடைபட
மினவ–(வி) உபசரிக்க.
மினுக்க–(வி) விளக்க.
மினுக்கம்– } ஒளி, 2. பகட்டு
மினுக்கு– }
மினுங்க–(வி) பிரகாசிக்க.
மின் – மின்னல், 2. ஒளி, 3. பெண் மகள்.
மின்ன–(வி) ஒளிசெய்ய
மின்னல்–மின்.
மின்னர்–பெண்கள்.
மின்னி–நீர்ப்பயறு.
மின்னுதல்–(தொ. பெ) பிரகாசித்தல்

மீ

மீ – மேல், 2. மேற்புறம், 3. உயர்ச்சி, 4. மகிமை.
மீகாமன்– } மாலுமி.
மீகான்– }
மீக்குவம்–மருதமரம்
மீக்கூர்தல்–(தொ. பெ) மிகப்பெருகுதல்.
மீக்கூறு– } புகழ்.
மீக்கூற்று– }
மீக்கோள்–மேற்போ்வை.
மீசரம்– } மேலானது, 2. விரைவு.
மீசுரம்– }
மீசு–மிகுதி.
மீசை – மேலுதட்டின்மேலுள்ள ரோம வரிசை.
மீட்ட–(வி) விரலாலெடிக்க, 2. வீணை வாசிக்க, 3. நாணேற்றியீர்க்க.
மீட்டும்–திரும்பவும்.
மீதி–மிகுந்தது.
மீது–மேல், 2. அதிகம்.
மீதுரை–பல்கால் விளம்பல்.
மீதூர–(வி) பெருங்க.
மீந்திருக்க–(வி) மிஞ்சியிருக்க.
மீமாஞ்சை–பிரமாணத்தாலுண்மையறிதல், 2. புறச்சமயமாறிஞென்று.
மீமிசை–மேல்.
மீள–(வி) இரட்சிக்கப்பட, 2. திரும்ப.
மீளி–அரசன், 2. திண்ணியன், 3. பாலை நிலத்தலைவன், 4. மேன்மக்கள், 5. பெருமை, 6. வலி.
மீற–(வி) கடக்க, 2. அதிகரிக்க, 3. மீந்திருக்க.
மீனக்கோடியோன்– } மன்மதன், 2. பாண்டியன்.
மீனகேதனன்– }
மீனமாதம்–பங்குனி.
மீனம்–மீன், 2. ஓரிராசி.
மீனம்பர்–ஓர் மருந்து; இது கடலினுண்டாகுஞ் செம்மீன் வைரமென்பர்.
மீனவன்–பாண்டியன்.
மீனுட்சி – மதுரையங்கண்ணியம்மை, 2. பொன்னுங்காணிக்கீரை.
மீனும்பூச்சி–மின்மினிப்பூச்சி.
